
மஞ்சரி
ஜய - ஆவணி
AUG. '54
6
அணா

# கடவுளின் பிம்பம்

பிரபஞ்சத்திலுள்ள அழகுகள், அது கடவுளுடைய பிம்பம் என்பதைக் காண்பிக்கின்றன; குறைகளோ, அது வெறும் பிம்பமே என்பதைக் காண்பிக்கின்றன.

—பாஸ்கல்


## மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர்: என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர்: தி. ஜ. ரங்கநாதன்

பாவை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன்
கா. ஸ்ரீ. ஸ்ரீ.
த. நா. ஸேனபதி
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி
கௌரி அம்மாள்
கி. தாமோதரன்
கி. சாவித்திரி அம்மாள்
சீதா தேவி
'ஆர்வி'
மோ. ஸ்ரீ. செல்லம்

ஓவியர்கள்: ஸாமி, மகான், சுசி, சுப்பு.

மஞ்சரி, தபால் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை 4. பிரதி மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அணா. வருஷ சந்தா ரூ. 4/8. கலைமகள் சந்தாதார்களுக்கு மட்டும் ரூ. 4/-. சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புக. விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள்.


மஞ்சரியிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 7] ஸ்தாபிதம்: நவம்பர்' 47 : : ஆகஸ்ட் 1954 [இதழ் 8

மஞ்சரி
மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

# ஊரும் உலகமும்

★

இந்தோ-சீனுவில் போரை நிறுத்துவதற்கென்று கூடிய ஜெனிவா மகாநாடு வெற்றி பெற்றது உலகத்துக்கே மகிழ்ச்சி தரும் செய்தியாகும். ருஷியா, கம்யூனிஸ்ட் சீனு இவைகளும், போரில் நேரே சம்பந்தப்பட்ட பிரான்ஸ், வியட்மின், வியட்நாம், லாவோஸ், கம்போடியா இவைகளும் அதில் கலந்துகொண்டன. அமெரிக்கா முதலில் கலந்துகொள்ளச் சம்மதிக்கவில்லை; கம்யூனிஸ்ட் சீனப் பிரதம மந்திரி சூ-என்-லாய் வற்புறுத்தி வேண்டியதன் மேல் கலந்துகொண்டது. ஜெனிவா மகாநாட்டின் பலன் இதுதான்: இந்தோ-சீனு நாடுகள் போர் நிறுத்த ஒப்பந்தங்கள் செய்துகொண்டன; கம்யூனிஸ்ட் வியட்-மின் பிடித்த இடம் அதன் வசம் இருக்கும்; ஆறு மாத காலத்தில் எதிர்க்கட்சிப் படைகள் தம் தம் பிரதேசத்துக்குத் திரும்பிவிடும்; இரண்டு வருஷத்துக்குள் இந்தோ-சீனு முழுவதையும் ஒன்றுபடுத்தக் கூடிய முறையில் தேர்தல் நடக்கும்; அதை இந்தியாவின் தலைமையில் சர்வதேசக் கமிஷன் ஒன்று மேற்பார்வை செய்யும். இந்தப் போர் நிறுத்த ஏற்பாடுபற்றி ஜெனிவா மகாநாடு வெளியிட்ட அறிக்கையில் அமெரிக்கா கையெழுத்திடவில்லை. ஆயினும் அது இதற்கு ஊறு செய்வதில்லை என்று அறிவித்திருக்கிறது. ஜெனிவா மகாநாடு வெற்றி பெற்றதற்கு, இந்திய தூதர் கிருஷ்ண மேனனின் பூர்வாங்க முயற்சிகளும் பிரெஞ்சுப் பிரதம மந்திரி மெண்டெஸ்-பிரான்ஸின் தீரமனோபாவமுமே பெரிதும் காரணங்களாகும். சமாதானத் திசையில் உலகம் ஓர் அடி முன்னே எடுத்துவைத்திருக்கிறது என்று இதை நாம் மதித்துக் களிக்கலாம்.

*   *   *

இந்தியாவில் பிரெஞ்சுத் திட்டுக்களில் ஒன்றான மாஹே விடுதலை அடைந்துவிட்டது. ஏனம் ஏற்கனவே விடுதலை அடைந்தது. சந்திரநாகூர் முந்தியே இந்திய யூனியனில் சேர்ந்திருக்கிறது. புதுச்சேரியும் காரைக்காலுந்தான் இன்னும் பாக்கி. இவைபற்றி இனி இந்தியாவுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தப் பிரெஞ்சுப் பிரதம மந்திரி மெண்டெஸ் - பிரான்ஸ் மனங் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. ஒரு

மாதத்துக்கு முன்புதான் அவர் பதவி யேற்ருர். "ஜுலை 20-ஆம் தேதிக்குள் இந்தோ-சீனவில் சமரசம் காணுவிட்டால், என் பதவியை விட்டு விலகிவிடுகிறேன்" என்று அப்போது அவர் சபதம் பூண்டார். அப்படியே ஜுலை 20-இல் அவர் வெற்றி பெற்ருர். விரிந்த மனேபாவத்தோடு வெளி நாட்டு விவகாரங்களை அவர் கவனிப்பதாக இதனுல் ருசுவாகிவிட்டது. இந்தியாவில் உள்ள பிரெஞ்சுத் திட்டுக்கள்பற்றிய விஷயம் பிரான்ஸ் சம்பந்தப்பட்ட மட்டில் மிகச் சிறு பிரச்னையே. இந்தத் திட்டுக்களால் பிரான்ஸுக்கு லாபமில்லை; அதற்கு இவை பெருஞ் சுமையே. தவிர, மிஞ்சியவையோ இன்னும் இரண்டே திட்டுக்கள். இவைகளை விட்டு விரைவாய் மரியாதையாக வெளியேறிவிட, மெண்டஸ்-பிரான்ஸ் வழி கண்டு பிடிப்பார் என்று நாம் நம்புவோம்.

* * *

நாலைந்து வாரங்களுக்கு முன், கம்யூனிஸ்ட் சீனப் பிரதம மந்திரி சூ-என்-லாய் இந்தியாவுக்கு வந்து, நேருவைச் சந்தித்துப் பேசினுர். இதே சமயத்தில் பிரிட்டிஷ் பிரதம மந்திரி சர்ச்சில் அமெரிக்காவுக்குப் போய், ஜனதிபதி ஐஸன்ஹோவரைச் சந்தித்துப் பேசினுர். கம்யூனிஸ்ட் நாடுகளானுல் என்ன; மற்ற நாடுகளானுல் என்ன? தாமும் சுதந்தரமாய் வாழலாம்; மற்றவரையும் சுதந்தரமாய் வாழவிடலாம். இந்த மனேபாவத்தோடு ஒன்றை ஒன்று மதித்துச் சமாதானமாக உலக நாடுகள் வாழ்வதற்கான சில கொள்கைகளை நேருவும் சூ-என்-லாயும் கூட்டறிக்கை ஒன்றில் வெளியிட்டார்கள். சர்ச்சில்-ஐக் சந்திப்பில் நடந்தது என்ன? உலகப் போர் மூண்டால், அணுக்குண்டு தங்கள் தலையில்தானே முதலில் விழும் என்பது பிரிட்டனின் பயம். ஹைட்ரஜன் குண்டு பற்றிய ரகசியங்களைத் தங்களுக்கு அமெரிக்கா தெரிவிக்கவில்லையே என்று சர்ச்சில் கவலை கொண்டார். "ஓ! அதற்கென்ன? இப்போதே ஓரளவு தெரிவித்திருக்கிருேம். இதற்குமேல் தெரிவிக்க எங்கள் சட்டத்தில் இப்போது இடமில்லை. சட்டத்தைத் திருத்தப் போகிருேம். அதற்குப் பிறகு மேலும் கொஞ்சம் தெரிவிக்கிருேம்" என்பதாக, சர்ச்சிலுக்கு ஐக் ஆறுதல் கூறினுராம். தவிர, தென்கிழக்கு ஆசிய நாடுகளின் தற்காப்புக்காக ஓர் அமைப்பை நிறுவத் தாங்கள் கொண்டுள்ள உத்தேசத்தைச் சர்ச்சிலும் ஐக்கும் ஊர்ஜிதம் செய்து அறிக்கை ஒன்றும் வெளியிட்டார்கள். பிரிட்டனுக்கு யுத்த விருப்பமில்லை. ஆனுல், அதை அமெரிக்கா இறக்கிக்கொண்டிருக்கிறது. ஆசியா முற்றும் சமாதானத்தையே விரும்புகிறது. இந்த உண்மைகளைத்தான் இந்த இரண்டு சந்திப்புக்களும் வலியுறுத்துகின்றன.

---

**சண்டையும் சமாதானமும்**

சகல யுத்தங்களுமே முட்டாள்தனமானவை; வீண் செலவுக்குக் காரணமானவை; மிகவும் தீமை விளைவிப்பவை. என் அபிப்பிராயம் இதுதான்: யுத்தத்தில் நல்லதுமில்லை; சமாதானத்தில் கெட்டதுமில்லை. —பென் ஃப்ராங்க்ளின்

தமிழ் நாட்டின் தேசிய விழா பொங்கல். அதே மாதிரி அஸ்ஸாமியருக்குரிய விழா ஒன்று உண்டு. அதுதான்—

# 'பிஹூ' பண்டிகை

மோகன்சந்த் போரா

இளவேனில் வரும்போது இயற்கை வளம் மிகுந்து மரங்களில் எல்லாம் மலர்களும் இளந் தளிர்களும் காட்சி அளிக்கின்றன; மலையிலும் மடுவிலும் புதிய பசுமை திகழ்கிறது; எங்கும் வண்ணப் பொலிவும் மகிழ்ச்சியும் நிரம்பியுள்ளன. வைசாக மாதத்தின் (நம் சித்திரையின்) முதல் வாரத்தில் அஸ்ஸாம் மக்கள் 'ரங்கலி பிஹூ' என்ற பிரபல பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள். அப்போது வேடிக்கையும் தமாஷூம் நிறைந்திருக்கும். அறுவடைக்குப் பின்னும், விதைப்பாடு முடிந்த கையோடும் இதே மாதிரி பண்டிகைகள் நடைபெறும்.

பிஹூ பண்டிகைக்கு இரண்டொரு வாரத்துக்கு முன்பே ஒவ்வொரு குடும்பத்திலும் அதற்கு வேண்டிய ஏற்பாடெல்லாம் செய்யத் தொடங்கிவிடுவார்கள். பெண்கள் கைத்தறியில் சிறு துவாலைகள் நெய்து குடும்பத்திலுள்ளவர்களுக்கும் மற்ற நெருங்கிய உறவினர்களுக்கும் அளிப்பார்கள். மாடுகன்றுகளைக் கட்டத் தாழை நார், சணல் இவைகளைக் கொண்டு புதிய கயிறுகளைத் திரித்துவைப்பார்கள் ஆண்மக்கள்.

பிஹூ பண்டிகையன்று காலை கிராமங்களில் போய்ப் பார்க்க வேண்டும். ஒவ்வொரு வீட்டையும் முற்றம் உட்பட நன்றாகக் கழுவி வைத்திருப்பார்கள். மாட்டுக் கொட்டிலையும் சுத்தமாக்கியிருப்பார்கள். சிறுவர்களும் சிறுமியரும், வாலிபர்களும் வயோதிகர்களும் பசுவுக்குப் பயற்றம் பருப்புப் பொடி பூசி, மஞ்சள் நீர் தெளித்து, கடுகெண்ணெய் தேய்த்துவிடுகிறார்கள். அப்புறம் அருகிலுள்ள ஆற்றுக்கோ குளத்துக்கோ குளிப்பாட்ட அவைகளை அழைத்துச் செல்லுவார்கள். தண்ணீர்விட்டு நன்றாகக் கழுவின பிறகு மஞ்சள் கிழங்கு, கத்தரிக்காய், பரங்கிக்காயத் துண்டு இவைகளைப் பசுக்களின் எதிரில் போடுவார்கள். அப்போது,

"பரங்கித் துண்டையும்
கத்தரிக் காயையும்
பாங்காய்த் தின்றே
வளர்ந்திடுவீர்!
உரங்குன் றுதவும்
பெற்றோர் போலே
உயர்ந்தும் பருத்தும்
வாழ்ந்திடுவீர்!"

என்று அவர்கள் பாடுவது வழக்கம்.

எங்கும் இந்துக்கள் பசுவைத் தெய்வமாகப் போற்றுபவர்கள் என்பது தெரிந்த விஷயந்தானே? அஸ்ஸாமியக் குடியானவர்களும் பிஹூ பண்டிகையின் முதல் நாளில் பசுவைத் தொழுவார்கள். புதுக் கயிறு கட்டி, புதுச் சாட்டை தயாரிப்பார்கள். (இது அநாவசியந்தான்; அன்றைக்கு எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று அவைகளுக்கே தெரியும்!) பிறகு வழக்கம் போல் பசுவின் க்ஷேமத்

காப்பிரைட்: இந்தியன் ரெவ்யூ (ஆங்கிலம்: ஜூலை '54), சென்னை.

துக்காகச் செய்யவேண்டிய சடங்குகளையெல்லாம் செய்வார்கள்.

இரண்டாம் நாள் குருபூஜை நடக்கும். ஒவ்வொரு பஜனைக் கூடத்திலும் நாமசங்கீர்த்தனம் நடைபெறும். சில இடங்களில் தனிப்பட்டவர்களும் இப்படிப் பஜனை செய்வார்கள்; வேறு சில இடங்களில் ஊர் முழுதும் சேர்ந்தும் இதை நடத்துவார்கள்.

மூன்றும் நாள் பொதுவாக, "உலகமே சுகமாக இருக்க வேண்டும்; எங்கும் அமைதி நிலவவேண்டும்; நன்றாக அறுவடையாக வேண்டும்" என்று பிரார்த்திப்பார்கள். மீதி நாலு நாளும் அப்படி ஒன்றும் விசேஷமாக எதுவும் நடைபெறுவதில்லை. இருந்தாலும் வழக்கம்போல் கொண்டாட்டமாகத்தான் இருக்கும். இத்தனை நாள் அன்றாட வாழ்க்கையில் அடிபட்டுவிட்டு இந்தக் கொஞ்ச நாள் நிம்மதியாகப் பொழுது போக்குகிறார்கள். ஆட்டம் பாட்டங்களிலெல்லாம் ஜோராகக் கலந்து கொள்கிறார்கள்.

மாமரத்தில் படர்ந்த ஒரு வகைக் கொடியில் புறா வடிவாக அமைந்த மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன. பிஹு விழா சம்பந்தமான பாட்டுக்களில் இந்த மலரைப்பற்றிய வர்ணனையைக் காணலாம். கிராமத்து அழகிகள் எப்போதுமே இதைத் தலையில் வைத்துக்கொண்டிருக்க ஆசைப்படுவார்கள். மாமரங்களில் குயில்கள் இளவேனிற்பருவ விருந்தினராக வந்து தங்கிப் பாடிக் களிக்கின்றன. நள்ளிரவில் எங்கோ உயரத்தில் வானம்பாடி உருக்கமாகக் கூவுவது கேட்கிறது. பிரிந்து வாடும் இளங் காதலர்களின் உணர்ச்சியை அது தூண்டி, அவர்களுடைய துயரை மிகுதியாக்குகிறது. ஊர் பேர் தெரியாத யாரோ கிராமக் கவிகள் இந்த மாதிரி காட்சிகளை வருணிக்கும் அருமையான பாடல்களைப் பாடியிருக்கிறார்கள்; பிஹு பண்டிகையின்போது இவைகளைப் பாடுவது வழக்கம்:

"வயலில் இருக்கப் பிடிக்கவில்லை;
மனமும் இல்லை வீடு செல்ல;
புயல்மேகம் போல் பறந்தேநான்
பரிவுடன், கண்ணே, உனை
[அடைவேன்."

"மேன்மையான மணிக்கட்டில்
வளையல்தன்னை அணிந்துள்
[ளாள்;
சின்னஞ்சிறிய இடையினிலே
திகழும் மேகலை அழகுடனே;
கன்னங்கறிய குழற்கற்றை
துலுங்கித் தோளை அணைத்
[திடவே
மின்னற் கொடிபோல் தோன்று
[கிறள்;
என்றன் அருமைக்
[கண்ணாட்டி."

"உன்னை அடைய வேலியினை
உவகையோடு தாண்டுகையில்
என்றன் காலில் முள் குத்தி
இன்னும் வருத்தி வருகிறதே;
என்ன நேர்ந்தும் அஞ்சேன்நான்
இருவர் உள்ளமும் இழைந்
[திடும்போ
தென்ன செய்யும் எங்களையே
இந்த ஜாதித் தடைகள்தான்."

வாலிபர்களும் இளம் பெண்களும் வயல் வெளியில் போய்ப் பண்டிகையில் கலந்துகொள்வார்கள். மேளதாளம் முழங்க எல்லாரும் சேர்ந்து ஆடிப் பாடுவார்கள்:

"உலகம் முழுவதும் களியாட்டம்
நிலம்நீர் எங்கே பார்த்தாலும்
பொலிவும் மகிழ்வும் பூரிப்பும்
நிலவி நிற்பதைப் பாரீரே!"

இந்தச் சமயத்தில் எல்லாருமே சோழி விளையாடிப் பொழுது போக்குவார்கள். ஆறு சோழிகளை வைத்துக்கொண்டு நாலுபேர் முதல் 20 பேர்வரை இதில் கலந்துகொள்வார்கள். ஆண்கள் பெண்கள், வாலிபர்கள், வயசானவர்கள் எல்லாருமே இப்படிச் சோழி விளையாடுவார்கள்.

பிஹூ பண்டிகையின் இரண்டாம் நாள் இரவு வாலிபர்கள் பல வித வாத்தியங்களோடு 'ஹூசாரி' என்ற பஜனைப் பாடல்களைப் பாடிக்கொண்டே வீடு வீடாகப் போய் வருவார்கள். இவை ஸ்ரீ சங்கர தேவர், மாதவ தேவர் முதலிய அஸ்ஸாமிய வைஷ்ணவ கவிகள் பாடிய பாசுரங்கள். பஜனைக் கோஷ்டியைப் பக்தி சிரத்தையோடு ஒவ்வொரு வீட்டிலும் வரவேற்றுத் தட்டு நிறைய வெற்றிலை வைத்து மரியாதை செய்தனுப்புவார்கள்.

இளவேனில் காலத்தில் அங்கே புயல்காற்று வீசும். இதற்குரிய அதிதேவதையின் பெயர் 'பார்தாய் சில்லா.' அஸ்ஸாம் நாட்டைத் தாயாகவும் இவளை அவளுடைய பெண்ணாகவும் பாவித்துவருகிறார்கள். இவளும் மற்றப் பெண்களைப் போல் இந்தப் பண்டிகையின் போது புக்ககத்திலிருந்து பிறந்த வீட்டுக்கு வந்து தங்கியிருப்பதாக ஐதிகம். ஆனால் இவள் திரும்பிப் போவதற்குள் தன் தாயாரை அலங்கோலப் படுத்திவிட்டுப் போய் விடுகிறாள்; மற்றப் பெண்களுக்கும் இவளுக்கும் இதுதான் வித்தியாசம். சீக்கிரமாகப் புறப்பட்டுப் போய்விட வேண்டியிருக்கிறதே என்றுதான் இவளுக்கு இவ்வளவு கோபம்!

'பிஹூ' பண்டிகையின்போது யாரைப் பார்த்தும் கடுமையாகப் பேசவோ திட்டவோ கூடாது. பழைய விரோதம், பொறாமை எல்லாவற்றையும் விட்டுவிட வேண்டும். இழிவான எந்தக் காரியமும் செய்யக்கூடாது. பரஸ்பர நட்பு, அநுதாபம் இந்தமாதிரி நல்ல குணங்களை வளர்க்க வேண்டும். 'பிஹூ' என்ற சொல் 'விஷூவத்' என்ற சம்ஸ்கிருத மொழியின் திரிபு என்பார்கள். இருந்தாலும், ஆதிகாலத்தில் ஆரியரல்லாத பழங்குடிகள் இதைக் கொண்டாடி வந்ததாகத் தெரிகிறது. பண்டித நேரு தாம் எழுதிய ஒரு புத்தகத்தில், "பழைய சீனுவைப் போல் ஒரு காலத்தில் இந்தியாவும் தனிச் சிறப்புடன் விளங்கியது. கலாசாரமும் நாகரிகமும் அதில் மலிந்திருந்தன. வெவ்வேறு நாடுகளோடு பழகி வந்ததால் அந்த நாடுகளின் கலாசாரங்களும் நாகரிகமும் அதில் கலந்தன" என்கிறார். அஸ்ஸாம் இப்படிப் பல கலாசாரங்களும் இணைந்த நாடுதான். பல இனத்தைச் சேர்ந்தவர்கள், இங்கே கூடிப் பழகி ஓர் இனமக்களாகிவிட்டார்கள்.

அஹோம் அரச பரம்பரையினர் சுமார் 600 ஆண்டுகளுக்கு மேல் அஸ்ஸாமை ஆண்டு வந்தார்கள். அவர்கள் இந்த மாதிரி பண்டிகைகளை எல்லாம் ஆதரித்து வந்தார்கள். ரங்கபுர் என்ற ஊர் அப்போது தலைநகரமாக இருந்தது. அங்கே இந்தப் பண்டிகையை இளவேனிலின்போது தடபுடலாகக் கொண்டாடி வந்தார்கள்.

ராஜ - மைதானத்தில் இந்த ஏழு நாளும் விதம்விதமான பாட்

டுக் கச்சேரிகளும் கூத்தும் நடத்த ஏற்பாடு செய்வது வழக்கம்.

இதற்கென்றே அமைத்தது 'ரங்க கர்' என்ற இரண்டடுக்கு மாளிகை. அங்கே அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் மற்றப் பிரமுகர்களும் தங்கள் அந்தஸ்துக்குரிய இடத்திலமர்ந்து வேடிக்கை விளையாட்டுக்களைக் கண்டு களிப்பார்கள்.

அந்தக் காலத்தில் காஜேவ் என்ற பறவைகளைப் பறக்கவிடுவார்கள்; கூட்டில் அடைத்திருக்கும் சில வல்லூறுகளைப் பின்னுலே திறந்துவிட்டு அவைகளைத் துரத்திச் செல்ல ஏவுவார்கள். இந்தப் பறவைகளை வளர்த்துப் பாதுகாப்பதற்கென்றே தனிச் சிப்பந்திகள் உண்டு. மைதானத்தில் எல்லாரும் கூடியிருக்கும்போது இப்படிப் பறக்க விடுவது வழக்கம். உயரத்தில் இந்தப் பறவைகள் ஒன்றையொன்று தாக்குவதைக் கீழேயிருந்து எல்லாரும் கண்கொட்டாமல் கவனிப்பார்கள். கடைசியில் வல்லூறுகள் தாங்கள் கொன்ற காஜேவ் பறவைகளைக் காலில் இடுக்கிக்கொண்டு தங்களை வளர்ப்பவர்களிடம் வந்து சேரும். அவர்களுக்கு அப்போது நல்ல பெயரும் உத்தியோக உயர்வும் கிடைக்கும். சில சமயம் வல்லூறுகள் இப்படிக் கிடைத்த இரையோடு திரும்பாமல் எங்கேயாவது ஓடிப் போய் விடுவதும் உண்டு. அப்போது வேடிக்கை பார்க்க வந்தவர்களெல்லாம் கைகொட்டி இவர்களை ஏளனம் செய்வார்கள்.

இந்த நாளில் அப்படி விமரிசையாக இதைக் கொண்டாடுவதில்லை. பழைய அழகும் கவர்ச்சியும் இல்லை. காலம் மாறிவிட்டது; நாகரிகம் முற்றிவிட்டது. இருந்தாலும் 'பிஹு' பண்டிகை என்ருல் அஸ்ஸாமியர் எல்லாருக்குமே ஒருவித மகிழ்ச்சி ஏற்படத்தான் ஏற்படும்.

## இந்தியா-கொரியர்களின் புண்ணிய பூமி

புராதன காலத்தில் கொரியாக்காரர்கள் வெகு தூரம் க்ஷேத்திர யாத்திரை செய்திருக்கிருர்கள். புத்த மதம் என்பது, கொரியாக்காரருக்கு அந்நிய மதம்; அந்நிய சின்னங்களைக் கொண்டது. அது கடைசியில் அவர்களுடைய சொந்த மதமே ஆகிவிட்டது. புத்த மதம் தோன்றிய நாட்டுக்குப் போய்ப் பார்த்துவர அவர்கள் ஆசை நிறைந்திருந்தார்கள். ஆகவே, ஏழாம் நூற்றுண்டு மத்தியில் இந்தியாவின் புனித ஆலயங்களுக்கும் விஹாரங்களுக்கும் விஜயம் செய்த யாத்திரிகர்களுள் ஹாயீ, ஸுங்ஜு, ஹையோடாய் என்ற கொரியாக்காரர் பெயர்கள் தென்படுகின்றன.

—'ஓரியெண்ட் டைஜெஸ்ட்', டோக்கியோ.

## தப்பும் வழி

வானமே இடிந்து விழுந்தாலும் தப்பித்துக்கொள்ள ஒரு மார்க்கம் இல்லாமற் போகாது.

—கொரியா பழமொழி

# ஆசியாவின் மதம்

*ராஜாஜி*



**உலகப் பிரசித்தி பெற்ற அமெரிக்க 'டைம்' போன்ற செய்திப் பத்திரிகை ஒன்றை 'ஜனா' என்ற பெயருடன் இலங்கையில் தொடங்கி இரண்டு மூன்று மாதமாக நடத்தி வருகிறார்கள். அமெரிக்கப் பத்திரிகைக்கு எந்தவிதத்தும் சளைக்காதபடி அழகாகவே 'ஜனா' அமைந்திருக்கிறது. கொழும்பு மகாநாடு நடந்தபோது, ஆசிய நாட்டுப் பிரதமர் ஐந்து பேரிடமும் நீண்ட ஆசிச் செய்தி வாங்கி முதல் இதழில் 'ஜனா' வெளியிட்டிருந்தது. ஆசிய நோக்கில் பல செய்திகளையும் இது வெளியிடும் என்று நம்புகிறோம். இதன் ஓர் இதழில் நம் அருந்தலைவர் ராஜாஜி எழுதியுள்ளது இந்தக் கட்டுரை.**

இன்ன விஷயத்தைப்பற்றி எழுதலாம் என்று ஆசிரியர் ஒரு யோசனை சொன்னார். அந்த யோசனையில் 'ஆசியாவின் மதம்' என்று ஏதோ ஒன்று இருப்பதாக ஒரு கருத்துத் தொனித்தது. அப்படி ஒரு மதம் இருக்கிறதா என்ன? ஹிந்து மதம், புத்த மதம் என்றெல்லாம் சொல்வதுண்டு. 'ஆசியாவின் மதம்' என்று ஒன்று உண்டா?

ஆம், இருக்கத்தான் இருக்கிறது என்றே நினைக்கிறேன். வாழ்ந்த வாழ்வின் சரித்திரத்தைச் சாவு அழித்து விடாது என்று ஆசிய மக்கள் நம்புகிறார்கள். கர்மத்தால் ஆத்மாவின் பண்புகள் உருவாகின்றன; அவை இந்தப் பிறவியில் மட்டுமல்ல, என்றென்றைக்கும் சாசுவதமாகவே தொடர்ந்திருக்கும். ஆகவே, நாம் செய்யும் ஒவ்வொரு காரியமுமே மிகவும் முக்கியமானது. ஒரு காரியம் ஒரே ஒருவனுக்கு நன்மை பயக்கிறதா இல்லையா என்பது பெரிதும் முக்கியம் அல்ல; பார்க்கப் போனால், ஆயுள் எல்லாருக்குமே அற்பமானது.

உன்னத சக்தி-ஞானம்-ஒன்று உலகத்தை ஆள்கிறது என்று ஆசிய மக்கள் நம்புகிறார்கள். மனிதர்கள் உயர்ந்தெழ விரும்பினால், அந்தச் சக்தி அவர்களுக்குத் துணை புரிகிறது. நாம் அப்படி விரும்பிச் சிறந்தவர்களானால், அந்தச் சிறப்பு நம் தனிப்பட்ட வாழ்வோடு முடிந்துவிடுவதில்லை; முழு உலகமுமே முன்னேற்றம் அடையத் தக்கவாறு திரண்டு கொண்டே போகிறது.

**மூலம்: ஜனா (ஆங்கிலம்: ஜூலை '54), கொழும்பு, இலங்கை.**

நல்லவர் இறந்தால், மீண்டும் பிறந்து பின்னும் நல்லவராகிறார்கள். இப்படியே மேலும் மேலும் அவர்களுடைய உத்தம குணம் பெருகிக்கொண்டே போகிறது. மனிதன் பரிபூர்ண ஆனந்தத்தை அடைய முடியும் என்பதில் ஆசிய மக்களுக்கு நம்பிக்கை உண்டு. இது ஹிந்து வேதாந்தக் கருத்து மட்டும் அல்ல! ஏதோ ஓர் உருவில் ஆசிய மக்கள் அனைவருடைய மதங்களிலுமே இந்தக் கருத்து அடங்கியிருக்கிறது.

புராதனமான மனித குல முன்னேற்ற விருட்சத்தில், சில குறைகள் தோன்றி வலுத்துவிட்டன. பொது நன்மைக்கு எதிராகத் தனி மனிதனின் சுயநல ஆசை எழுந்து ஓங்கி நிற்பதுதான் அந்தக் குறைகளுக்குக் காரணமாகும். தனி மனிதர்கள் முன்னேற்றம் அடைவது, சமூக நலத்துக்கு விரோதமின்றி அதோடு ஒன்றிப் போக வேண்டும். இப்படிப்பட்ட முன்னேற்ற ஆசையே தனி மனிதர்களுக்கு இருக்க வேண்டும்.

சமயத்தின் துணை இல்லாமலும் பலாத்காரத்தாலும் இந்த நிலைமையை உண்டாக்க முடியுமா? அறிவும் நற்குணமும் வலிமையும் உடைய சர்வாதிகாரிகள் தான் கட்டளை போட்டு இந்த லட்சியத்தைச் சாதித்துவிட முடியுமா? தனிப்பட்டவர்களின் சர்வாதிகார ஆட்சி இந்த முயற்சியில் தோற்றுவிட்டது. பாட்டாளி மக்களின் சர்வாதிகார ஆட்சி இதைச் சாதிக்கக் கூடும் என்று சிலர் கருதுகிறார்கள். அது மட்டும் இதைச் சாதித்துவிடும் என்று நம்பவும் துளியும் இடமில்லை. நம்பிக்கையும் சமயமுந்தான் இதைச் சாதிக்க வல்லவை.

அழுகி எல்லாம் சமமாய் மட்கிய குப்பைக் குவியலைக் கொண்டு 'கம்போஸ்ட்' எருத்தான் செய்யலாம்; வேறு எதையும் செய்ய முடியாது. எல்லா வேற்றுமைகளையும் அழித்து விடுவோமே என்கிறார்கள். சரி; யார் அழிப்பது? அப்படி அழித்துவிட்டால், பொது நன்மை விளையுமா? சகல வேற்றுமைகளையும் தகர்த்துவிடுவதால் ஏற்படும் குப்பைக் குவியல், ஒரு ஜீவ விருட்சமாய் இருக்குமா? பழைய ஜீவ விருட்சத்துக்கு வேண்டியது சமயம் என்ற தண்ணீர்தான். ஆசிய மதம் அந்த ஜீவ விருட்சத்தைப் போஷித்து ஆரோக்கியம் அளிக்கும்.

சமூக முயற்சிகள் சகலத்திலும் ஆண்களும் பெண்களும் தன்னலமற்றுக் கூட்டுறவு முறையில் உழைக்கும்படி செய்வதே நம் குறிக்கோள். இப்படிப்பட்ட கூட்டுறவு முயற்சியில் ஒவ்வொருவர் உள்ளமும் வேட்கை கொண்டு துடிக்கும்படி செய்ய வேண்டும். இதுவே தங்கள் வாழ்க்கையைப் பயனுடையதாக்கும் என்று ஒவ்வொருவரும் உணரச் செய்ய வேண்டும். அப்போதுதான் நம் நோக்கத்தைச் சாதிப்பது சாத்தியமாகும். 'மற்றவருக்கு உதவு,' 'மற்றவருக்கு உதவு' என்பதே நம் உள்ளத்தின் ஜபமாக இருக்க வேண்டும். 'உனக்கே உதவிக் கொள்; அதற்கு அவசியமானால் மற்றவருக்கும் உதவு' என்று நம் உள்ளத்திலே ஜபித்துக்கொண்டிருப்பது பயனில்லை.

எனக்கும் சமய நம்பிக்கை இல்லை, என் பக்கத்து வீட்டானுக்கும் சமய நம்பிக்கை இல்லை என்றால், அவனை நான் நம்ப முடி

யுமா? அவனை நான் நம்பாவிட்டால், அவனோடு கூட்டுறவு முறையில் நான் சேர்ந்து உழைக்க முடியுமா? நாம் கூட்டுறவு முறையில் உழைக்காவிட்டால், உலகம் என்றுவது சீர்திருந்த முடியுமா? சமய நம்பிக்கையே மனிதர்களை நம்பத் தகுந்தவராகச் செய்கிறது. அதைத் தவிர, வேறு எதனுல் இது முடியும்? 'மனிதகுலத்திடமே நம்பிக்கை வைத்தால் போகிறது' என்று சிலர் சொல்வார்கள். கடவுளிடம் நம்பிக்கை இல்லாமல், 'மனித குலத்திடம் நம்பிக்கை' வைப்பது, வடித்தெடுத்த மதுவைப் போல் மனிதனின் ஆரோக்கியத்துக்குத் தீங்குதான் பயக்கும்.

நாம் வேண்டுவது வறட்டுத் தத்துவம் அல்ல; ஜீவனுள்ள நம்பிக்கையே. பாரம்பர்யமாக வந்த தெய்வ நம்பிக்கை கொஞ்சம் உங்களுக்கு இருக்கலாம். அதன் பயனுகச் சிறிது காலம்மட்டும் மனித குலத்துக்குத் துரோகமில்லாமல் நீங்கள் நடக்கலாம். ஆனுல், வெகு சீக்கிரத்தில் ராஜாங்கத்தின் பலவந்தம், சர்வஜன ஓட்டுரிமை, தேர்தல்கள் இவை பற்றிய சூழ்ச்சிகள் எல்லாம் அவசியமாகிவிடும்.

ஆசிய மக்களுக்கு அருமையான நல்ல மதம் ஒன்று இருக்கிறது. அதை அவர்கள் மறக்காவிட்டால், அவர்களையெல்லாம் அது ஒற்றுமைப்படுத்தி வைக்கும். அந்த ஒற்றுமையால் அவர்கள் பலமும் வளர்ச்சியும் பெறுவார்கள். அவர்கள் முகத்திலே மகிழ்ச்சி தவழும்; உள்ளத்திலே கொடுமைக்கு இடம் இராது.

"மனிதன் ஆத்மார்த்த விஷயங்களை அசட்டை செய்து, ஆண்டவனின் கவசத்தை உதறித் தள்ளுவானுனல், வருங்கால சந்ததிக்கெல்லாம் அழிவு தேடியவனுவான்." இந்த உண்மையை, சமீபத்தில் செயிண்ட் பால் தேவாலயத்தில் ஸ்டாஃபோர்டு கிரிப்ஸ் என்ற பிரபலஸ்தருக்கு ஞாபகார்த்தச் சிலை அமைத்த உத்தமர்கள் மீண்டும் வலியுறுத்தியிருக்கிறார்கள்.

இங்கே நான் சொல்லுவதை யாரும் தவருக அர்த்தம் செய்து கொள்ள வேண்டாம். பல ஆசிய மதங்களை அக்கு வேறு அலகு வேருகப் பிரித்து அந்தப் பிரிவுகளை மீண்டும் கூட்டிப் புது மோஸ்தர் போஷணைப் பொருளான ஆசிய மதம் ஒன்றை அமைத்துவிடலாம் என்று நான் சொல்லவில்லை. பாலிஷ் செய்த அரிசி உணவாகாது. 'அடிப்படையான தத்துவங்களைக் கண்டுபிடித்து விடவேண்டும் என்ற மோகத்தால், நம் மதங்களை நாம் 'பாலிஷ்' செய்யக் கூடாது. 'பாலிஷ்' செய்த மதத்தால், 'பெரிபெரி' (ரத்த சோகை) போன்ற ஆரோக்கியக் குறைவுதான் உண்டாகும். மதத்துக்கு உயிர் போன்றவை அதன் முறைகளும் நம்பிக்கைகளுந்தான். இவைகளை ஒதுக்கிவிட்டால், மதம் உயிரற்ற ஜடம் ஆகிவிடும். சில முறைகளையும் நம்பிக்கைகளையும் போர்த்திருப்பதால்தான், மதம் மதமாக இருக்கிறது. ஒவ்வொரு மதத்துக்கும் ஜீவன் உண்டு. அவைகளைப் 'பாலிஷ்' செய்து வெளுக்கடித்து விட்டால், எல்லாம் ஒரே விதமாகி விடும்; ஒன்றுக்கும் ஜீவன் இராது.

மத நம்பிக்கை என்பது வைட்டமின் என்ற உணவுச் சத்தைப்

போன்றது. அதை அலசிப் 'பாலிஷ்' செய்தால், அது மாய்ந்து போகும்.

ஹிந்து வேதாந்தத்திலே, உய்த்துணரும் அறிவு விரிவைக் காணலாம். இதுவே ஆசிய மதங்கள் அனைத்துக்கும் ஓர் அம்சம்; இதுவே ஆசிய மதங்களை யெல்லாம் ஒன்று சேர்த்து இணைக்கும் அம்சம். ஒவ்வொரு மதத்துக்கும் உள்ள தனித் தனிப் பண்புகளை அழித்துவிடுவதால், இப்படி இணைக்க முடியாது. இந்த அம்சத்தைச் 'சகிப்புத் தன்மை' என்ற கோர வார்த்தையால் குறிப்பிடவே குறிப்பிடாதீர்கள். நேரிடையான ஓர் அம்சம் இது; எதிர்மறையானதல்ல.

ஆசியாவில் உள்ள ஒவ்வொரு மதத்திலுமே 'ஆசிய மதம்' என்று கூறத் தக்க ஓர் அம்சம் இருக்கிறது. அதை நாம் கெட்டியாய்ப் பற்றி நிற்போம். அதை நாம் அழித்தால், நாமே அழிந்து போய் விடுவோம். அப்படி முட்டாள் தனமாக நாம் அதை அழித்து விடாதிருக்கும்படி ஆண்டவனைப் பிரார்த்திப்போம்.

## புனை பெயரில் அரசர்

கடைசியாக ஸ்பெயின் நாட்டில் முடிதுறந்து சென்ற பதின்மூன்றாவது அல்ஃபான்ஸோ மன்னர், ஆட்சி புரிந்து வந்த காலத்தில், தம்மை இன்னார் என்று தெரிவித்துக் கொள்ளாமல் சாதாரண மனிதரைப்போல் நாடெங்கும் அடிக்கடி சுற்றுவார். இப்படி ஒரு சமயம் வெகு தூரத்தில் உள்ள நகரம் ஒன்றுக்குப் போய் ஒரு ஹோட்டலில் புனை பெயரோடு தங்கினார்.

மறு நாள் காலையில் முக க்ஷவரம் செய்துகொள்ள வேண்டியிருந்தது. "ஒரு நிலைக் கண்ணாடி வேண்டும்" என்று ஹோட்டல் முதலாளியைக் கேட்டு வாங்கிக்கொண்டார். க்ஷவரம் செய்துகொள்ளத் தொடங்கினார்.

இவரையே சிறிது நேரம் உற்று உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார் முதலாளி. கடைசியில், "நீங்கள் எங்களிடம் வழக்கமாய் வரும் வாடிக்கைக்காரர்களைப்போல் இல்லை. ராஜாவின் அரண்மனையில் இருப்பவரோ நீங்கள்?" என்றார்.

"சரியாய் ஊகித்துவிட்டீர்களே! ஆமாம்; ராஜாவின் அரண்மனையில் இருப்பவன்தான் நான்" என்றார் மாறு பெயரில் உள்ள மன்னர்.

"அப்படித்தான் இருக்கும் என்று எனக்கு நிச்சயமாய்த் தோன்றிற்று. அது சரி; ராஜாவுக்கே ஊழியம் புரிகிறீர்களோ?"

"ஆமாம்; இதுவும் சரிதான்."

"சரி; அவருக்கு என்ன ஊழியம் புரிகிறீர்கள்?"

"எத்தனையோ ஊழியம். உதாரணமாக, இந்த நிமிஷத்தில் அவருக்கு நான் க்ஷவரம் செய்துகொண்டிருக்கிறேன்."

—இ. இ. எட்கர்

# என்னைக் கேளுங்கள்

காப்டன் என். சேஷாத்திரிநாதன்

**வைத்தியம், சுகாதாரம், ஆரோக்கியம் இவைபற்றி 'மஞ்சரி' வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு இயன்றமட்டில் பதிலளிக்க இந்த டாக்டர் இசைந்திருக்கிறார். இவர் வைத்தியத் துறையில் கல்வியும் அநுபவமும் நிறைந்தவர்; ரத்தப் பரிசோதனை நிபுணர்; கிண்டி இன்ஸ்டிட்யூட் அதிகாரியாக இருந்தவர். நோயுள்ளவரின் தனித்தனி நிலையை நேரில் கவனித்தே டாக்டர் வைத்தியம் செய்ய வேண்டும். ஆகவே, இதில் வரும் பதில்களைப் பொதுவாகக் கொள்ளலாமே தவிர, வைத்தியமே இவற்றைக் கொண்டு செய்துகொள்ளலாம் என்று நண்பர்கள் நினைக்கக் கூடாது.**

**சுந்தரம், சென்னை:**

**கேள்வி:** என் குழந்தை மீனுவுக்கு வயது எட்டாகிறது. அவள் உணவு அருந்துவதில்லை; பிற தின்பண்டங்களையும் சாப்பிடுவதில்லை. அவள் எடை வெகு காலமாய் ஏறாமல் இருக்கிறது. மெலிந்துதான் இருக்கிறாள். டாக்டர்களைக் கேட்டால் வியாதி ஒன்றுமில்லை என்கிறார்கள். இதற்கு என்ன பரிகாரம் சொல்லுகிறீர்கள்?

**விடை:** ஏதோ காரணத்தால் குழந்தை சாப்பிடாமல் இருந்துவிட்டால், வற்புறுத்திச் சாப்பிடச் சொல்வது இயல்பு. அப்பொழுது குழந்தையின் உள்ளம் இப்படிச் சொல்லிக்கொள்ளும்: "நாம் சாப்பிடாமலிருந்தால் பெற்றோர் நம்மை அடிக்கடி வந்து, 'சாப்பிடு, சாப்பிடு' என்று உபசரிப்பார்கள். பெற்றோர்களை நம்மிடம் இழுத்துக்கொள்ளலாம்." இதை நல்ல உபாயமாகக் கருதி அதுமுதல் சாப்பிட மறுத்து விடுவாள் குழந்தை. அந்த நிலைதான் குழந்தை மீனுவுக்கு வந்திருக்கிறது என்று எண்ணுகிறேன். வீட்டுக்கு வருகிற பேரிடமெல்லாம், "குழந்தை மீனு சாப்பிட மாட்டேன் என்கிறாள்" என்று வீட்டில் உள்ளோர் சொல்லுவார்கள்! இதெல்லாம் மீனுவுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. ஆகையால், அவளுக்கு எல்லாக் கறிவகைகளும் சாப்பாடும் தினமும் தயார் செய்து அவள் முன்னே வைக்க வேண்டும். ஆனால் அவளை வற்புறுத்தலாகாது. சில நாளுக்குள், தானே நன்றாய்ச் சாப்பிட ஆரம்பிப்பாள். பெற்றோருக்கு இந்த விஷயமாய்ப் பொறுமை வேண்டும்.

**சீதாலட்சுமி, மதுரை:**

**கே:** என் இரண்டு குழந்தைகளையும் என் அம்மா குளிப்பாட்டியும் பாலூட்டியும் சாப்பிடச் செய்தும் பலவிதத்தில் உதவுவதால், குழந்தைகள் அவளிடமே ஒட்டிக் கொண்டு விட்டார்கள். இப்போது எனக்கு அதிக நேரம்



ஓய்வு கிடைக்கிறது. ஆனால் நானே அவர்களைப் பராமரிக்கலாமென்றால், அவர்கள் என்னிடம் வருவதில்லை; அம்மாவிடமே போகிறார்கள். நான் எப்படி அவர்களை என்னிடம் திருப்புவது?

வி: தாய்மை என்பது தாயிடமிருந்துதான் வரவேண்டுமென்று நினைக்க வேண்டாம். குழந்தையைக் கொண்டாடுவோரிடம் அதிகமாய்க் குழந்தை ஒட்டிக் கொள்ளும். உங்கள் தாயிடம் அவை ஒட்டிக்கொள்வதைக் கண்டு பொறாமைப் பட வேண்டாம். கொஞ்சம் பொறுமையுடன் அவர்களிடம் அன்பு பாராட்டினால் உங்களிடமும் வந்து கொஞ்சிக் குலாவுவார்கள். இதற்காகத் தாயிடம் நீங்கள் போட்டி போடக் கூடாது. குழந்தை ஆரோக்கியமாக வளர வேண்டும் என்ற ஒரே நோக்கமாக இருந்தால், நீங்கள் குழந்தையை வளர்த்தாலும் சரி, உங்கள் தாயார் வளர்த்தாலும் சரி, அதைப்பற்றிக் கவலைப்படக் கூடாது.

கோமதியம்மாள், சென்னை:

கே: வியாதிகளுக்கெல்லாம் ஏன் இரவு மிகவும் கொண்டாட்டமாக இருக்கிறது?

வி: இது நல்ல கேள்வி. தலைவேதனை யென்றால் இரவில்தான் அதிகமாகிறது. பல்வலி என்றாலும் இரவில்தான் அதிகமாகிறது. ஜுரம் தோன்றுவதும் அப்படித்தான். இருமலோ கேட்கவே வேண்டாம்; இருமிக் குரைத்து வீட்டிலுள்ளவர் அனைவரையும் தூங்கவொட்டாமல் பண்ணி விடுகிறோம்.

ஜுரம் உண்மையிலேயே இரவில் அதிகமாகலாம். மற்ற நோய்கள் சம்பந்தப்பட்ட மட்டில், இரவில் நாம் அயர்ந்து ஓய்வு எடுத்துக் கொள்கிறோம். அந்த அளவு காலையில் அவை ஓரளவு குணம் அடைகின்றன. தவிர, காலையில் வெளிச்சம் இருப்பதால் வேலை செய்யத் தோன்றுகிறது; வேலை செய்வதாலும், கண்ணால் பார்த்துச் செவியால் கேட்பதாலும் நம் கருத்துப் பல வகையில் சிதறுகிறது. இரவு அப்படியல்ல. நம் உபாதைகள் நம் கருத்தைப் பூரணமாக வாங்கிக் கொள்கின்றன. இதனாலும் நோய்கள் இரவில் அதிகமாவது போல் தோன்றுகிறது.

ஹமீத், வள்ளம்:

கே: (விடையில் அடங்கியிருக்கிறது.)

வி: இவருடைய சகோதரிக்குக் கழுத்தில் கட்டி தோன்றியிருப்பதைப்பற்றிக் கேட்கிறார். இது க்ஷயரோகத்தின் குறியாயிருந்தால், சில நாளைக்குள் சீழ் தோன்றலாம்; தோன்றாமலும் இருக்கலாம். நவீன வைத்திய முறையில் 'ஸ்ட்ரெப்டொமைசின்' போன்ற மருந்துகளைப் பிரயோகித்துக் குணமாக்கிக்கொள்ளக் கூடிய நோய் இது.

இப்படி இன்றி, இவர் சொல்லும் 'கண்டமாலை' தனிப்பட்ட நோயாக இருந்தால், அதற்குப் பரிகாரம் தேடுவது கஷ்டமாகும்.



**எஸ். பரமேசுவரன், திருச்சி:**

கே: எனக்கு வயது பத்தொன்பது. நான் மெலிந்த உடலுடையவனாக இருக்கிறேன். எவ்வளவோ மருந்து சாப்பிட்டும் உடல் பருமனாகவில்லை. என் எடை 108 பவுண்டு. உயரம் 5 அடி 8 அங்குலம். என் உடம்பு எலும்புக் கூடுபோல் இருக்கிறது. அதை வலுவும் ஆரோக்கியமும் சதையும் உள்ளதாகும்படி செய்ய என்ன உபாயங்களைக் கையாள வேண்டும்?

வி: வயது பத்தொன்பதுதான் ஆகிறது. நிறை உயரத்துக்கும் வயதுக்கும் தகுதியானதாகவே தோன்றுகிறது. அதனால் ஆரோக்கியத்துக்கும் குறைவில்லை என்று நினைக்கிறேன். இந்த வயதில் அதிக பலசாலியாக வேண்டும், பெரிய காரியங்களைச் செய்ய வேண்டும் என்றெல்லாம் தோன்றுவது இயல்பு. இதற்கு, விளையாட்டுக்களில் கலந்துகொள்ளலாம்; உடல் பயிற்சி செய்யலாம். இப்படிப் பசியை எழுப்பிச் சாப்பிட்டால், பருத்த தசைகளுடையவனாகலாம்.

**எஸ். வி. ராமன், திருச்சி:**

கே. 1: நான் எப்பொழுதும் தலை வாரிக்கொள்ள விளக்கெண்ணெயையே தடவிக்கொள்கிறேன். அதனால் கெடுதல் உண்டா?

வி: உடம்பில் மீனெண்ணெய் தடவிக்கொண்டு குளித்த ஒருவரை எவருமே - அவருடைய நண்பர்களுங்கூடத்தான் - அணுகமாட்டார்கள். அதே நிலைதான் நண்பர் எஸ். வி. ராமனுக்கும் நேரலாம். வேறு கெடுதல் ஏதுமில்லை.

கே. 2: நான் எதைச் சாப்பிட்டாலும் என் எடை கூடுவதில்லை. உடலில் உஷ்ணம் எப்போதும் இருக்கிறது. கண்ணில் எரிச்சல் இருக்கிறது. கோபம் அதிகமாக வருகிறது.

வி: சுபாவமாகவே ஒல்லியாயிருந்தால், என்ன சாப்பிட்டாலும் எடை ஏறாது. அதிகமாகச் சாப்பிட்டும் ஒல்லியாயிருப்பவர்கள் சற்றுப் படபடப்பாயும் கோபமாயுந்தான் இருப்பார்கள்.

**எஸ். டி. வேணுகோபால், ராணிப்பேட்டை:**

கே: விஞ்ஞானம் வெகுவாக முன்னேறியுள்ள இந்தக் காலத்தில் புண்ணினால் ஏற்படும் தழும்புகளை அழிக்க மருந்து ஏதாவது உண்டா? அது எங்கே கிடைக்கும்?

வி: புண்ணினால் தழும்புகளைத் தோற்றுவிக்க விடாமலே தடுக்க வேண்டும்; அல்லது சிறிது புண் தோன்றிய உடனேயே 'பெனிசிலின்', 'சல்பானமைடு' போன்ற மருந்துகளை இட்டுக் குணப்படுத்த வேண்டும். புண்களுக்கு இந்த மாதிரி மருந்துகளிட்டால் கிருமிகள் மறைந்து போகலாம். அந்தச் சமயத்தில் சரும ஒட்டுச் சிகிச்சை செய்து, தழும்பு தோன்றாமலே தடுத்துவிடலாம். தழும்பு தோன்றிய பிறகு அதை நீக்குவது கஷ்டமான காரியம்.

# பாம்பை வளர்த்தவள்

★

பாம்பாட்டி பாம்பின் பல்லைப் பிடுங்கிவிடுகிறன். இவளோ கொடிய சர்ப்பங்களைப் பல் பிடுங்காமலே சர்வ சகஜமாகத் தன் குழந்தைகளைப் போல் வளர்த்தாள். ஆனல் உலகப் பிரசித்தி பெற்ற இவள் முடிவு ஒரு சோகக் கதை. இந்தக் கட்டுரைக்கு ஆதாரம் ஜூலி மான்னிக்ஸ் என்பவள் 'இல்லஸ்டிரேட்ட்'டில் எழுதியுள்ள ஒரு கட்டுரை.

காலிபோர்னியாவில் ஸைப்ரஸ் என்ற இடத்தில் ஒருத்தி பாம்புகளையும் முதலைகளையும் அன்போடு வளர்த்துவந்தாள். அவள் அவற்றைப் பெயர் சொல்லி அழைத்தால் அவை உடனே வரும். இதற்காக அவள் பெரிய மிருகக் காட்சிச்சாலையை வைத்துக்கொள்ளவில்லை. ஒரு சிறிய மரக் கூண்டு இருந்தது. அதன் பின்னல், தானியக் களஞ்சியம் போன்ற தாழ்வான ஒரு கட்டிடம் இருந்தது.

அந்தப் பெண்மணியின் பெயர் கிரேஸ். அவளுக்கு வயது அறுபதுக்குமேல் ஆயிற்று. அந்த வயதுக்கு அவள் மிகவும் உற்சாகமாக இருந்தாள். ஒரு நாள் அவள் கண்ணுடிப் பெட்டிகளைத் துடைத்துக் கொண்டிருந்தபோது, அவளைப் பார்க்க நியூ யார்க்கிலிருந்து இரண்டு பேர் வந்தார்கள் - பத்திரிகைப் பிரதிநிதியான டான் என்பவரும், அவர் மனைவி ஜூலியும்.

அவள் துடைத்துக்கொண்டிருந்த கண்ணுடிப் பெட்டிக்கு உரிய 'ராட்டில் - ஸ்னேக்' என்ற கொடிய விஷப் பாம்பு அப்பொழுது சுகமாக வெயில் காய்ந்துகொண்டிருந்தது. "என் பாம்புகளைப் பார்க்கத்தானே வந்திருக்கிறீர்கள்?" என்று அவள், வந்தவர்களை வரவேற்றாள்.

அவள் அந்தப் பாம்பை எடுத்துக் கூட்டுக்குள் விட்டாள்; மேற்கதவை மூடினள். அது கடிக்க முயலவில்லை; சத்தமும் செய்யவில்லை. அந்த விஷப் பாம்போடு அவள் சகஜமாகப் பழகுவதைக் கண்டு, வந்தவர்கள் வியந்தார்கள்.

"ஜனங்கள் பாம்பைப் பயங்கரமான ஜந்துவாக நினைக்கிறர்களே, அது தவறு. பாம்புகளை யாரும் வளர்க்கலாம். அவை மிகவும் அறிவுள்ளவை. நாம் ஜாக்கிரதையாக இருந்தால், அவற்றோடு எவ்வித ஆபத்தும் இன்றிப் பழகலாம்" என்றள் கிரேஸ்.

பிறகு அவள் அவர்களை ஒரு மூலையில் இருந்த நீர்நிலைக்கு அழைத்துப் போய், "இங்கே முதலைகள் இருக்கின்றன. அவற்றில் எதன்மேலும் காலை வைத்துவிடாதீர்கள்" என்றள்.

மூன்று அடி முதல் பதினைந்தடி நீளம் வரைக்கும் பல முதலைகள் வரிசையாக இருந்தன. ஒவ்வொரு முதலைக்கும் தன் பெயர் தெரிந்திருந்தது. கிரேஸ் கூப்பிட்டவுடனே ஒவ்வொன்றக

வெளிவந்தன. சீனத்து முதலைக்கு 'மிஸ்டர் ஃபெரோஷியஸ்' என்று பெயர். எகிப்திய முதலைக்கு 'ஜாக்கி' என்று பெயர். அமெரிக்க முதலைக்கு, 'பில்' என்று பெயர். இப்படிக் கூப்பிட்டவுடனே முதலைகள் வருவதை, டான் தம் வாழ்க்கையிலேயே முதல் தடவை கண்டு அதிசயித்தார். அவர் இருபது வருஷகாலம் பல பிராணிகளோடு பழகியவர். மிஸ்டர் பெரோஷியஸ் தன் கால்களை வேகமாக நகர்த்திக்கொண்டு, கிரேஸின் முழந்தாளில் வந்து படுத்துக்கொண்டது. அவள் அதன் தலையைச் சொறிந்து கொடுத்தாள். அப்புறம் கிரேஸ் ஒவ்வொரு பாம்பாக எடுத்து அவர்களுக்குக் காண்பித்து ஒவ்வொன்றின் குணாதிசயத்தையும் வர்ணித்தாள். இங்கிலாந்து, காங்கோ, இந்தியா, ஆஸ்திரேலியா முதலிய காடுகளிலிருந்து வந்தபல வகையான பாம்புகள் அவை. உலகத்திலேயே பெரிய விஷப்பாம்பாகிய ஆஸ்திரேலிய 'டைகர் - ஸ்னேக்' முதல், கிளியோப்பாட்ராவைக் கொன்ற எகிப்தியப் குட்டிப் பாம்பான 'ஆஸ்ப்' வரைக்கும் அங்கே இல்லாத பாம்பு வகையே இல்லை. அந்தப் பாம்புகள் தன்னைக் கடிக்காதிருக்கவேண்டுமென்று அவற்றின் தலையைப் பிடிக்கும் வழக்கம் கிரேஸுக்கு இல்லை. அவள் ஒவ்வொரு பாம்போடும் ஏதோ பேசினாள்; பிறகு மெதுவாகத் தன் கையால் அதைத் தட்டி, நாய்க்குட்டியைத் தூக்கிக்கொள்வது போல் தோளில் வைத்துக் கொண்டாள்.



கிரேஸ் தன் சர்ப்பங்களைப் புல்வெளியில் விட்டு அவற்றோடு விளையாடுவாள்

"நான் பேசுவது இந்தப் பாம்புகளுக்குக் கேட்காது என்பது எனக்குத் தெரியும். ஏனென்றால், பாம்புக்குக் காது கிடையாது. ஆயினும், என் குரலின் அதிர்ச்சியினால், நான் தமக்கு வேண்டியவள் என்பதை அவை உணர்ந்து கொள்கின்றன" என்றாள்.

பின்பு அவள் ஒரு பெரிய கூட்டின் முன்னால் சென்றாள். அது



முதலைகளைப் பெயரிட்டு அழைப்பது கிரேஸின் வழக்கம்

நிறையப் பத்திரிகைக் காகிதங்கள் இருப்பதாகத் தோன்றிற்று. "இவை கொஞ்சநாள் முன்புதான் வந்தன; ஆகையால், இந்தப் பாம்புகள் இன்னமும் காட்டுமிராண்டியாகத்தான் இருக்கும்" என்று சொல்லி, அவள் மெதுவாக மேலே இருந்த காகிதத்தை அகற்றினாள். உடனே அந்தக் கூண்டில் பாம்பின் தலைகள் கிளம்பி அமுங்கின. சற்றுக் கவனித்துப் பார்த்ததில் அவை வெறும் தலை அல்ல, படம் என்று தெரிந்தது. அவை அத்தனையும் இந்தியாவிலிருந்து வந்த கொடிய நாகப் பாம்புகள்.

இந்தியாவில்மட்டும் வருஷந்தோறும் 25,000 பேர் நாகம் தீண்டிச் சாகிறார்கள். 'ராட்டில் - ஸ்னேக்'கின் விஷம் ரத்தத்தோடு கலக்கிறது; ஆனால் நாகப்பாம்பின் விஷமோ நரம்பிலே பாய்ந்துவிடுகிறது. 'ராட்டில் - ஸ்னேக்' கடித்தால், கடிபட்ட இடத்தை வெட்டி, விஷம் பரவிய ரத்தத்தை வெளிப்படுத்தினால் போதும். நல்ல பாம்பின் விஷமோ அந்த க்ஷணமே ரத்தத்தின் வாயிலாக நரம்புகளில் பரவி, பக்கவாதத்தை உண்டாக்கி, வெகு சீக்கிரத்தில் மரணத்துக்குக் காரணமாகிறது.

கிரேஸ் அந்தக் கூட்டிலிருந்த ஒரு பாம்பைத் தட்டினாள். அது மெல்லத் தலையைத் தூக்கிக்கொண்டு கிளம்பியது. அது சீறிக்கொண்டு அவளை அடிக்கப் பார்த்தது. அவள் தன் உள்ளங்கையை அதன் முன்பு நீட்டினாள். பாம்பு பல தடவை அவளுடைய உள்ளங்கையை அடித்தது. பிறகு அவள் தன் கையினால் அதன் தலையைத் தட்டினாள். அது உடம்பை வளைத்துக்கொண்டு அவளுடைய கையை எட்டப் பார்த்தது. அவள் அதோடு ஏதோ பேசிக்கொண்டே தட்டினாள். பயங்கரமான அதன் படம் மெதுவாகச் சுருங்கியது.

ஒரு நாள் கிரேஸ், புதிதாக வந்த நாகங்களில் ஒன்றை வெளியே எடுத்துக் கையில் பிடித்துக்கொண்டாள். அதன் படத்தில் 'G' என்ற விசித்திரமான அடையாளம் இருந்தது. அந்தப் பாம்போடு அவளைப் படம் பிடிக்க வேண்டுமென்று டான் விரும்பினார். கிரேஸ் அந்தப் பாம்பை

வெளியே எடுத்துப் போய்ப் புல் தரையில் விட்டாள். பாம்பு படம் எடுக்க வேண்டுமென்று, கிரேஸ் அதைச் சீண்டினாள். உள்ளங் கையில் அது அடித்ததை அவள் சமாளித்துக்கொண்டாள். இப்படிச் செய்வது அவளுக்குச் சாதாரண விஷயம்.

"என் முகம் இந்தப் படத்தில் விழுமா?" என்று கிரேஸ் கேட்டாள்.

"பாம்பின் படந்தான் நன்றாகத் தெரியும். ஆனால் நீங்கள் பின்னால் இருப்பீர்கள்" என்று டான் காமிராவைப் பார்க்காமலே சொன்னார்.

"அப்படியானால் நான் என் மூக்குக் கண்ணாடியை எடுத்துவிடுகிறேன்" என்று சொல்லி, கிரேஸ் மூக்குக்கண்ணாடியைக் கழற்றி விட்டாள். ஆனால் கண்ணாடி இல்லாமல் அவளுக்குப் பார்வை மிகவும் மந்தம் என்பதை டானும் ஜூலியும் அப்போது மறந்துவிட்டார்கள்.

இதற்குமேல் நடந்ததை நேரில் கண்ட ஜூலியே சொல்கிறாள், கேளுங்கள்:

"பாம்பு புரண்டு தவழ்ந்துகொண்டு வந்தது. கிரேஸ் அதை எப்போதும் போலக் கையால் தட்டினாள். உடனே அது அவளைத் தாக்கியது. அவளுடைய உள்ளங்கையைத் தாக்கியதும் அது அடங்கிவிடும் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால் அது பின்வாங்கவேயில்லை. அது அவளுடைய கையைப் பற்றியிருந்தது. அது என்ன செய்கிறதென்று அப்பொழுதும் எனக்குத் தெரியவில்லை. 'ஒரு முறை தாக்கியதும் பாம்பு அடங்கிவிடுமே; இது ஏன் இப்படி இருக்கிறது?' என்று நினைத்தேன்.

"படம் பிடித்தானதும் நானும் என் கணவரும் அவளை நெருங்கினோம். பாம்பு அவளைத் தாக்குவதாகத் தோன்றவில்லை. அது அவளுடைய நடுவிரலைக் கவ்விக்கொண்டு, விஷத்தை உள்ளே செலுத்துவதற்காக விரலைக் கடித்தது. கிரேஸ் எப்போதும் போல அமைதியாகவே, 'ஆ! இது என்னைக் கடித்துவிட்டதே' என்றாள்.

"அந்தப் பேச்சை எங்களால் நம்பவே முடியவில்லை. அதிக விஷத்தை அது செலுத்துமுன், டான் பாம்பின் தலையைப் பிடித்துச் சட்டென்று அதன் பல்லை எடுக்க விரும்பினார். ஆனால் கிரேஸ் அதைத் தடுத்துத் தன் மற்றொரு கையினால் பாம்பின் தலையைப் பிடித்து ஜாக்கிரதையாகப் பல்லை எடுத்தாள். மெதுவாக அதைக் கூட்டில் கொண்டுவிட்டாள்.



படத்திலே 'G' என்ற குறிகொண்ட இந்தப் புது நாகமே அவளுக்கு எமனாய் வந்து சேர்ந்தது. படம் விழுந்துவிட்டது; ஆனால், அவள் கையிலே விஷம் ஏறிவிட்டது.

"அவள் தன் விரலை அழுத்திப் பிடித்துக்கொண்டு விஷத்தை வெளியே பிதுக்கித் தள்ள முயன்றாள். அவள் மிகவும் அமைதியாகவே இருந்தாள். 'ஜூலி, என் நண்பர் வெஸ்லியைக் கூப்பிடு. இன்னது செய்யவேண்டுமென்று அவருக்குத் தெரியும்' என்று சொல்லி, டெலிபோன் நம்பரைக் குறிப்பிட்டாள்.

"நான் போன் செய்யப் போனதும் அவள் டானைப் பார்த்து, 'அது என்னைக் கடித்திருக்காது; இல்லையா?' என்றாள். 'பாம்புக் கடி மருந்துப் பெட்டியை எங்கே வைத்திருக்கிறீர்கள்?' என்று டான் அவளைக் கேட்டார். அவள் சொன்ன இடத்திலிருந்து அவர் அதை எடுத்து வந்தார்.

"போன் செய்யப் போன எனக்கு ஒவ்வொரு செகண்டும் ஒரு யுகமாக இருந்தது. வெஸ்லி சிறிது நேரத்தில் வருவதாகவும், என்ன செய்ய வேண்டுமென்று தமக்குத் தெரியுமென்றும் சொன்னார். 'இதில் வீரம் எங்கே இருக்கிறது?' என்று டான் கேட்டதும், கிரேஸ் அமைதியாக, 'நான் வீரம்களை வைத்துக்கொள்வதில்லை. ஒவ்வொரு வகையான பாம்புக்கு ஒவ்வொரு வகையான வீரம் வேண்டியிருக்கும். அவ்வளவையும் வாங்க என்னிடம் பணம் ஏது? மேலும், சில நாளைக்கு அப்புறம் அவை கெட்டுப்போகும். இப்படி நடக்குமென்று நான் எதிர்பார்க்கவேயில்லை' என்றாள்.

"டான் அந்தப் பெட்டியிலிருந்து ஒரு ரப்பர்த் துண்டை எடுத்தார். அதை அவள் விரலில் அழுத்திக் கட்டலாமென்றால் அது மிகவும் நைந்துபோயிருந்தது. அவளுடைய விரல் இப்போது பருமனாக வீங்கிவிட்டது. அவர் தம் கைக்குட்டையை அவளுடைய இடுப்பில் அழுத்தமாகக் கட்டினார். நான் ஒரு ரேஸர் பிளேடை எடுத்து, கடித்த இடத்தை வெட்டி ரத்தத்தை வெளிப்படுத்த எண்ணினேன். 'அதெல்லாம் பயனில்லை. நாகப்பாம்பின் விஷம் நேராக நரம்பின் வழியே செல்லும். எனக்கு லேசாக மயக்கம் வருகிறது. பிரக்ஞை தவறுவதற்கு முன் முக்கியமான விஷயத்தைச் சொல்கிறேன்' என்று கூறிக்கொண்டே அவள் நடந்தாள். நாங்கள் அவள் பின்னால் ஓடினோம். 'நான் பிரக்ஞை இழந்ததும் இந்தக் குழாயையும் ஊசிகளையும் வைத்துக்கொண்டு எனக்கு ஸ்டிரிக்னைன் இஞ்செக்ஷன் கொடுங்கள். வெஸ்லி வரும்வரைக்கும் அதனால் என் இருதயம் ஓடிக்கொண்டிருக்கும்' என்று அவள் சொன்னாள்.

"நாக விஷம் நரம்பில் பரவுவதனால் உடனே இருதய ஓட்டத்தை அது தடுத்துவிடும். ஸ்டிரிக்னைன் சிறிது நேரம் வரைக்கும் இந்த நிலையைச் சமாளிக்க உதவுகிறது.

"கிரேஸ் முதலில் உட்கார்ந்தாள். அதுவும் சிரமமாக இருக்கவே படுத்துக்கொண்டாள். வெஸ்லி இன்னமும் வராமல் போகவே ஆஸ்பத்திரிக்கு நான் போன் செய்தேன். ஆம்புலன்ஸ் வண்டியோடு வெஸ்லி வந்துகொண்டிருப்பதாக நர்ஸ் சொன்னாள். 'இங்கே பக்கத்தில் கூப்பிடுவதற்கு யாராவது இருக்கிறார்களா, கிரேஸ்?' என்று டான் கேட்டார். 'பக்கத்து வீட்டில் என் அண்ணன் மகன் டான்னர் இருக்கிறான்' என்றாள் கிரேஸ்.

"நான் உடனே போய், டான்னரை அழைத்து வந்தேன். அவன், 'உன் விரலை வெட்டிவிடுவது நல்லது, கிரேஸ். அதனால் நீ பிழைத்துவிடுவாய்' என்றான்.

"கிரேஸ் தலையை ஆட்டிக் கொண்டே, 'அதனால் ஒன்றும் ஆகாது. விஷம் வெகு விரைவில் பரவிவிட்டது. என் கை முழுவதையுமே வெட்டினால் ஏதாவது பயன் ஏற்படலாம். அதனால் அதிர்ச்சியும் ரத்தப்போக்கும் மிகவும் அதிகமாக இருக்கும்' என்றாள்.

"ஒன்றும் செய்யாமல் அங்கே இருப்பது எனக்கு வேதனையாக இருந்தது. ஆஸ்பத்திரிக்கு மறுபடி போன் செய்து, பாம்புக் கடிக்கு வீரம் இல்லையா என்று கேட்டேன். 'எங்களிடம் இல்லை. வாஷிங்டனிலிருந்து தருவிக்க முயன்று வருகிறோம்' என்று பதில் வந்தது. 'எனக்கு ஸ்டிரிக்னின் கொடுங்கள்' என்றாள் கிரேஸ். நான் இஞ்செக்ஷன் செய்ய ஒவ்வோர் ஊசியாக எடுத்தேன். எல்லாம் துருப் பிடித்துக் கிடந்தன. இருபது வருஷமாகக் கிடக்கும் அந்தப் பெட்டியை யாரும் ஒருபோதும் திறந்ததில்லை. துருப் பிடித்திருந்தும் கொஞ்சம் சுமாரான ஊசியை எடுத்து, நான் மருந்தைச் செலுத்தினேன்.

"வெஸ்லி வரும்வரைக்கும் நாங்கள் காத்திருந்தோம். பாம்பு கடித்த பத்தொன்பது நிமிஷங்களுக்குப் பிறகு, வெஸ்லி ஆம்புலன்ஸுடன் வந்து சேர்ந்தார். ஆம்புலன்ஸில் நாங்கள் கிரேஸைப் படுக்க விட்டபோது அவள், 'நான் வரும்வரைக்கும் என் பாம்புகளைப் பார்த்துக்கொள்ளுங்கள். முதலைகளுக்குத் தீனி போடுங்கள்' என்றாள். கார் மெல்ல மெல்ல மறைந்துவிட்டது.

"நாங்கள் சிறிதுநேரம் காத்திருந்தோம். டான் ஆஸ்பத்திரிக்கு போன் செய்தார். 'கிரேஸுக்கு யந்திர நுரையீரல் (ஐரன் லங்க்) வைத்திருக்கிறோம். மருந்துகளால் அவளுடைய இருதயம் ஓடிக்கொண்டிருக்கிறது. ஒன்றும் சுவாரஸ்யமில்லை' என்ற செய்தி வந்தது.

"மறுபடி டான் போன் செய்தபோது, கிரேஸ் செத்துப் போய்விட்டாள். பாம்பு கடித்த தொண்ணூறு நிமிஷங்களுக்குள் அவள் இறந்துவிட்டாள்."

### மனிதனைப்பற்றி

மனித இனத்தைப்பற்றி மனிதன் தெரிந்துகொண்டது அவ்வளவும் இலக்கியமாக உருவெடுத்திருக்கிறது. சரித்திரம் என்பது அவன் எப்படி இருந்தான் என்பதைச் சொல்கிறது; அவன் என்ன செய்கிறான் என்பதைச் சொல்வது சட்டம்; அவன் என்னவாக இருக்கிறான் என்பதைக் கூறுவது உடல் நூல்; அவன் எப்படி இருக்க வேண்டும் என்பதை விவரிக்கிறது நீதி; அவன் எப்படி இருக்கப் போகிறான் என்பதைச் சொல்வது திவ்ய தரிசனம்.

—ஜார்ஜ் ஃபின்லேஸன்



# பூருவின் தியாகம்

பரீட்சித்து மன்னன், "யயாதி தேவயானியை எப்படி மணந்தான்? கடைசியில் ஏன் துறவியானான் என்பதைத் தயை செய்து சொல்லவேண்டும்?" என்று சுக முனிவரைக் கேட்டுக் கொண்டான். அந்த முனிவர் சொல்லலானார்:

"அசுர மன்னனான விருஷபவர்மனின் மகள் சர்மிஷ்டை சிறுமியாக இருந்தபோது ஆயிரம் தோழிகளும், குருவின் மகளான தேவயானியும் கூட வர, ஓர் உத்தியான வனத்துக்குப் போனாள். அங்கே மலர் சொரியும் மரங்களின் அடியிலும், வண்டுகள் ரீங்காரம் செய்யும் ஓடைக் கரைகளிலும் விளையாடினாள். பிறகு அந்தப் பெண்கள் ஆடைகளை அவிழ்த்துக் கரையில் வைத்து ஒரு குளத்தில் இறங்கினார்கள். கைகளால் நீரை வாரி ஒருவர் மேல் ஒருவர் இறைத்து மெய்மறந்து விளையாடிக்கொண்டிருந்தார்கள். அப்போது சிவபெருமான் ரிஷபத்தில் ஏறிப் பார்வதி தேவியோடு வானத்தில் போய்க்கொண்டிருந்தார். அவரைக் கண்டதும் அந்தப் பெண்கள் வெட்கத்தோடு கரையில் ஏறி ஆடைகளை உடுத்துக் கொண்டார்கள். சர்மிஷ்டை தன் ஆடை என்று எண்ணிக்கொண்டு தேவயானியின் ஆடையைக் கட்டிக்கொண்டாள்.

"தேவயானிக்குக் கடுங்கோபம் வந்துவிட்டது; 'பார்த்தீர்களா, இந்த அற்பப் பெண் செய்த காரியத்தை! மூன்று உலகமும் தொழும் பகவான் நாராயணர்கூட எங்கள் வம்சத்தவர்களைத் தெய்வமாக மதிக்கிறார். அப்படிப்பட்ட பிருகு வம்சத்தைச் சேர்ந்தவர் என் தந்தை. அவருடைய சிஷ்யன் இவள் தந்தை. என்னைவிட மட்டமான இவள் என் ஆடையை உடுத்துக்கொண்டாளே! என்ன துணிச்சல்!' என்று சீறினாள்.

"சர்மிஷ்டைக்கும் கோபம் வந்துவிட்டது. 'எண்டி, பிச்சைக்காரி, என் வீட்டுச் சோற்றுக்குத் தானே நீ காத்திருக்கிறாய்! என்னவோ பிரமாதமாகப் பேசு



**கிருஷ்ண பகவானின் லீலைகளை மட்டுமல்ல; இன்னும் எத்தனையோ அரிய கதைகளையும் சொல்வது பாகவதம். அதில் ஒரு பகுதி இது.**

கிறாயே!' என்று திட்டிக்கொண்டே தேவயானியை அங்கிருந்த ஒரு கிணற்றில் தள்ளிவிட்டாள். பிறகு தோழிமாரோடு அரண்மனைக்குப் போய்விட்டாள்.

"அப்போது யயாதி வேட்டையாடிவிட்டு அந்தப் பக்கமாக வந்து கொண்டிருந்தான். தாகம் எடுக்கவே அந்தக் கிணற்றில் நீர் இருக்கிறதா என்று எட்டிப் பார்த்தான். அங்கே தேவயானி இருப்பதைக் கண்டதும், 'ஐயோ பாவம்! யாரோ பெண் நீரில் தவிக்கிறாளே' என்று தன் மேல்துணியை அவளிடம் போட்டு உடுத்துக்கொள்ளச் சொன்னான். பிறகு தன் கையால் அவளுடைய கையைப்பற்றி வெளியேற்றினான். அப்போது தேவயானி, 'ஐயா, நீங்கள் என் கையைப் பிடித்துவிட்டதால் இனி மேல் யாரும் அதைத் தொடுவதற்கில்லை. ஆகவே, நாம் இரண்டு பேரும் மணப்பது தெய்வ சம்மதம் என்றுதான் தோன்றுகிறது. அதோடு பிருகஸ்பதியின் மகனான கசன் எனக்கு ஒரு சாபம் இட்டான். அதன்படி பிராம்மணன் எவனும் எனக்குக் கணவனாக மாட்டான்' என்றாள்.

"ஆனால் யயாதிக்கு அவள் சொன்னது சரி என்று படவில்லை. இருந்தாலும், அவள்மேல் மனம் செல்லவே அவள் விருப்பத்துக்கு இணங்கினான்.

"யயாதி அங்கிருந்து போனதும் தேவயானி அழுதுகொண்டே தந்தையிடம் வந்தாள். நடந்ததைச் சொன்னாள். சுக்கிராசாரியர் வருத்தமுற்று, 'இனி இந்தப் புரோகிதத் தொழில் வேண்டாம்' என்று அதை விட்டுவிடத் துணிந்தார். பிச்சை எடுத்துப் பிழைப்பதே மேல் என்று எண்ணினார். 'விருஷபவர்மனின் பகைவர்களுக்கு இந்த ராஜ்யத்தை வாங்கிக் கொடுத்துவிடுகிறேன்' என்று தீர்மானித்தார்.

"இதைக் கேட்டதும் அவன் ஓடிவந்து அவரை வணங்கி, 'தங்கள் இஷ்டப்படி என்ன வேண்டுமானாலும் செய்கிறேன். கோபித்துக்கொள்ளாதீர்கள்' என்று வேண்டிக்கொண்டான். சுக்கிராசாரியருடைய கோபம் வெகுநேரம் நீடிப்பதில்லை. பிறகு சுக்கிரா

சாரியர், தேவயானி இவர்கள் விருப்பப்படி விருஷபவர்மன் சர்மிஷ்டையை அவளுக்கு அடிமையாக இருக்கச் சொன்னான். சுக்கிராசாரியர் யயாதிக்குத் தேவயானியோடு சர்மிஷ்டையையும் கொடுத்தார்; அப்போது, 'சர்மிஷ்டை உன் அருகில் நெருங்காதபடி பார்த்துக்கொள்' என்று அவனுக்கு எச்சரித்தார். 'சரி' என்று அவன் அதற்கு இணங்கினான்.

''ஒரு சமயம் தேவயானி குழந்தையும் கையுமாக இருப்பதைச் சர்மிஷ்டை பார்த்தாள். தனக்கும் குழந்தை வேண்டும் என்று அவளுக்கு ஆசையாக இருந்தது. யயாதியிடம் வந்து தனக்கும் குழந்தை வேண்டும் என்று கேட்டுக்கொண்டாள். சுக்கிராசாரியர் எச்சரித்தது அவனுக்கு நினைவு வந்தது. அவன் சங்கடத்தில் ஆழ்ந்தான். ஆனாலும் சர்மிஷ்டையின் வேண்டுகோளைப் புறக்கணிக்க மனம் வரவில்லை.

''தேவயானிக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் சர்மிஷ்டைக்கு மூன்று ஆண் குழந்தைகளும் பிறந்தார்கள். சர்மிஷ்டை கர்ப்பம் தரித்தாள் என்று தெரிந்ததுமே தேவயானி கோபித்துக்கொண்டு தந்தையின் வீட்டுக்குப் போய் விட்டாள். சுக்கிராசாரியரும் கோபத்தோடு, 'பெண் மோகத்தால் சொன்ன சொல் தவறிவிட்டாயேடா! உனக்கு இப்போதே கிழத்தனம் வந்துவிடவேண்டும்' என்று யயாதியைச் சபித்தார்.

''யயாதி, 'ஸ்வாமி, இன்னும் எனக்குச் சிற்றின்பத்தின்மேல் உள்ள ஆசை அடங்கவில்லையே! அப்படிச் சபிக்க வேண்டாமே!' என்று கேட்டுக்கொண்டான். அதற்குச் சுக்கிரர், 'நீ இந்தக் கிழத்தனத்தை யாருக்காவது கொடுத்து அவர்களிடமிருந்து இளமையைப் பெற்றுக்கொள்' என்றார்.

''பிறகு யயாதி தன் மூத்த மகனான யதுவிடம் போய், 'அப்பா! உன் தாத்தா என்னைக் கிழவனாகும்படி சபித்துவிட்டார். என் கிழத்தனத்தை நீவாங்கிக்கொண்டு எனக்கு உன் இளமையைக் கொடேன்' என்றான். யது, 'நானே இன்னும் உலக சுகத்தை அநுபவிக்கவில்லை. அப்படி இருக்கும்போது உனக்கு அதைக் கொடுத்துவிட முடியுமா? மாட்டேன்' என்றான். இதே மாதிரி அவன் தம்பிமாரும் சொன்னார்கள். ஆனால் இளைய மகனான பூரு என்பவன் மிகவும் குணசாலி. அவன் உடனே தன் இளமையை யயாதிக்குக் கொடுத்தான்.

''யயாதி பல காலம் தேவயானியோடு இன்பம் அநுபவித்து வாழ்ந்தான். அப்படியும் அவனுடைய ஆசை தணியவில்லை. 'ஆசையை அநுபவிக்க அநுபவிக்கப் பேராசைதான் அதிகமாகிறது. ஆகவே, இனிமேல் இதையெல்லாம் விட்டுப் பரம்பொருளைத் தியானிக்க வேண்டும்' என்று அவன் தீர்மானித்தான்.

பூருவிடம் போய்த் தன் கிழத்தன்மையைத் திரும்ப வாங்கிக்கொண்டான்; பூருவையே சக்கரவர்த்தியாக்கினான். பிறகு யயாதி காட்டுக்குப் போய்த் தவம் செய்தான். பரம்பொருளோடு ஒன்றானான்.

''தேவயானியும் தன்னிடமே வெறுப்புற்றாள். பரம்பொருளைத் தியானிக்கலானாள். உயர்நிலையை அடைந்தாள்.''

# குடை எப்படிச் செய்கிறார்கள்?

**பானு சிர்தன்கர்**

**குடை மிகப் பழங்காலம் முதல் நம் நாட்டில் இருந்துவருகிறது. ஏக சக்கராதிபத்தியத்துக்கு அடையாளம் வெண் கொற்றக்குடை. கோயில்களில் உள்ள வெண்பட்டுக் குடைகளும் வெள்ளிக் குடைகளும் பிரசித்தமானவை. இந்தக் குடை போடுவதற்கென்றே பயிற்சி பெற்றவர்கள் பலர் இருக்கிறார்கள். சாமானிய மனிதனுக்கும் மழையிலும் வெயிலிலும் குடை வேண்டியிருக்கிறது. இதோ இந்தக் குடை செய்யும் தொழிலைப்பற்றிய விவரம்.**

நமது நாட்டில் குடைகள் தயாரிப்பதும் அவற்றை வாங்கி விற்பதுமாகிய வியாபாரம் முழுவதும், பெரும்பாலும் முஸ்லிம்களின் கையிலே இருக்கிறது. காக்ஜீ புருஷோத்தம், பாலவ் பிரதர்ஸ் முதலிய இரண்டொரு தொழிற்சாலைகளைத் தவிர மற்றவையெல்லாம் அவர்களுடையனவே.

மழை அதிகமாகப் பொழியும் இடங்களில் இருப்பவர்களுக்குக் குடை அவசியமாக இருப்பது போலவே, வெப்பம் மிகுந்த வறண்ட இடங்களிலும் அது தேவையாக இருக்கிறது. கிழக்கு வங்காளம், அஸ்ஸாம், தார்ஜீலிங் ஆகிய இடங்களைப்போலவே நாக்பூரிலும், மத்திய பாரதத்தில் வெப்பம் மிகுதியான பிரதேசங்







காப்பிரைட்: உத்யம் (மராட்டி: ஜுலை '54), நாக்பூர்.

களிலும் குடை இல்லாமல் நடக்காது.

பாரத நாட்டில் மிகப் பழங்காலம் முதலே குடை இருந்திருக்கிறது. பேஷ்வாக்களின் காலத்திலும் அதற்கு முன்பும் பிரம்புக் குடை இருந்து வந்தது. அது நன்ருக உழைக்கக் கூடியதாகவும் வடிவில் பெரியதாகவும் இருந்தது.

பிரம்புக் குடைக்கும் முன்னுல் மூங்கிற் குடைகள் வழக்கத்தில் இருந்தன. மூங்கில் தண்டுகளின் மேல் உலர்ந்த அகலமான இலைகளை நெருக்கமாக வைத்துத் தைப்பார்கள். இந்தக் குடைகளை மடிக்கவோ திறக்கவோ முடியாது.

மழைக் காலத்தில் ஒரு பொட்டுத் தண்ணீர்கூட இந்தக் குடைகளின் வழியாக உள்ளே வராது. அதனுல் அஸ்ஸாம் பக்கத்தில் இவை இன்னமும் உபயோகத்தில் இருக்கின்றன. அங்கே மூங்கில் மரங்கள் ஏராளமாக இருப்பதனுல் இந்தக் குடை எளிதாகவும் மலிவான விலையிலும் தயாராகிறது.

இந்த மாதிரியான குடைகள் வருவதற்கு முன்பே நம் நாட்டில் சம்பங்கூடைகள் வழக்கத்தில் இருந்தன. இவற்றிலும் மூங்கில் பிளாச்சுகளை வைத்து ஓலைகளைத் தைத்திருப்பார்கள். பட்டிக்காடுகளில் இப்பொழுதும் இவற்றைப் பயன்படுத்துகிருர்கள். இவற்றில் முக்கியமான அநுகூலம், நாம் இரண்டு கைகளையும் கொண்டு வேலை செய்யலாம். மழைக்காலத்தில் பயிர் வேலைகளுக்குக் குடைகளைக் காட்டிலும் நன்ருகவும் வசதியாகவும் இவை பயன் படுகின்றன.

மூங்கில் தண்டுக் குடைகள் இன்று அதிகமாக வழக்கில் இல்லாவிட்டாலும் சில இடங்களில் சில குறிப்பிட்ட வேலைகளுக்குப் பயன்படுகின்றன. 'கார்டன் அம்ப்ரெல்லா' என்னும் குடை மூங்கில் தண்டுகளால் செய்யப்படுவது. இது 20, 25 அடி உயரம் இருக்கிறது. இதைத் திறந்ததும் இதன்கீழ் இருபத்தைந்து பேர் தாராளமாக உட்காரலாம். இந்தக் குடைக்குக் குறைந்தது ரூ. 250 விலையாகும். இவ்வளவு பெரும்பரப்புள்ள குடைக்குத் தேவையான இரும்புக் கம்பிகள் கிடைக்காமையால், உறுதியும் வளையக்கூடியதுமான பிரப்பந்தண்டையே உபயோகிக்கிருர்கள்.

இந்தியாவில் முதல்முதலில் கல்கத்தாவில்தான் குடை செய்யும்தொழிற்சாலைகள் தோன்றின. கிழக்கு வங்காளத்திலும் அஸ்ஸாமிலும் மழை ஏராளமாகப் பெய்வதனுல் இந்த ஆலைகளுக்குத் தேவை ஏற்பட்டது. அதற்கு முன்பு குடைகளை இங்கிலாந்திலிருந்தே வரவழைத்து வந்தார்கள்.

1860-இல் பம்பாயில் இப்ராஹிம் கரீம் என்பவருடைய தொழிற்சாலை ஆரம்பமாயிற்று. அவருடைய 'மான் மார்க்' குடைகள் இன்றும் பிரசித்தியானவை. இதற்குப் பிறகு சுமார் எழுபத்தைந்து வருஷங்கள் வரைக்கும் பம்பாயிலும் கல்கத்தாவிலுமே குடை தயாரிக்கும் தொழிற்சாலைகள் இருந்தன. பம்பாயில் இப்ராஹிம் கரீமின் தொழிற்சாலை ஒன்றுதான் பல வருஷங்கள் வரைக்கும் குடைகளைத் தயாரித்து வந்தது. இப்பொழுது அதற்கு இணையாக நாக்ஜீ புருஷோத்தம், ஹாஜீ

காஸம், பாலவ் பிரதர்ஸ், ராயல் அம்ப்ரெல்லா மார்ட் - இப்படிப் பிரசித்தமான தொழிற்சாலைகள் பம்பாயில் நன்றாக நடந்து வருகின்றன. குடை உற்பத்தியிலும் தொழிற்சாலைகளின் தரத்திலும் வங்காளந்தான் இப்பொழுதும் முன்னணியில் இருக்கிறது. வங்கத்திலும் அஸ்ஸாமிலும் மழை மிதமிஞ்சி இருப்பது இதற்கு ஒரு காரணம். தவிர, குடைகளுக்கு வேண்டிய காம்புகளும் அங்கே நிறையக் கிடைக்கின்றன. மலபார் இனத்தைச் சேர்ந்த மூங்கில்கள் வங்காளத்தில் அதிகமாக இருக்கின்றன. ஹூக்ளி நதியின் இருகரையிலும் சேற்றில் இவை தாமாக ஓங்கி வளர்கின்றன. இவற்றை வளர்க்கச் செலவு ஏதும் இல்லையாதலால், இவை மிகவும் மலிவாகக் கிடைக்கின்றன.

பம்பாயைப் போலவே கள்ளிக்கோட்டையிலும் சென்னையிலும் குடை தயாரிக்கும் தொழிற்சாலைகள் இருக்கின்றன. மலையாளத்தில் என்றுமே குடைகளுக்குக் கிராக்கி. உடையைப்போலவே குடையும் அங்கே நாகரிகத்துக்கு அடையாளம்.

குடை செய்யும் தொழிலில் காம்புதான் மிகவும் முக்கியம். இதற்கு வேண்டிய மலபார் இன மூங்கிலும் ராவி மூங்கிலும் கல்கத்தாவிலிருந்து வருகின்றன. இரும்புக் காம்புகளும் ஓரளவு பயன்படுகின்றன. முன்பெல்லாம் இந்தக் காம்புகள் இத்தாலியிலிருந்து வரும். செர்ரி பிளாஸம் காம்புகள் மிகவும் பெயர் பெற்றவை; ஆனால் வெளிநாடுகளிலிருந்து இவ்வளவு சரக்குத்தான் வரலாம் என்ற கட்டுப்பாடு இருப்பதனால் இப்போது இவை அதிகமாக வருவதில்லை. இரும்புக் காம்புகள் அமெரிக்காவிலிருந்தும் ஓரளவு வருகின்றன. கம்பிகளைப் பொருத்தும் குமிழும், விசையும் அவற்றில் ஏற்கனவே பொருத்தியிருக்கும். பம்பாயிலும் இப்பொழுது இரும்புக் காம்புகள் தயாரிக்கிறார்கள். அவற்றில் சிக்காகோ காம்புகள் புகழ் பெற்றவை.

குடை செய்வதற்கு அடுத்தபடி வேண்டியது குடைக்கம்பி. ஜப்பான், ஜெர்மனி, இத்தாலி, அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து இவை வந்துகொண்டிருந்தன. இவற்றில் இத்தாலிக் கம்பிகள் விசேஷமானவை. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு வெளிநாட்டிலிருந்து இவை அதிகமாக வருவதில்லை. பம்பாய் ராஜ்யத்தில் காந்திவ்லி என்ற இடத்தில் ஜே. கே. ஸன்ஸ் என்னும் கம்பெனியார் இப்போது கம்பிகள் தயாரிக்கிறார்கள். இவர்களுடைய சாம்பியன் கம்பிகளுக்கு நல்ல கிராக்கி இருக்கிறது. குடையைத் திறந்தவுடனே தாமரை போல இருக்கும் கம்பிகளைக் கல்கத்தாக்காரர்கள் பெரிதும் விரும்புகிறார்கள். குடைக்கு வேண்டிய மற்றச் சாமான்களான நட், நோஸ், ரன்னர், வைஸர்ஸ் முதலியவை கல்கத்தாவிலிருந்து வருகின்றன.

குடைக்கு வேண்டிய துணிகள் நம் நாட்டிலேயே தயாராகின்றன. குறிப்பிட்ட ரசாயனச் செயலினால் இந்தத் துணிகளில் தண்ணீர் புகாதபடி செய்கிறார்கள். கறுப்பு நிறத்தில்தான் இந்த ரசாயனச் செயல் செய்ய முடியும். அதனால்தான் குடைக்குக் கறுப்புத் துணியை உபயோகிக்கிறார்

கள். மேலும், இதில் கறை பட்டாலும் கெடாது. இந்தத் துணி 22, 25, 44 அங்குல அகலத்தில் இருக்கும். குடைக்கு வேண்டிய துணிகளைப் பம்பாயில் ஸெஞ்சுரி, மொரார்ஜி, எல்ஃபின்ஸ்டன், கோஹினூர், கிரேட் மில்ஸ், டாடா மில்ஸ் ஆகிய ஆலைகள் தயாரிக்கின்றன. இந்த விஷயத்தில் நம் நாடு தன் தேவையைப் பூர்த்தி செய்துகொண் டிருக்கிறது என்பது மகிழ்ச்சிக்குரியது.

குடைக்கு வேண்டிய பிடிகள் பல வகையானவை. மரம், இரும்பு, கண்ணாடி, பிளாஸ்டிக் - இவைகளாலான பல பிடிகள் இப்பொழுதெல்லாம் கவர்ச்சிகரமாகவும் அழகாகவும் வருகின்றன. பம்பாயிலும் காந்திவ்லியிலும் குடைப் பிடி செய்யும் பிரபலமான தொழிற்சாலைகள் இரண்டு இருக்கின்றன.

குடைக்கு வேண்டிய எல்லாச் சாமான்களும் ஒரே தொழிற்சாலையில் தயாராவதில்லை. நாட்டின் பல பாகங்களிலிருந்து அவற்றை வரவழைத்துத் தொழிற்சாலையில் குடைகளைத் தயாரித்து மொத்த வியாபாரிகளுக்கு விற்கிறார்கள். குடை செய்யும் தொழிற்சாலை ஒன்றைப் புதிதாக ஆரம்பிக்க வேண்டுமானால் குறைந்தது ஐயாயிரம் ரூபாய் முதல் போட வேண்டும். இந்தத் தொழிற்சாலையில் ஒரு நாளைக்கு 40 அல்லது 50 டஜன் குடைகள் தயாராகும். குடைகளைத் தைப்பதற்கு, மின்சார விசையில் செல்லும் பல யந்திரங்கள் இப்போது வந்திருக்கின்றன.

தேவைக்கு வேண்டிய அளவு குடைகளைத் தயாரித்து அவ்வப்பொழுது விற்றுவிடுவதுதான் நல்லது. துணிகளை நீண்ட நாள் வைத்திருந்தால் கெட்டுப் போகும்; கம்பிகளில் துருப் பிடிக்கும்; பிடிகள் கறுத்துப் போகும். ஆகையால், அவ்வப்பொழுது விற்காவிட்டால் நஷ்டம் வரும்.

இந்தியாவில் வருஷந்தோறும் கோடிக்கணக்கான ரூபாய்க்குக் குடைகள் விற்பனையாகின்றன. சர்க்கார் ஆபீஸிலுள்ள சிப்பந்திகளுக்கும் போலீஸ்காரர்களுக்கும் ஆயிரக்கணக்கான குடைகள் தொழிற்சாலையிலிருந்து நேராகப் போகின்றன. குடை ஒவ்வொருவருக்கும் அன்றாடத் தேவைப் பொருளாதலால் இந்த வியாபாரம் மேன்மேலும் வளருவதற்கு இடம் இருக்கிறது.

### குழந்தை வளர்கிறது

பதில் உள்ள கேள்விகளைக் குழந்தை கேட்கத் தொடங்கிவிட்டால், அது வளர்கிறது என்று அர்த்தம்.

—'லேடீஸ் ஹோம் ஜர்னல்', யு.எஸ்.ஏ.

### வீட்டுக்காரி உதவி

**வீட்டுக்காரி** (குடிக்கூலிக்கு வந்தவரிடம்): உங்களுக்கு ஏதாவது சாமான் தேவையானால், என்னிடம் தெரிவியுங்கள். அது இல்லாமலே சமாளிக்க வழி சொல்லித் தருகிறேன்.

—'ஹாலிடே க்ளப்மான்', லண்டன்.

# ஜயதீர்த்தர்

★

மத்வ குரு பரம்பரையில் ஆறவது பீடத்தை அலங்கரித்தவர் இவர். மத்வரின் நூல்களுக்கு உரை எழுதியவர். இவரைப்பற்றி உலவும் சம்பிரதாய ரீதியான இந்த விவரம் ஏதோ கதைபோல் விநோதமா யிருக்கிறது.

ஸ்ரீ ஜயதீர்த்தர் மத்வாசார்யருடைய கிரந்தங்களுக்கு உரை எழுதியவர். இவருக்கு 'டீகாசார்யர்' என்று பெயர். ஜயதீர்த்தர் மத்வ மகாசிம்மாசனத்தை ஐந்தாவது பட்டத்துக்காரராக அலங்கரித்தார்.

1. மத்வாசார்யர் 1233-1318
2. பத்மநாபதீர்த்தர் 1318-1324
3. நரஹரிதீர்த்தர் 1324-1333
4. மாதவதீர்த்தர் 1333-1350
5. அக்ஷோப்யர் 1350-1365
6. ஜயதீர்த்தர் 1365-1388

மத்வாசார்யரைச் சிஷ்யர்கள், "தங்கள் கிரந்தங்களுக்கு வியாக்கியானம் எழுதுவது யார்?" என்று கேட்டார்கள். அருகிலிருந்த எருதைக் காட்டி, "இதுதான் எழுதப் போகிறது" என்ருர் ஸ்ரீ மத்வாசார்யர். நம்மில் யாரையும் எழுதச் சொல்லாமல் ஓர் எருதுக்கு இவ்வளவு பாக்கியம் கொடுத்தாரே என்று பொருமை கொண்டு, "அது பாம்பு கடித்து இறக்கக் கடவது" என்று சிஷ்யர்கள் சபித்தார்கள். எருதும் அப்படியே இறந்தது. அதை மத்வாசார்யர் பிழைப்பித்து, அது ஞானி என்று சிஷ்யர்களுக்குக் காட்டுவதற்காக அதன் வாயிலிருந்து துவாதச ஸ்தோத்திரத்தை வரவழைத்தாராம். மாத்வர்களின் வீட்டில் போஜனத்துக்கு முன் விஷதோஷம் நீங்குவதற்காகத் 'துவாதச ஸ்தோத்திரம்' சொல்லுகிருர்கள்.

மத்வாசார்யருடைய உபந்நியாசங்களை இந்திரனே காளைமாடாக வந்து கேட்டுக்கொண்டிருந்தான். மத்வாசார்யர் காலத்துக்குப் பிறகு அக்ஷோப்ய முனிவர் தமக்குப் பின் மத்வ பீடத்துக்கு யார் வருவாரோ என்று கவலைப் பட்டுக்கொண்டிருந்தார்.

அக்ஷோப்யர் வித்யாரண்ய ஸ்வாமி என்ற அத்வைத வித்வானை, 'தத்வமஸி' என்ற அத்வைத வாக்கியத்தையே கொண்டு வாதித்து ஜயித்தார். வேதாந்த தேசிகர் இந்த வாதத்துக்கு மத்தியஸ்தராயிருந்து, 'அஸிநா தத்வமஸிநா பர ஜீவ ப்ரபேதிநா, வித்யாரண்யம் மஹாரண்யம் அக்ஷோப்யமுநிரச்சிநத்' (தத்வமஸி என்ற கத்தியால் அக்ஷோப்யர் வித்யாரண்யராகிய மஹாரண்யத்தை வெட்டி வீழ்த்தினர்) என்று சுலோகம் எழுதினர்.

மூலம்: தேவஸ்தானப் பத்திரிகை (தமிழ்: 11-7-'54) சாத்தாரத் தெரு, ஸ்ரீரங்கம்.

கவலையோடு கிடந்த அக்ஷோப்யரின் கனவில், "குதிரை சவாரியாக வந்து கீழே இறங்காமல் மாடுபோல ஆற்று நீரை உறிஞ்சிக் குடிப்பவனே மத்வ பீடத்தை அலங்கரிப்பான்" என்று யாரோ சொல்லிப் போனுர்.

யாத்திரையாகப் போகும் அக்ஷோப்யர் பண்டரீபுரத்தில் பீமரதி நதிக்கரையில் இப்படிச் சொப்பனம் கண்டார். மறு நாள் ஒரு சிறுவன் குதிரை மேலேறி வந்து கீழிறங்காமலே ஆழத்தில் போய் உறிஞ்சி நீர் அருந்தினுன். 'இவன் முன் ஜன்மத்தில் மாடாயிருக்க வேண்டும்' என்று நினைத்து, அவனை அக்ஷோப்யர் அருகில் அழைத்தார். அவருடைய கடாட்சம் பட்டவுடன் சிறுவனுக்குச் சகல சாஸ்திரங்களும் தெரியலாயின. அவனே மத்வ பீடத்துக்குத் தகுந்தவனென்று, அக்ஷோப்யர் அவனுக்குச் சந்நியாசம் கொடுத்தார். சிறுவன் படுத்து உறங்குகையில் அவனைச் சந்நியாசம் பெறச் சொல்லி ஈசுவரன் ஆக்ஞாபித்தான். குதிரை வீரன் சந்நியாசி யானுன்.

அவன் பண்டரீபுரத்துக்கு அருகிலுள்ள மங்கள்வேட் கிராமத்தில் ரகுநாத ராவ் என்ற யுத்த வீரனுடைய குமாரன். அவனுடைய தாய் ரக்கமா பாய். இவனுக்குத் தொண்டு ராவ் என்று பெயர். இவர்கள் மாத்வப் பிராம்மணர்கள். தொண்டு ராவுக்கு விவாகம் ஆகி ருது சாந்தி முகூர்த்தம் சமீபித்த சமயம். காலையில் குதிரை சவாரி போன சிறுவன் வீடு திரும்பவில்லை. தகப்பன் பல இடங்களிலும் தேடிக் கடைசியில் அக்ஷோப்யரின் ஆசிரமத்தில் மகனைக் கண்டான். அவனைச் சந்நியாசி ஆக்கினதுபற்றிக் கடுமையாகக் கோபித்தான். அக்ஷோப்யர் நடந்த விவரம் சொல்லி, "சந்நியாசத்தை மாற்றி உங்கள் மகனை அழைத்துப் போனுலும் எனக்கு ஆட்சேபமில்லை" என்ருர். தகப்பன் அப்படியே அவனை அழைத்துப் போய் ஒரு நல்ல நாளில் முகூர்த்தம் வைத்து மகனையும் மருமகளையும் பள்ளியறைக்கு அனுப்பினுன். சந்நியாசியை மனைவி தொட்டுக் கெடுக்காமல் இருக்கும்படி ஆதிசேஷன் தோன்றினுன்; கட்டிலில் உட்கார்ந்திருந்த வாலிபனைச் சுற்றி அணைத்து அவன் தலையில் தன் படத்தால் குடை பிடித்தான். இதைக் கண்ட பெண் பயந்து அலறி வெளியே ஓடினுள். தகப்பன் முதலானவர்கள் ஓடி வந்து பார்த்துத் தங்கள் குற்றத்தை உணர்ந்து, மன்னிக்க வேண்டுமென்று பகவானைப் பிரார்த்தித்தார்கள்.

தகப்பன் தன் மகனை அழைத்துப் போய் அக்ஷோப்யரிடம் விட்டு மன்னிப்பு வேண்டினுன். "உன் குலம் செழிப்பதற்கு இன்னெரு மகன் பிறப்பான்" என்று முனிவர் ஆசீர்வாதம் செய்தார். சிஷ்யருக்கு ஜயதீர்த்தர் என்று பெயரிட்டார். அக்ஷோப்யரிடம் ஜயதீர்த்தர் எல்லா கிரந்தங்களையும் உபதேசம் செய்தார்.

ஜயதீர்த்தர் பாமினி ராஜ்யத்துக்குப் போய் நாகோளம் என்ற மலையின் குகையில் இருந்து கொண்டு, மத்வாசார்யருடைய கிரந்தங்களுக்கு 'டீகா' எழுதிப் புகழ்பெற்ருர்.

வித்யாரண்யர் ஜயதீர்த்தருடைய டீகைகளையும் பாண்டியத்தையும் பார்த்து மகிழ்ந்து

அவருக்குத் தம் யானையில் யானை வாகன உற்சவம் செய்து வைத்தார்.

அக்ஷோப்யர் 1365-இல் மார்க்கசீர்ஷ கிருஷ்ண பஞ்சமியில் பிருந்தாவன ப்ரவேசம் செய்தார். அவருடைய பிருந்தாவனம் மல்கேடாவில் உள்ளது. வாடி, குல்பர்கா ஸ்டேஷன்களுக்குச் சமீபத்தில் இருக்கிறது மல்கேடா.

ஒரு ராஜா குளம் கட்டினான். அதன் கரைகள் இடிந்து விழுந்து கொண்டேயிருந்தன. ஜயதீர்த்தரின் அநுக்கிரகத்தால் அவை நன்றாக அமைந்தன.

ஜயதீர்த்தர் மலைக் குகையிலேயே அதிகமாக வசித்து வித்யாதிராஜர் என்பவருக்குப் பட்டம் கட்டி 1388 ஆடி ஸ்ரீ கிருஷ்ண பஞ்சமியில் தம் ஆசார்யரின் அந்திம ஸ்தானமாயுள்ள மல்கேடாவிலேயே பிருந்தாவன ப்ரவேசம் செய்தார்.

## தகுதியும் ஊதியமும்

பின்னால் நோபல் பரிசு வாங்கிய ஸிங்க்ளேர் லூயிஸ் என்பவர், வாலிபத்தில் ஃப்ரெடரிக் எல். ஸ்டோக்ஸ் அண்ட் கம்பெனி என்ற பிரசுரகர்த்தர்களின் விளம்பர இலாகாவில் வேலை பார்த்துக்கொண்டிருந்தார். வாரம் ஒன்றுக்கு 23-டாலர் அவருக்குச் சம்பளம். இரண்டாவது வருஷத்தில், "இன்னும் இரண்டு டாலர் சம்பள உயர்வு வேண்டும்" என்று துணிச்சலோடு அவர் கேட்டுவிட்டார்.

முதலாளி ஸ்டோக்ஸ் அப்படியே சம்பள உயர்வு கொடுத்தார். ஆனால், அப்படிக் கொடுக்கும்போது, "லூயிஸ், நீ நல்ல புத்திசாலியான வாலிபன்தான். ஆனாலும் அடிக்கடி சம்பள உயர்வு கேட்கிறாயே; இது சரியல்ல. நீ இப்போது பார்க்கும் வேலைக்கு இதுவே மிக உயர்ந்த சம்பளம். என்ன, தெரிந்ததா?" என்றார்.

இதற்குப் பிறகு பதினைந்து வருஷம் ஆகவில்லை. அதே முதலாளி ஸ்டோக்ஸ், அதே லூயிஸுக்கு, புதிய நாவல் ஒன்றுக்காக, அதன் கையெழுத்துப் பிரதியைக்கூடப் பார்க்காமலே, மெய் நம்பிக்கையாக 75,000 டாலர் அட்வான்ஸ் கொடுக்க முன் வந்தார்.

—பென்னெட் ஸெர்ஃப், 'ஆம்னிபுக்.'

## பெரிய முட்டாள்

சில வருஷங்களுக்கு முன்னால் ஒரு பத்திரிகையில் இப்படி விளம்பரமொன்று வந்தது: "நவீன யுகத்தின் அற்புதமான ஆராய்ச்சி! பேனாவும் மையும் இல்லாமலே எழுத முடியும். விவரங்களுக்கு ஒரு ரூபாய் அனுப்புங்கள்." ஆயிரக்கணக்கான பேர் இதைப் பார்த்துப் பணம் அனுப்பினார்கள். மறு தபாலிலேயே அவர்களுக்குப் போஸ்ட் கார்டில் பதில் வந்தது: "பெ. மு. அவர்களே, பென்சிலை உபயோகப்படுத்துங்கள்." (பெ. மு=பெரிய முட்டாள்.)

—'புக் லவர்', பம்பாய்.

சிற்பச் செல்வம் நிறைந்த தமிழ் நாட்டு ஸ்தலங்களுள் ஒன்று-

# தீவிலே திருக்கோவில்

**பிலோ இருதயநாத்**

கோவளத்திலிருந்து சுமார் இரண்டு மைல் தெற்கே மணலில் நடந்து சென்றால், பிரசித்தி பெற்ற 'திருவிடவெந்தைக் கோவில்' இருக்கிறது. இது பண்டைக் கோவில்களில் ஒன்று. கோவளத்திலிருந்து மணல் மார்க்கமாகவே நடந்து செல்ல வேண்டும். காலை பத்து மணிக்குமேல் சூடான மணலில் நடப்பது லேசான காரியமல்ல.



திருவிடவெந்தைக் கோவில்

திருவிடவெந்தைக் கோவில் இருப்பதால் இதற்குத் திருவிடவெந்தைக் கிராமம் என்று பெயர் வழங்கலாயிற்று. இந்தக் கோவில் விஜயராஜேந்திர தேவசோழன் காலத்தில் கி. பி. 1052-இல் பெருமாளுக்குக் கட்டியதாம். அவருடைய பூர நட்சத்திர நாளைப் பிரதிமாதமும் கொண்டாடி வருகிறார்கள். இந்தக் கோவில் மிகவும் பழமையாக இருக்கிறது. எண்ணெய் விளக்குத் தவிர வேறெதையும் காணவில்லை. மின்சார விளக்குகள் போட இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் ஆகுமோ, ஆண்டவனுக்குத்தான் தெரியும்! ஏனென்றால், தெருக்களில் இன்று மண்ணெண்ணெய் விளக்குக்கூடக் கிடையாது; அவ்வளவு குக்கிராமம்!

சென்னை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவில் உற்சவத்தின்போதுதான் திருவிடவெந்தையிலும் திருவிழா நடைபெறும். இந்த வருஷம் ஏப்ரல் 18உ ஞாயிறன்று திருவிழாவுக்காகக் கொடி ஏற்றினார்கள்.

கோவிலைச் சுற்றிப் பல்லவர்களின் சிற்பச்சாயல் உள்ள பல சிலைகள் இருக்கின்றன. இங்கே கோவில் கொண்டுள்ளவர் ஆதி வராகப் பெருமாள். இவருடைய மனைவியை இவர் இடது கையால் அணைத்துத் தூக்கித் தம் தடையின்மேல் வைத்திருக்கிறார். இவருடைய முகம் வராக உருவத்தில் இருப்பதற்கு ஒரு கதையும் இங்கே சொல்லுகிறார்கள். ஆனால், அது எவ்வளவு தூரம் சரித்திர ஆதாரத்தைக் கொண்டுள்ளதோ தெரியாது.

தாயாரின் பெயர் கோமளவல்லி. இன்று கோவளத்திலே இருக்கும் 'நாச்சியார்' குளத்தில் அவர் அவதரித்தாராம். கோமளவல்லிபுரமே நாளடைவில் மருவிக் 'கோவளம்' ஆனது என்றும்,

காப்பிரைட்: சுதேசமித்திரன் (தமிழ்: 15-5-'54), சென்னை.



கைலாசநாதர் கோவில் காமாட்சி அம்மன்

டச்சுக்காரர்கள் இதைக் கோவிலாங் என்று அழைத்தார்கள் என்றும் கூறுகிறார்கள்.

கோவிலில் எழுந்தருளியிருக்கும் ஆதிவராகப் பெருமாளுக்கு நித்திய கல்யாண தேவர் என்று மற்றொரு பெயருண்டு. அதாவது, அவருக்குப் பிரதிதினமும் திருமணமாவதாக ஓர் ஐதிகம் உண்டு. கோவிலின் முக்கியமான விசேஷம் என்னவென்றால், உயர்ந்த தந்தத்தால் அழகிய வேலைப்பாடுகள் அடங்கிய ஒரு பெரிய பல்லக்கு இருக்கிறது. இந்தத் தந்தப் பல்லக்கை இன்றைக்கெல்லாம் பார்த்துக்கொண்டே இருக்கலாம்.

இந்தத் தந்தப் பல்லக்கு ஒன்றே திருவிடவெந்தையின் பெருமையை எடுத்துக் காட்டுகிறது. திருவிழாக் காலங்களில் ஐந்தாம் நாளும் பத்தாம் நாளும் இந்தப் பல்லக்கை உபயோகிக்கிறார்கள்.

கி. பி. 1052 இல் விஜயராஜேந்திரதேவ சோழன் காலத்துக்குப் பல ஆண்டுகளுக்கு முன்னே கோவளம் கடற்கரையோரத்தில் ஒரு மகாமுனிவர் இருந்தாராம். அவர் தம்முடைய சக்தியால் ஒரு நாளைக்கு ஒருத்தி வீதம் 365 அழகிய மங்கையரைச் சிருஷ்டித்தாராம். ஒருநாள் அந்த ரிஷி 365 மங்கையரையும் அழைத்து, "நீங்கள் யாரை மணந்துகொள்வீர்கள்?" என்று கேட்டாராம். "நாங்கள் அத்தனை பேரும் ஒரே ஆடவனைத்தான் மணப்போம்" என்று பெண்கள் கூறினார்களாம். அதைக் கேட்ட முனிவர் பல நாள் வருத்தத்துடன் இருந்தாராம். இதைக் கண்டதும் கடவுள் ஒரு பிராம்மண வடிவம் கொண்டு, "முனிவரே, தாங்கள் ஏன் வருத்தத்துடன் இருக்கிறீர்கள்?"



டச்சுக்காரர் கட்டிய கோட்டை

என்று கேட்டாராம். அதற்கு முனிவர் தம் பெண்களின் நோக்கத்தை வெளியிட்டாராம்.

கடவுள், "முனிவரே, 365 மங்கையரையும் நானே திருமணம் செய்துகொள்கிறேன்" என்று கூறினாராம். பிறகு 365 பெண்களையும் அழைத்து, "நீங்கள் எல்லோரும் எந்த அவதாரத்தைக் கண்டால் அச்சப்படுவீர்கள்?" என்று கேட்டாராம்.

"நாங்கள் வராக அவதாரத்தைக் கண்டால்தான் பயப்படுவோம்" என்று மங்கையர் கூறினர்களாம். உடனே அந்தப் பிராம்மணர் வராக அவதாரத்தில் தோன்றினாராம். அதைக் கண்டதும் மங்கையர் எல்லாரும் 'ஓ' என்று அலறிப் பக்கத்திலே இருந்த குளத்திலே விழப்போனார்களாம். உடனே பிராம்மண ரூபத்தில் வந்த கடவுள் அவர்களைத் தடுத்து, எல்லாரையும் ஒன்றாகச் சேர்த்து அணைத்து ஒரே மங்கையாக்கித் தம் இடக்கையால் தூக்கி இடது துடையின்மேல் வைத்துக்கொண்டாராம்.

இன்றும் இந்தக் கோலத்துடன் பெருமாளைத் திருவிடவெந்தையில் காணலாம். அந்த மங்கையர் விழுந்த குளம் இன்றும் பெரியதாகவும் சுத்தமான நல்ல தண்ணீர் உள்ளதாகவும் 'நாச்சியார் குளம்' என்ற பெயருடன் கோவளத்திலே இருக்கிறது. ஒரே பெண்ணாக்கிய பின் கோமளவல்லி என்று பெயர் கொடுத்தாராம் பிராம்மணர்.

அன்று 365 மங்கையரும் தனித்தனியாகக் குளிப்பதற்கென்று 365 குளங்கள் முனிவர் ஏற்படுத்தினாராம். இன்றும் கோவளத்திலிருந்து மாமல்லபுரம் வரையில் 365 குளங்கள் இருக்கின்றன. 365 குளங்களின் தண்ணீரையும் கொண்டுவந்து திருவிழாக் காலத்திலே இன்றும் அபிஷேகத்துக்கு உபயோகப்படுத்துகிறார்கள்.

கோமளவல்லிபுரத்தில் பதினேழாவது நூற்றாண்டில் டச்சுக்காரர் கட்டிய கோட்டையும் ஒரு மருந்துக்கிடங்கும் இன்று இடிந்து கிடக்கின்றன. அன்வாருத்தீன் அரசனாக இருந்த காலத்தில் 'கோட்டை வீடு' என்று ஒரு மாளிகை கட்டினானும். படகில் கோவளத்துக்குப் போகும்போது நடுத் தண்ணீரில் இன்றும் அதைக் காணலாம்.

கோவளத்தில் பண்டைக்காலத்திலே கட்டிய கைலாசநாதர் கோவில் ஒன்றும் இருக்கிறது. 'கைலாசநாதர்' என்றதும் எல்லாருடைய சிந்தனைகளும் காஞ்சிபுரத்தின்மேல் செல்லும். ஆனால் இங்கும் ஒருவர் உண்டு. இவருடைய கோவில் மிகவும் பழமையானது. கோவிலுக்குள் ஒரே கல்லில் சிற்ப வேலைப்பாடுகள் செய்த அம்மன், பைரவர், மகாவிஷ்ணு ஆகிய மூன்று சிலைகள் இருக்கின்றன. இவைகளைக் காணும்போது காஞ்சிபுரம், மாமல்லபுரம் முதலிய இடங்களில் காணும் சிற்பங்களைப் போலவே இருக்கின்றன.

### கோபம் வேண்டாம்

உங்களைவிட அதிகமாக ஒருவர் விஷய அறிவு பெற்றிருப்பதற்காக அவரிடம் கோபம் கொள்ளாதீர்கள். அது அவர் குற்றம் அல்ல.

—'பில்லர்'

# எல்லாரும் வைத்தியரே

பதினாறாம் நூற்றாண்டில், இத்தாலி தேசத்தில் ஆல்ஃபான்ஸோ டி எஸ்ட் என்று ஒருவர் இருந்தார். அவர் பெர்ராரா சம்ஸ்தானத்து அதிபதி. ஒரு நாள் அவர், "சாதாரணமாக எந்தத் தொழிலில் அநாயாசமாகப் பெரும்பான்மையான ஜனங்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்?" என்று ஒரு கேள்வி கேட்டார். ஆஸ்தான விதூஷகன் கோனெல் என்பவன், "வைத்தியத் தொழிலில்தான் நூற்றுக்குத் தொண்ணூறு பேராவது இருப்பார்கள்" என்று சொன்னான்.

மறு நாள் காலையில் தலையில் பலமான ஒரு கட்டைக் கட்டிக்கொண்டு வீட்டைவிட்டு விதூஷகன் புறப்பட்டான்.

சிறிது தூரம் போனவுடனேயே சிநேகிதன் ஒருவன், "என்னப்பா, கோனெல்! தலையில் என்ன கட்டிக்கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டான்.

"இரண்டு நாளாகப் பொறுக்க முடியாத பல்வலி; முகம் தலையெல்லாம் ஒரே குத்து வலி" என்றான் கோனெல்.

சிநேகிதன், "அடாடா! ஏன் தம்பி, இப்படி அவதிப்படுகிறாய்! இன்ன மருந்தை ஒரே ஒரு தடவை போட்டால் வலி இருந்த இடம் தெரியாமல் போய்விடும்!" என்றான்.

இது போலவே பற்பல தெருக்களிலும் அவன் சந்தித்த ஆப்தர்களும் நண்பர்களும் அவனிடம் அநுதாபம் காட்டி, 'கைகண்ட' ஔஷதங்களை எடுத்துரைத்தார்கள். கடைசியில் அதிபதியின் சபைக்கு இவன் வந்து சேர்ந்தான்.

விதூஷகனின் கட்டைப் பார்த்த அதிபதி, "என்ன விதூஷகரே! உடம்பு சௌக்கியமில்லையா?" என்றார்.

"இல்லை, மகாராஜா! நேற்று இரவிலிருந்து அசாத்தியமான பல்வலி" என்றான் விதூஷகன்.

"ஐயோ பாவமே! இதற்குப் பேஷான மருந்து ஒன்று சொல்கிறேன், கேளும். நம் ஆற்றங்கரையில் 'ஆற்று அலரி' என்ற ஒரு செடி புதர் புதராக முளைத்திருக்கும். அதில் ஒரு பிடி கொண்டுவந்து நசுக்கிக் கஷாயமிட்டுச் சுடச்சுட இரண்டு முறை கொப்புளியும். வலி விட்டுப் போகும்" என்றார் அதிபதி.

கோனெல் தன் தலைக் கட்டை அவிழ்த்து எறிந்துவிட்டு, "மகாராஜா! வீட்டைவிட்டுப் புறப்பட்டு, இங்கே சமூகம் வந்து சேருவதற்குள், சுமார் நூறு ஆசாமிகள் என் பல்வலிக்கு நூறு வித மருந்துகளைக் குறிப்பிட்டிருப்பதை இதோ என் 'டயரி'யில் குறித்து வைத்திருக்கிறேன். தாங்கள் உள்பட இந்த ஊரில் ஒவ்வொருவரும் டாக்டர்தான்" என்று கூறி நகைத்தான்.

—டி. எஸ். ராகவாசாரி, 'தினமணி சுடர்.'

குடிசைத் தொழில்கள் வளரப் பாகிஸ்தான் சர்க்கார் பேருதவி செய்கிறது.

# வீடே தொழிற்சாலை

★

பாகிஸ்தானில் பல நுண்ணிய கைத்தொழில்கள் நடந்து வருகின்றன. சாதாரணமாக, வீடுகளிலேயே எளிய கருவிகளையும் பிற சாதனங்களையும் கொண்டு இப்படிப் பல நுண் பொருள்களைத் தயாரித்து வருகிறார்கள். பாகிஸ்தானின் ஜனத்தொகையில் 90 சதவிகிதம் பேர் கிராமவாசிகள். அவர்கள் விவசாயத்தைப் பிழைப்பாகக் கொண்டு வாழ்ந்து வருகிறார்கள். அதோடு, பரம்பரைக் குடிசைத் தொழில்களும் அவர்கள் ஜீவனோபாயத்துக்கு முக்கியமாக இருக்கின்றன.

கிராமாந்தரத்தில் ஆயிரக்கணக்கான வீடுகளில் இந்தமாதிரி தொழிலாளிகள் ஓய்வு நேரங்களில் மரம், சலவைக் கல், வெள்ளி இவைகளில் அருமையான வேலைப்பாடமைந்த பொருள்களைச் செய்கிறார்கள்; கம்பளம், ஜமுக்காளம், பருத்திநூல் ஆடை இவைகளை நெய்கிறார்கள்; தோலாலும் உலோகத்தாலும் பல பொருள்கள் தயாரிக்கிறார்கள்; சட்டி, பானைத் தினுசுகளும் விளையாட்டுச் சாமான்களும் ரண சிகிச்சைக்குரிய கருவிகளுங்கூடச் செய்கிறார்கள். இவை எல்லாமே நன்றாக விலை போகக்கூடியவை. குடும்பத்தில் உள்ள எல்லாருமே இவர்களுக்கு ஒத்தாசையாகச் சுற்று வேலையெல்லாம் செய்கிறார்கள்.

ஆனால் இவர்களுக்கு, பாவம், எவ்வளவோ இடையூறுகள் இருக்கின்றன. முக்கியமாக, சமயத்தில் குறைந்த வட்டிக்கு எளிதில் பணம் கிடைப்பதில்லை; தொடர்ந்து மூலப் பொருள்கள் நியாயமான விலைக்குக் கிடைப்பதில்லை. அவைகளிலிருந்து தயாரித்த பொருள்களை விற்பனை செய்வதற்குரிய வசதிகளும் போதவில்லை. ஆயினும் சில ஆண்டுகளாகப் பாகிஸ்தான் சர்க்கார் நாட்டின் தொழில் வளர்ச்சிக்குச் சிறு கைத்தொழில்கள் அவசியம் என்பதை உணர்ந்து வருகிறார்கள். இந்தத் தொழிலாளரைத் தேடி வந்து இவர்களுக்கு ஊக்க மூட்டியும் வருகிறார்கள். ஆகவே, பாகிஸ்தான் தொழில் வளம் சிறந்த நாடாக விளங்கக் குடிசைத் தொழில்கள் பெரிதும் துணை புரியும் என்று எதிர்பார்க்கலாம்.

பாகிஸ்தான் குடிசைத் தொழில் டைரக்டரேட் என்ற ஸ்தாபனம் பொருள் விநியோக இலாகாவின் ஒரு பகுதியாகும். இப்போது இந்த இலாகாவினர் இப்படிப் பல தொழில்களைப் பரிசீலனை செய்து,

மூலம்: காமன்வெல்த் டுடே (ஆங்கிலம்: நம்பர் 28), செண்ட்ரல் ஆபீஸ் அவ் இன்ஃபர்மேஷன், லண்டன்.

கவர்னரே நேரில் போய்க் கண்டு,
இந்த அதிசயப் பையனைப்பற்றி
வர்ணிக்கிறார்.

# ஓநாய்ப் பையன்

கே. எம். முன்ஷி

மந்திரவாதி மாயக் கோலை ஆட்டினால் ஊரே விழித்துக்கொள்ளுமாம். அந்த மாதிரி சமீபத்தில் லக்னௌவில் நடந்த ஒரு விசேஷம் உலகத்திலுள்ள செய்திப் பத்திரிகைகளில் எல்லாம் பிரமாதமாக அடிபட ஆரம்பித்துவிட்டது. நூறு ஆண்டுகளுக்கு முன், டில்லி பாதுஷாவாக இருந்த வஜீத் அலி ஷா தம் காலில் சதங்கை கட்டிக்கொண்டு லக்னௌ தெருக்களில் ஆடிக்கொண்டே போனாராம். அப்போதுதான் இப்படிப் பிரமாதமாக லக்னௌவின் பெயர் அடிபட்டது. அப்புறம் அந்த மாதிரி பெயர் எடுக்கவேயில்லை; இப்போதுதான் மறுபடியும் அதன் பெயர் அடிபடுகிறது; ஓநாய்ப் பையன் சங்கதியைத்தான் சொல்கிறேன்.

3,000 ஆண்டுகளுக்கு முன் ரோமாபுரியில் ரோமுலஸ், ரீமஸ் என்று இரண்டு பையன்கள் இருந்தார்கள். பெண் ஓநாய் ஒன்று அவர்களைக் கொழுக்கு மழுக்கென்று வளர்த்ததாம். அவர்கள் எல்லாரோடும் சண்டை போடுவார்களாம். பெண்களைத் தூக்கிக்கொண்டு போய்விடுவார்களாம். ஆனால் லக்னௌ அந்த மாதிரி பெயர் எடுக்கவில்லை. கௌரவமான ஊராயிற்றே லக்னௌ? ஓநாய் பால் கொடுத்து, ஓநாய்க் கூட்டமே வளர்த்த ராமு என்ற பையன் இங்கேதான் இருக்கிறான். யாரோ ஊர் பெயர் தெரியாத கிராமவாசிகள் அவனை ஓர் ஓநாய்க் கூட்டத்திலிருந்து எடுத்து வந்துவிட்டதாகத் தெரிகிறது. ரெயில் வண்டிக்குள் ஒரு போர்வையில் பையனைச் சுற்றி வைத்திருந்தார்களாம். ஜனவரி 17 - ஆம் தேதியன்று போலீஸார் ஜரூராக வந்து இதைக் கண்டு பிடித்தார்கள். இப்போது பலராம்பூர் ஆஸ்பத்திரியில் டாக்டர் டி. என். சர்மா என்பவர் பையனை மிகவும் பரிவோடு கவனித்து வருகிறார். ஓநாய்களோடு இத்தனை ஆண்டுகளாகப் பழகிய ஒரு பையனைக் கொஞ்சத்தில் மாற்ற முடிகிறதா? இருந்தாலும் தம்மால் முடிந்த மட்டும் பழைய போக்கை மாற்ற முயன்று வருகிறார்.

கொஞ்ச நாள் வரையில் லக்னௌ முழுவதும் இதுவே பேச்சாக இருந்தது. அவன் அசல் ஓநாய் வளர்த்த பையனேதான் என்ற செய்தி உலகம் முழுதும் இப்போது ஊர்ஜிதமாகிவிட்டது. முதலில் பல டாக்டர்கள் ‘ஸ்டெதாஸ்கோப்’பும் கையுமாகப் பையனைப் பார்க்க வந்தார்கள்.

ஃப்ரீ இந்தியா (ஆங்கிலம்: 27-6-'54), ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை.

மனத் தத்துவ நிபுணர்கள் பென்ஸிலும் பேனவும் வைத்துக் கொண்டு தங்கள் சாமர்த்தியத்தை யெல்லாம் காட்டி, 'ஓநாயாவது, வளர்ப்பதாவது! ஏதோ மூளைக் கோளாறு' என்று முடிவு கட்டப் பார்த்தார்கள்; ஆனல் அதெல்லாம் பலிக்கவில்லை. பையன் அசல் ஓநாய் வளர்த்த பையனே தான் என்பது ருஜுவாகி விட்டது. லக்னௌவின் கீர்த்தி என்றுல் லேசா? அதை யாரால் தட்டிப் பறிக்க முடியும்?

கடல் கடந்த நாடுகளிலிருந்து இளகிய நெஞ்சம் படைத்த சிலர், ''மனிதர்கள் வாழும் சூழ்நிலை யில் பையனை வளர்க்காதீர்கள். பழையபடியே, அவனை அருமை யாக வளர்த்த அந்த ஓநாய்க ளிடமே கொண்டு சேர்த்துவிடுங் கள்'' என்று தந்தி அடித்தார்கள். வெகு தூரத்திலுள்ள நாடுகளி லிருந்தெல்லாம் குழந்தைகள் அவனுக்கு விளையாட்டுச் சாமான் களும் வாழ்த்தும் அனுப்பி வைத் தார்கள். ராமுவின்மேல் அவ் வளவு ஆசை அவர்களுக்கு. ஆனு லும் ராமு முன் போலவேதான் இருக்கிறுன்; உலகந்தான் அவ னைப்பற்றி இப்படிக் கவலைப்படு கிறதே யொழிய அவனுக்கு அதைப்பற்றித் துளியாவது அக்கறையில்லை!

அப்புறம் ஒரு நாள் கவர்னர் என்ற ஹோதாவில் காரியதரிசி, மெய்காப்பாளர் இப்படிப் பரிவார சகிதம் ஆஸ்பத்திரிக்கு நானே விஜயம் செய்தேன். பையனைப் பார்த்தேன். அப்போது இன்னும் ராமு என்று அவனுக்குப் பெயர் வைக்கவில்லை. அப்புறம் அவனைத் தேடிக்கொண்டு ஆஸ்பத்திரிக்குப் பல பேர் ஓடோடி வந்தார்கள். ஓநாய் வளர்த்த பையன் என்றுல் லேசா? படித்துப் பட்டம் பெற்ற பிள்ளைகளைவிட அவனை வைத்துக் கொண்டு வெகு சீக்கிரத்தில் ஏராளமான பணம் குவித்துவிடலா மல்லவா? ஓர் ஏழைக் குடும்பமும் பிழைத்துப் போகும். 'பெற்றோர் கள்' வந்து பார்த்தார்கள். சிலர் வழக்குக்கூடத் தொடுத்தார்கள். ஆனல் அவர்களுக்கு, பாவம், அதிர்ஷ்டம் இல்லை. கோர்ட்டா ருக்குத் திருப்தி ஏற்படும்படி பையன் தங்கள் மகன்தான் என்பதை ருஜுப்பிக்க முடியாமல் திரும்பிப் போய்ச் சேர்ந்தார்கள்.

ஆஸ்பத்திரியில் அதே வார்டில் இருக்கும் நோயாளி ஒருவர் பையனைக் கவனிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண் டிருக்கிறுர். இவ ருக்குத் தலை மயிர் நீளமாக வளர்ந்திருக்கிறது. ஆசாமி வேண்டுமென்றேதான் வளர்த் துக்கொண் டிருக்கிறுரோ, 'இத் தனை நாள் ராமு ஓநாய்களோடு பழகி வளர்ந்திருக்கிறுனே; பழைய சூழ்நிலை ஞாபகத்துக்கு வரட்டும்' என்றுதான் இப்படி வளர்த்துக்கொண் டிருக்கிறுரோ என்னவோ தெரியவில்லை! எப் படியோ அவர் ராமுவை ஆஸ்பத்தி ரித் தாழ்வாரத்தில் தள்ளுவண்டி நாற்காலியில் தள்ளிக்கொண்டு போகும்போது பார்த்தால், அவ ருக்கும் பையனுடைய நிலைக்கும் பொருத்தமாகத்தான் இருக் கிறது.

ஜனவரி மாதக் கடைசியில் தான் முதல் தடவையாக அந்தப் பையனைப் பார்த்தேன். அப் போதே அவனுடைய பரட்டைத் தலை மயிரையெல்லாம் கத்தரித்து விட்டிருந்தார்கள். அவன் மண்டை, நெற்றிக்கட்டு, உடலில்

எலும்பு குத்திட்டு நிற்கும் இடங்கள் இங்கெல்லாம் தேய்ந்து தேய்ந்து ரணம் பட்ட மாதிரி வடுக்கள் இருந்தன. அவை ஆறித்தான் இருந்தன. பையன் தளர்ந்தும், பட்டினி கிடந்து வாடியும், ஏதோ திகிலோடும் இருப்பது போலத் தோன்றினான். வெளிச்சத்தையே பார்க்கப் பிடிக்கவில்லை அவனுக்கு. மனிதர்களை யும் கவனிப்பதில்லை; வெறிச்சென்று இருந்தது அவன் பார்வை. கிள்ளிவிட்டாற் போல் இருந்தது அவன் வாய்; மேல்வாய் முன்னம் பற்கள் இரட்டை வரிசையாக அமைந்திருந்தன. அவை கூர்மையாக வெளியில் நீட்டிக்கொண் டிருந்தன. சாதாரணமாக வாய் திறந்தபடி இருந்தது. அதன் இரண்டு ஓரமும் கோடுவாய் பெருகிக் கொண்டே இருந்தது. யார் கூப்பிட்டாலும் திரும்புவதுமில்லை; 'உம்' கூட்டுவதுமில்லை. விலாவண்டையில் தொட்டுக் கிண்டிப் பார்த்தார்கள்; மிகவும் சிரமப்பட்டுத் திரும்பிப் பார்த்துவிட்டு எரிச்சலோடு, 'ஞ்ஞா' என்று மெதுவாகக் கத்தினான் பையன். ஒன்று, பையன் பிறவியிலேயே ஊமையாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால், மனிதர்களோடு பழகாததால் பேசத் தெரியாமல் போயிருக்க வேண்டும். ஆனால் காதுமட்டும் கூர்மையாகக் கேட்கிறது; மனிதர்களைப் போலப் பேச வரவில்லை: அவ்வளவுதான்.

அவன் கையும் காலும் எலும்பும் தோலுமாக இருந்தன. பெயருக்குக்கூடத் தசையோ சதைப் பற்றோ இல்லை. நடக்கவோ நிற்கவோ அவனால் முடியவில்லை. இதுவரை நடந்துகூட அறிந்திருக்க மாட்டான் போல் இருக்கிறது. அவனுடைய அவயவங்களெல்லாம் குறுகிக் கிடந்தன. தன் இஷ்டம் போல் கையை ஆட்டவும் அவனால் முடியவில்லை; நம்மைப் போலவும் அதை உபயோகிக்கத் தெரியவில்லை. அவனுடைய உள்ளங்கை குழந்தையினுடையதைப் போல் மெதுவாக இருந்தது; ஆனால் விரல்கள் மட்டும் விலங்கின் நகங்களைப் போல் இருந்தன; அவைகளை மடக்கி மூடிக்கொண் டிருந்தான் பையன்: அதுவும் இடதுகையைப் பார்க்க வேண்டும் - அதிலுள்ள விரல் நகம் நீண்டு வளைந்து அசல் விலங்கின் நகத்தைப் போலவே இருந்தது. 'முழங்கையை ஊன்றித் தத்திச் செல்லத்தான் தெரியும். வேறு எந்த விதமாகவும் அவனுக்கு நகரக்கூடத் தெரியாது. நிற்கக்கூட முடியாத குறுகிய இடத்தில் அவன் வளர்ந்திருக்க வேண்டும்' என்றுதான் தோன்றியது.

ஆஸ்பத்திரிக்கு வந்த புதிதில் சமைத்த உணவு எதைக் கொடுத்தாலும் தூர விட்டெறிந்து விடுவான். ஆனால் பச்சை மாமிசத்தைப் பார்த்தால் போதும்; அவன் கண் பளபளவென்று ஆகிறது; மூக்கு விரிகிறது; மோப்பம் பிடிக்கிறான் - அது என்னதான் தூரத்தில் இருந்தாலும் சரி. வெகு திருப்தியோடு இரண்டொரு தடவை மட்டும் மென்றுவிட்டு உடனே விழுங்கி விடுகிறான். ஆஸ்பத்திரிக்கு வந்து மூன்று மாதத்துக்கு மேலாகிறது; இன்னும் பச்சை மாமிசந்தான் அவனுக்குப் பிடிக்கிறதே யொழியச் சமைத்த உணவென்றால் ஆவதேயில்லை. லோட்டாவோ, கண்

ணுடிக் கோப்பையோ கொடுத்து நீர் ஆகாரம் சாப்பிடச் சொன்னால் நடக்காது. தட்டில் அதை வார்த்துவிட வேண்டும். பையன் நாய்மாதிரி நக்கிக் குடிக்கிறான்! மலமூத்திர விஷயத்தில் நம்மைப் போல் கூச்சப்படுவதில்லை; விலங்கு களைப்போலவே நடந்துகொள் கிறான். மனிதர்களைப் பொறுத்த வரையில் எல்லாரும் ஒரே மாதிரி தான் அவனுக்கு. இப்போது அவ னைக் கவனித்து வரும் 'செவிலித் தாயை'க்கூட (அந்த ஆளைத் தான் சொல்கிறேன்) அவன் சட்டை செய்வதேயில்லை. ஆனால் ஏதாவது ஆல்ஸேஷிய ஜாதி நாயை அவன் அருகில் கொண்டு வந்தால் போதும்; துள்ளி எழுந்து அதை அணைத்துக்கொள்கிறான்.

ராமுவை மிருகக் காட்சிச்சாலை யில் ஓநாய்கள் இருக்கும் இடத் துக்கு அழைத்துப் போய்ப்பார்க்க வேண்டும் என்று இருந்தது எனக்கு. மே மாத ஆரம்பத்தில் சர்தார் பணிக்கரும் நானும் ஸ்ரீமதி முன்ஷியும் டாக்டர்களும் பையனை அழைத்துக்கொண்டு அங்கே போனோம். தள்ளுவண்டி நாற்காலியில் அவனைக் கொண்டு போய் நிறுத்தினோம். ஆனால் கும்பல் கூடிவிடவே ஓநாய்கள் மூலையில் பதுங்கிக்கொண்டன. இந்த நிலை யில் ராமுவின் கண்ணில் தட்டுப் படும்படி அவைகளைக் காட்டுவ தென்றால் வெகு சிரமமாக இருந்தது.

இந்தத் தடவை அவன் உடம்பு சற்றுத் தேறியிருந்தது. அவ னுடைய காலையும் கையையும் கொஞ்ச நாளாகப் பிடித்து வந்தார்கள். அதனால் முன் போல் அவ்வளவாக எலும்பும் தோலுமாகக் காட்சி யளிக்க வில்லை. எடையும் சற்று ஏறித்தான் இருக்க வேண்டும்; இருந்தாலும், சகஜமாக ஒரு பத்து வயதுப் பையன் இருக்கவேண்டிய ரீதியில் அவன் இல்லை.

அப்புறம் சிரமப்பட்டு அந்த ஓநாய்களை எங்கள் பக்கம் வர வழைத்தோம். அவை அவனெதிரே சுற்றிச் சுற்றி வந்தன. அவைகளைப் பார்த்ததும் ராமுவின் முகம் மலர்ந்தது; சிரித்தான். ஆனால் அவன் சமிக்ஞை எதுவும் செய்யவு மில்லை; உம், ஆம் என்றுகூடச் சத்தம் பண்ணவில்லை. அவை களைப் பார்த்ததில் அவனுக்குத் திருப்தி என்றுமட்டும் தெரிந்தது.

ஆனால் நாங்களெல்லாரும் ராமு வின் பக்கத்தில் இருக்கவே அந்த ஓநாய்கள் நெருங்கிவரப் பயப்பட் டுக்கொண்டு விலகியே இருந்தன. தள்ளுவண்டி நாற்காலி எதிரே அவைகளை நிறுத்திவைக்க முடிய வில்லை. கடைசியில், பிறந்து பதி னைந்தே நாளான ஒரு புலிக்குட் டியை அவன் எதிரே கொண்டு வைத்தார்கள். அப்போது அவன் முகத்தைப் பார்க்க வேண்டும்! ஒரே மகிழ்ச்சி. ஆவலோடு கையை ஆட்டி அதைப் பிடிக்க வந்தான். அதை அவன் மடியில் வைத்தார் கள். அவன் அன்போடு அதைத் தழுவிக்கொண்டான்.

இதையெல்லாம் பார்த்ததும், 'உண்மையாகவே அவன் ஓநாய் வளர்த்த பையனா, புத்தி மழுங் கிய குழந்தையா, வாயடைத்துப் போய்க் கைகால் விழுந்துவிட்ட நோஞ்சல் பையனா, இல்லா விட்டால் வேண்டுமென்றேதான் யாராவது இப்படி வளர்த்தார் களா?' என்று ஒரு நிலைப்படாமல் என்ன என்னவோ எண்ணத் தோன்றுகிறது. தப்பறியும் நிபுண

ளுக இருந்தால்தான் இதன் மர்மத்தை ஆராய்ந்து அறிய முடியும். ஒன்றுமட்டும் நிச்சயமாகத் தெரிந்தது: கைகால்களை உபயோகித்து அவனுக்குப் பழக்கமில்லை; பேசிப் பழகவுமில்லை; முழங்கையை ஊன்றித் தத்துவதைத் தவிர வேறு எந்த விதமாகவும் அவனுக்கு நகரத் தெரியவுமில்லை. இதுவரைக்கும் சமைத்த உணவையே அவன் சாப்பிட்டதுமில்லை. பச்சை மாமிசந்தான் அவனுக்குப் பிடித்தது. இந்த விவரங்களைக் கொண்டு மொத்தத்தில், 'பையன் நிமிர்ந்து நடக்க முடியாத இடத்தில், ஜனநடமாட்டமே இராதபடி வளர்ந்திருக்கிறான்' என்று தெரிகிறது.

வெளிச்சத்தைக் கண்டாலும் சரி, மனிதர்களைக் கண்டாலும் சரி அவனுக்குள்ள வெறுப்பையும், ஆல்ஸேஷிய ஜாதி நாயிடமும் ஓநாய்களிடமும் அவன் நடந்து கொண்ட விதத்தையும், கடைசியாக அந்தப் புலிக் குட்டியை அணைத்துக்கொண்டதையும் கவனித்தால் அவன் காட்டு விலங்குகளோடு பழகியிருக்கிறான் என்றுதான் தெரிகிறது.

புத்தி மழுங்கிய குழந்தை என்று வைத்துக்கொண்டால் கோப்பையிலிருந்து குடிக்கவோ, மனிதர்களைப் பார்த்ததும் சற்றுவது பழகவோ வருவான். அப்படியெல்லாம் செய்யாததால் புத்தி மழுங்கிய பையன் என்று சொல்வதற்கில்லை. ஆனாலும் (இங்கே வந்து மூன்று மாதங்களுக்கு அப்புறம்) பெயரிட்டுக் கூப்பிட்டால் இப்போது தெரிந்துகொள்கிறான். சிரிக்கிறான். தன்னைக் கவனித்துக்கொள்ளும் ஆளை அடையாளம் கண்டுகொள்கிறான். விளையாட்டுச் சாமான் என்றால் ஆசைப்படுகிறான்.

ஏதாவது நரம்பு சம்பந்தமான நோய் காரணமாக வாயடைத்துக் கைகால் முடங்கியிருக்கும் என்று சொல்வதற்குமில்லை. அவனை வைத்தியர்கள் பரிசோதித்ததில் அப்படி ஒன்றும் நரம்புக்கோளாறு இருந்ததாகத் தெரியவில்லை. மோப்பம், கூர்ந்து காது கொடுத்துக் கேட்பது, ருசி பார்ப்பது, தொட்டமாத்திரம் தெரிந்து கொள்வது இந்த உணர்ச்சிகள் அவனுக்கு விசேஷமாக உள்ளன.

இந்த மூன்றுமாத காலத்தில் அவன் மனிதர்கள் பேசுவதைக் கேட்டிருக்கிறான்; அவர்களோடு பழகியிருக்கிறான். அப்படியும் ஒரு வார்த்தையாவது தட்டித் தடுமாறிக்கூட அவன் வாயிலிருந்து வரவில்லை. ஏதாவது கோளாறு இருக்கலாமோ என்னவோ?

பம்பாயில் உள்ள குழந்தைகள் சம்ரட்சணைச் சங்கத்தில் மாங்காய்த் தலைப் பெண் குழந்தைகள் இரண்டு பேரைப் பார்த்திருக்கிறேன். தெருக் குரங்காட்டி குரங்கைப் பழக்கியிருப்பது போல் அவர்களையும் பழக்கியிருக்கிறார்கள். அவர்கள் சுத்த மண்டுக்கள். ஆனால் இளித்தார்கள்; தலையை ஆட்டினார்கள்; பொய்ச் சிரிப்புச் சிரித்தார்கள்; ஏதாவது கேட்டால் பதில் சொல்லி வந்தார்கள். சாதாரண மனிதர்களைப் போலவே கைகால் ஆட்டிச் சைகை செய்தார்கள்.

ஒரு வேளை இந்தப் பையனை யாராவது குழந்தையாக இருக்கும் போதே நாய்களோடு இருக்கப் பழக்கிப் பின்னால் இவனைக் கொண்டு வேடிக்கை காட்டிப் பணம் சம்பாதிக்கலாம் என்று

பார்த்தார்களோ என்னவோ? அப்புறம், பையன் செத்துப்போகிற நிலைக்கு வந்திருக்கலாம். அவனைக் கொன்றுவிட்டதாக யாராவது சொல்லிவிடப் போகிறார்களே என்று பயந்து ரெயில் வண்டியில் வைத்துவிட்டுப் போயிருக்கலாம். - இப்படிச் சில சமயம் தோன்றிற்று. ஆனால் ராமுவுக்கு இந்த மாதிரி வேடிக்கை விளையாட்டு ஒன்றுமே காட்டத் தெரியவில்லையே! அதோடு, அவனை ஆட்டிவைத்த ஆள் சாதாரண கிராமவாசியாக இருக்கும்பட்சத்தில் அவ்வளவு விலை கொடுத்துப் பச்சை மாமிசம் வாங்கிப்போட்டுப் பழக்கித்தான் இருக்க முடியுமா?

ஆகவே, யாராவது துப்பறியும் நிபுணர்தான் இதன் மர்மத்தைக் கண்டறிய வேண்டும். மனித சந்ததியே இராமல், விலங்குகள் மட்டுமே சஞ்சரிக்கும் இடத்தில் அவைகளைப் போலவே பச்சை மாமிசத்தைச் சாப்பிட்டுக்கொண்டும் முழங்கையை ஊன்றித் தத்திக்கொண்டும் பையன் வளர்ந்திருக்கவேண்டும். ஆகவே, நிச்சயமாக அந்த விலங்குகள்தான் அவனை வளர்த்திருக்க வேண்டும். அப்படியானால் அவை எந்த வகை விலங்குகளாக இருக்கும்?

பிராணி நூல் அறிஞர்கள், 'விலங்கினத்தில் மூன்றே மூன்றுதான் - அதுவும் பெண்கள் - இப்படி மனித இனத்தைச் சேர்ந்த சிறு குழந்தைகளைத் தாய்போல் அன்போடு வளர்க்கும்' என்று சொல்கிறார்கள். ஆப்பிரிக்க நாட்டு பாபூன் என்ற குரங்கு வகை, கரடி, ஓநாய் இந்த மூன்றையுந்தான் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆதிகாலத்தில் ரோமாபுரியில் ரோமுலஸ், ரீமஸ் என்ற குழந்தைகளை ஓநாய்கள் வளர்த்ததாக ஏற்கனவே கேள்விப்பட்டிருக்கிறோம். சமீபகாலத்தில் ரூட்யார்டு கிப்ளிங் என்ற பிரபல ஆங்கிலக் கவி எழுதிய 'ஜங்கிள் புக்' என்ற நூலில் மவுக்ளி என்று ஒரு பையன் வருகிறான். அவனை இப்படித்தான் சில விலங்குகள் வளர்க்கின்றன. பையனைப்பற்றிய விஷயம் அபாரமாக இருக்கிறது! இதைத் தவிர, சிங் என்ற கிறிஸ்துவப் பாதிரி ஒருவர் கமலா, அமலா என்ற இரண்டு பெண் குழந்தைகளை ஓநாய்கள் வசிக்கும் பொந்தருகில் கண்டெடுத்தாராம். ஒன்பது ஆண்டுகள் மேதினீபுர் அநாதை நிலையத்தில் அவர்களைக் கவனித்து வந்தார்களாம். லக்னௌ ஸிவில் சர்ஜன் ஒருவரும் இப்படிச் சில ஆண்டுகளுக்கு முன் 'ஓநாய்ப் பையன்' ஒருவனைக் கண்டாராம்.

ஓநாய்களைப் பொறுத்தவரையில் அவை இப்படி வளர்க்கும் என்று அறிஞர்களின் ஆராய்ச்சியிலிருந்து தெரிகிறது. ஒரு பெண் ஓநாய் இப்படிக் குழந்தையை வளர்க்க ஆரம்பித்துவிட்டால் ஓநாய்க் கூட்டமெல்லாம் சேர்ந்து அதைத் தங்கள் குழந்தையாகவே பாவித்துக் கவனித்து வருமாம். வேறு எங்காவது புறப்பட வேண்டியிருந்தாலும் அந்தக் குழந்தையை நடுவில் பத்திரமாக வைத்து அதனருகில் எதுவும் நெருங்காதபடி அழைத்துப் போகுமாம்.

ஒரு விஷயந்தான் புரிபடவில்லை; ஓநாய் வளர்த்த பையனாகத்தான் இருக்கட்டும்; ஏன் சகஜமாக நடக்கக்கூட அவனால் முடியவில்லை? இந்தமாதிரி இன்னொரு பையனைக் கவனித்துவந்த டாக்டர் ஒருவர், "அந்தப்

பையன் தன் முழங்கையை ஊன்றி முட்டிக்கால்போட்டு வெகு வேகமாக ஓடுவான்'' என்றார்.

ராமுவை ஓநாய் வளர்த்திருக்கும்பட்சத்தில், அவனும் அதே மாதிரி நடந்து பழகித்தானே உணவும் நீரும் அருந்தியிருக்கவேண்டும்? அவனை வளர்த்த ஓநாய் வழக்கம்போல் முதலில் துண்டு துண்டாக இருக்கும் மாமிசத்தை மென்று அவனுக்குக் கொடுத்துப் பழக்கியிருக்கலாம். அவன் முழங்கையை ஊன்றித் தத்தி நகர்ந்து கொண்டே நக்கி நக்கி நீரைக் குடித்துப் பழகியிருக்கலாம். இதிலிருந்து ஒன்று தோன்றுகிறது: பையனை ஓநாய்கள் கண்டெடுத்த சமயத்திலேயே அவன் கைகால்களை ஆட்ட முடியாத நோஞ்சல் குழந்தையாக இருந்திருக்க வேண்டும்; அதற்கு அநுசரணையாகவே ஓநாய்களும் அவனை வளர்த்திருக்க வேண்டும்.

இது உண்மையாக இருக்குமானால், அந்த ஓநாய்களின் பெருந்தன்மையை நாம் பாராட்டத்தான் வேண்டும். அதோடு இந்த மாதிரி நோஞ்சல் குழந்தை இத்தனை நாள் பிழைத்திருந்ததும் ஆச்சரியம் என்றுதான் சொல்ல வேண்டும்.

இன்னும் இந்தப் பையன் விஷயம் மர்மமாகவே இருக்கிறது.

## அன்பும் அணுவும்

இங்கிலீஷ் என் ஸைக்ளோபீடியா (கலைக் களஞ்சியம்) 1768 - ஆம் வருஷத்துப் பதிப்பில் 'லவ்' (காதல்) என்ற சொல்லுக்கு ஐந்து பக்க விளக்கம் எழுதியிருந்தது. 'ஆட்டம்' (அணு) என்ற சொல்லுக்கு நாலு வரி விளக்கம் இருந்தது. மிகச் சமீபத்தில் வெளி வந்திருக்கும் அதன் பதிப்பில் 'ஆட்டம்' (அணு) என்ற சொல் விளக்கம் ஐந்து பக்கம் இருக்கிறது. 'லவ்' (காதல்) என்ற சொல்லையே நீக்கி விட்டார்கள்.

—'லைஃப் டுடே'

## உத்தமர் லட்சணம்

கத்தோலிக்கப் பாதிரி ஒருவரும் யூதப் பாதிரி ஒருவரும் ஒரு விருந்துக்குச் சென்றார்கள். அவர்கள் உண்ண உட்கார்ந்தபோது, யார் பிரார்த்தனை (க்ரேஸ்) செலுத்துவது என்ற கேள்வி வந்தது. "நான் செலுத்தலாமா?" என்று கேட்டார் கத்தோலிக்கப் பாதிரி.

சரி என்ற பாவனையில் தலையை அசைத்தார் யூதப் பாதிரி.

விருந்தினரெல்லாம் தலை பணிந்தார்கள். கத்தோலிக்கப் பாதிரி பிரார்த்தனை வாக்கியங்களைச் சொல்லத் தொடங்கினார். எந்தப் பாஷையில்? யூதர்களின் ஹீப்ரு பாஷையில் தான்.

—டேவிட் ட்யூட்ஷ்

# அஜந்தா

இ. ஜே. எஸ்.

**பாரத நாட்டின் பழம் பெருங் கலைச் செல்வம் இந்தக் குகைச் சித்திரங்கள். இவை உலகமே வியக்கும் சிறப்பு வாய்ந்தவை. இவைகளைத் தேசீய பொக்கிஷமாகப் பாதுகாக்கவேண்டியது சர்க்கார் கடமை.**

ஹைதராபாது ராஜ்யத்தில், மத்திய ரெயில்வேயில் பம்பாயிலிருந்து டில்லி செல்லும் வழியில் ஜலகான் என்று ஒரு ஸ்டேஷன் இருக்கிறது. அதற்கு 37 மைல் தூரத்தில் தான் அஜந்தா என்ற சிற்றூர் இருக்கிறது. அவுரங்காபாதிலிருந்தும் மோட்டாரிலே போக முடியும்; அங்கிருந்து அஜந்தாவுக்குக் கிட்டத்தட்ட 60 மைல் இருக்கும். ஊருக்கு நாலுமைல் தள்ளி அழகான காட்டுப் பிரதேசத்தின் நடுவிலுள்ள வெளியில், மதில்போல் அமைந்த மலைச்சாரலில் பௌத்த காலச் சிற்பங்களைக் காணலாம். இதுதான் அஜந்தா. குகைபோல் குடைந்தெடுத்த கோயில்களுக்குள் மிகப் பழமையான சுவர்ச் சித்திரங்கள் இருக்கின்றன.



மிகப் பிரசித்திபெற்ற ஓவியம்: பெண் ஒருத்தி அலங்காரம் செய்து கொள்ளும் ஒரு காட்சி

இந்தக் கோயில்களுக்குச் 'சைத்தியம்' என்றும், இங்குள்ள மடாலயங்களுக்கு 'விஹார'ங்கள் என்றும் பெயர்கள் வழங்குகின்றன. கட்டிட அமைப்பு, சிற்ப வேலைப்பாடு, சித்திரத் திறமை எல்லாம் இணைந்து சிறப்புற்று நம் பழம் பெருமையை உணர்த்தும் அரிய கலைச்சின்னமாக விளங்குகிறது அஜந்தா.

'சைத்திய'ங்களிலும் 'விஹார'ங்களிலும் காணும் இந்தச் சுவர்ச் சித்திரங்கள் எல்லாமே ஒரே சமயத்தில் தீட்டியவை என்று சொல்வதற்கில்லை; கி. மு. 2-ஆம் நூற்றாண்டு வாக்கில் தொடங்கி, கி. பி. 7-ஆம் நூற்

றுண்டுவரை - அதாவது, சுமார் 800 வருஷகாலம் - இந்தச் சித்திரங்களைத் தீட்டியிருக்கிறார்கள் என்று தெரிகிறது. முதல் 400 ஆண்டுகளை 'ஹீனயான சிற்ப யுகம்' என்றும், பிந்திய 400 ஆண்டுகளை 'மகாயான சிற்ப யுகம்' என்றும் பகுத்திருக்கிறார்கள். முதல் பகுதிச் சிற்பம் எளிய முறையிலும் பின்பகுதிச் சிற்பம் பரந்த அளவில் பிரமாதமான வேலைப்பாட்டுடனும் அமைந்திருக்கின்றன. சைத்தியங்களில் விசித்திரமான முகப்புக்களையும் அரிய கைவேலையுள்ள தூண்களையும் இந்தப் பின்பகுதியில்தான் செதுக்கினார்கள். இப்படிச் சிற்ப அமைப்பைக் கொண்டே அவற்றின் காலத்தை அறிந்துகொள்ளலாம்.

ஆதிபௌத்தர்கள், நிர்வாணம் என்ற முக்தி நிலை அடையக் கடுமையான விரதமும் ஒழுக்கமும் தவமும் மேற்கொள்ள வேண்டும் என்று நம்பினார்கள். இதற்குத்தான் ஹீனயான பௌத்தம் என்று பெயர். புத்த பகவானுடைய உபதேச மொழிகளைக் கடுமையான முறையில் கடைப்பிடித்துவந்த பிட்சுக்களின் மார்க்கம் இது. துறவறத்தில் ஈடுபட்டவர்கள் இன்னபடி நடந்தொழுக வேண்டும், இல்லறத்தில் இருப்பவர்கள் இன்னது செய்யவேண்டும் என்று கண்டிப்பாக வரையறுத்திருந்தது ஹீனயானத்தில். மகாயானமோ எங்கும் எவரும் ஞானம் பெற வேண்டும் என்ற பரந்த நோக்கம் கொண்டது.

விஹாரங்களும் சைத்தியங்களும் கொண்ட குகைகள் மொத்தம் 29 இங்கே இருக்கின்றன. ½ மைல் நீளத்துக்கு இவை ஒரு வளையத்தின் பகுதிபோல் காட்சியளிக்கின்றன. சைத்தியங்களில் இரண்டு ஹீனயான ரீதியிலும், வேறு இரண்டு மகாயான ரீதியிலும் அமைந்துள்ளன. பௌத்த சைத்தியங்களின் இந்த அமைப்பும் பழைய கிறிஸ்துவ ஆலயங்களின் அமைப்பும் ஒரே மாதிரி இருக்கிறது. மூன்று பக்கமும் பிராகார வழி அமைந்து, அவை கூடும் இடத்தின் மையத்தில் அரைவட்டமான ஸ்தூபம் ஒன்று இருக்கிறது. இதுதான் சைத்தியத்தின் லட்சணம். மையத்தில் உள்ள சைத்தியத்தின் இரு பக்கத்திலும் தூண்கள் வரிசையாக அமைந்திருக்கின்றன. கிறிஸ்துவ ஆலயங்களில் மேடைபோல் அமைந்த



போதிஸத்வ பத்மபாணி

'ஆல்டார்' என்ற பகுதி இருக்கும் இடத்தில் ஸ்தூபம் இருக்கிறது; அவ்வளவுதான் வித்தியாசம். ஸ்தூபத்திலுள்ள மாடப் புரையில் எண்ணெய் விட்ட அகல் விளக்கு ஏற்றி வைத்தால் கிறிஸ்தவ ஆலயத்திலுள்ள 'ஆல்டார்' என்ற பீடத்தில் விளக்கு ஏற்றிவைத்த மாதிரியே இருக்கிறது. இந்த ஒற்றுமைக்குக் காரணம் என்னவென்று தெரியவில்லை; இது ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. விஹாரங்களைக் கவனித்தாலும் மேல்காட்டில் உள்ள மடாலயங்களைப்போலவே அமைந்திருக்கின்றன. மகாயான ரீதியில் அமைந்திருக்கும் விஹாரங்கள் மொத்தம் 20. இவற்றில் 1-ஆம் குகையிலும் 16-ஆம் குகையிலும் இருக்கும் விஹாரங்கள் பிற்காலப் பௌத்த சிற்பக் கலைச் சிறப்புக்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றன. 19, 26-ஆம் குகைகளில் உள்ள சைத்தியங்களும் இதே காலத்தைச் சேர்ந்தவைதான்; அபாரமான சிற்ப வேலைப்பாட்டையும், சிறந்த கட்டிட அமைப்பையும் இவைகளில் காணலாம். ஹீனயான பௌத்த யுகத்தில் செதுக்கிய 9, 10-ஆம் குகைகளையும் கவனித்தால்தான் இரண்டு வகைக்குமுள்ள வேறுபாடுகளை அறிந்து ரசிக்க முடியும். முன் சொன்ன மகாயான சைத்தியங்களும் விஹாரங்களும் பரந்த அளவில் நுணுக்கமான சிற்ப வேலைப்பாட்டுடன் அருமையாக இருக்கின்றன. தூண்களும் விசித்திரம் விசித்திரமான முறையில் அமைந்துள்ளன; முகப்பும் அழகுறச் செதுக்கப் பெற்று விளங்குகிறது. ஆனால் ஹீனயான ரீதியில் அமைந்த சைத்தியங்களும் விஹாரங்களும் சாதாரணமாகத்தான் இருக்கின்றன. 1 - ஆம் குகை - விஹார முகப்பின் வெளிப் பாகத்திலே பரந்த அளவில் அமைந்த சிற்ப வேலைப்பாட்டைக் காணலாம். முன் பக்க ஸ்தம்பம், தூண் இவைகளின் மேல் பகுதியிலும் இதேமாதிரி இருக்கிறது. பறக்கும் கந்தர்வர்கள், அப்ஸரப் பெண்கள் முதலியவர்கள் இந்திரனுக்குப் பணிவிடை செய்வது போல் அமைந்த அரிய வேலைப்பாட்டையும் இங்கே காணலாம்.

மகாயான யுகத்துப் புத்த உருவங்கள் வெவ்வேறு பாவங்களில் அருமையாகச் செதுக்கப் பெற்றிருக்கின்றன. ஓர் இடத்தில் புத்தர் சிம்மாசனத்தில் அமர்ந்து தாமரை மலரில் காலை வைத்திருக்கிறார்; வலது கையால் இடது கைச் சுண்டு விரலைப் பிடித்துக் கொண்டு காட்சி யளிக்கிறார். அவர் தொடங்கி வைத்த 'தர்ம சக்கரம்' என்னும் அற வழியின் உட்பொருளை விளக்குகிறது இந்தப் பாவம். எங்கும் சர்வ சகஜமாகக் காணும் தியானி-புத்த வடிவத்தையும் இங்கே காணலாம். அதன் முகத்தில் திகழும் அமைதியும் லயமும், ஆசை, காமம் இவைகளை முற்றும் வென்ற மன நிலையை அப்படியே எடுத்துக் காட்டுகின்றன. சில சமயம் ஹஸ்த முத்திரை அல்லது கை வைத்திருக்கும் பாணியிலிருந்து பற்பல பாவங்களைத் தெரிந்துகொள்ளலாம். முன் பகுதியான ஹீனயான யுகத்தில் கர்ப்பக்கிருகத்தில் ஒரே ஒரு புத்த உருவந்தான் அமைப்பது வழக்கம். மகாயான யுகத்துச் சிற்பிகளோ பல வகையான பாவங்களில் புத்தருடைய உருவத்தைச் செதுக்கியிருக்கிறார்கள். இன்று

அஜந்தாவிலுள்ள சைத்தியங்களிலும் விஹாரங்களிலும் காணும் இந்த வகைச் சிற்பங்களே பதினைந்து நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த அந்தப் பிரபல சிற்பிகளின் திறத்துக்குச் சான்றாக விளங்குகின்றன.

சிற்பக் கலையில் தம் கைவன்மையையெல்லாம் காட்டியிருப்பது போலவே சுவர்ச் சித்திரம் வரைவதிலும் அபாரமான திறமையைக் காட்டியிருக்கிறார்கள், அந்தக் காலத்து அஜந்தா ஓவியர்கள். பழைய இந்திய ஓவியங்களுள் இவைகளே மிக மிகச் சிறந்தவை. சிற்பம், கட்டிடக் கலை, ஓவியம் இந்த மூன்று கலைத் துறைகளும் அழகுற இணைந்து விளங்குவதாலேயே அஜந்தாவுக்கு இத்தனை சிறப்பு. கவனிப்பாரற்றுக் கிட்டத் தட்ட 1,500 ஆண்டுகளாக ஒரு விதமாகத் தாக்குப் பிடித்து வந்திருக்கின்றன, இந்தச் சித்திரங்கள். இவைகளைக் கண்டு பிடித்த பின், பாதுகாப்பு முறை தெரியாமல் இவைகளைச் சீர்திருத்தப் போய்ப் பல இடங்களில் பழுதுபட்டுக் கிடக்கின்றன. இப்போது சர்க்கார் பழம்பொருள் இலாகா இவற்றைக் கவனித்து வருகிறது. சமீப காலத்தில், 'பாதுகாப்பு' என்று எண்ணிச் சித்திரங்களின் மேல் பூசி வைத்த 'வார்னிஷை' முதலில் நீக்கியாக வேண்டும். அடுத்த படியாக, பல நூற்றாண்டுகளாகச் சித்திரங்களின்மேல் படிந்து கிடந்த தூசைப் போக்கவேண்டும். காரை பல இடங்களில் ஏற்கனவே உதிர்ந்தும், உதிர்ந்துகொண்டும் வருகிறது. அங்கெல்லாம் பூச்சு வேலை செய்தாகவேண்டும். கூரை, சுவர் இவைகளெல்லாம் சில இடங்களில் சரிந்துவிடும்போல் இருப்பதால் பழுது பார்த்தாக வேண்டும்; இல்லாவிட்டால் கொஞ்ச நஞ்சம் இருக்கும் அருமையான சித்திரங்களும் பாழாகிவிடும். தூண்கள் போன இடத்தில் புதுத் தூண் அமைத்திருக்கிறார்கள். இடிந்த மாடிச் சுவர்களையும் திரும்பக் கட்டியிருக்கிறார்கள். ஆகவே, நம் பழம் பெருமைக்கு அறிகுறியாக விளங்கும் இந்த அரிய கலைப் பொக்கிஷத்தை இனி நெடுங் காலம் நாம் கண்டு களிக்கலாம். மொத்தமுள்ள 29 குகைகளில் 16-இல் மட்டுந்தான் சுவர்ச் சித்திரங்கள் இன்னும் இருக்கின்றன. இந்தச் சித்திரங்களின் தரம்



19-ஆம் குகையின் வெளி வாயில்

ஓரே மாதிரி இருப்பதாகச் சொல்வதற்கில்லை. மொத்தத்தில் புத்தர் அவதரித்தது, அவரைப்பற்றிய கதைகள் இவை தான் சித்திரத்துக்குரிய முக்கிய விஷயம். முன் காலத்தில் உலகில் எந்த நாட்டிலுமே இப்படி மதம், புராண சம்பந்தமான விஷயங்களையே ஓவியம், சிற்பம் ஆகிய கலைகளில் பயன்படுத்தி வந்தார்கள். ஐரோப்பாவில் மத்திய காலத்தில் செதுக்கிய சிற்பங்களும் தீட்டிய ஓவியங்களும் மத சம்பந்தமானவையே; அதற்கும் முந்தியவை புராண சம்பந்தமானவை. அஜந்தா சிற்பமும் ஓவியங்களும் இதே ரீதியில் அமைந்து, ஒரு பெரிய நாடகத்தின் பல அரிய காட்சிகளை நம் கண் முன் காட்டுகின்றன. புத்தருடைய தவச் சிறப்பை உணர்த்துவதுதான் இந்த ஓவியங்களின் முக்கிய நோக்கம்; என்றாலும், இடை இடையே அந்தக் காலக் குடும்ப நிகழ்ச்சிகள், சரித்திர சம்பவங்கள், அப்போது வழங்கிய கதைகள் இவைகளையும் பல நிறங்களில் அழகுறத் தீட்டியிருப்பதைக் காணலாம்.

ஒவ்வொரு குகையாகப் பார்த்துக்கொண்டே போகப் போக, கணக்கற்ற ஆண் பெண்கள், ராஜகுமாரர்கள், தலைவர் தலைவியர் இவர்களின் உருவங்கள் பல பாவங்களிலும், காடு, பூங்காவனம், நகரம் ஆகிய பல சூழ்நிலைகளிலும் தீட்டப் பெற்றிருக்கின்றன. சமைப்பது, தண்ணீர் தூக்குவது, சாமான்கள் விற்பது, வாங்குவது, காடுகளில் சுற்றுவது இந்த மாதிரியான காட்சிகளைக் காணலாம். இதற்கு மேலேயுள்ள சுவர்ப் பாகத்தில் தேவ தூதர்கள் வான வெளியில் ஆனந்தமாகச் செல்வதுபோல் தீட்டியிருக்கிறது.

கிட்டத்தட்ட 800 வருஷ காலம் ஆகியிருக்கிறது, இப்படித் தீட்டி முடிக்க; ஆகவே, எல்லாச் சித்திரமும் ஒரே ரீதியிலோ, உயர்ந்த ரகமாகவோ இருக்கும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. ஆயினும் நோக்கம், விரிவான வேலைப்பாடு, சித்திர அமைப்பு இவைகளைப் பொறுத்தவரை இங்குள்ள பழைய ஓவியங்களுக்கும் பின்னால் எழுதிய ஓவியங்களுக்கும் ஓர் ஒற்றுமை இருப்பதைக் காணலாம். 19 - ஆம் சைத்திய குகையிலும், 1,2,16,17-ஆம் விஹார குகைகளிலும் இருக்கும் சித்திரங்கள் அபாரமான சிற்பச் சிறப்பும் ஓவியத் திறனும் வாய்ந்தவை. இவை எல்லாம் பிற்பகுதியான மகாயான யுகத்தைச் சேர்ந்தவை. கூரையிலும் சுவரிலும் பூக்கோலத்துக்குள் இருக்கும் சித்திரங்கள் மிகச் சிறந்தவை. ஸர் வில்லியம் ரொதென்ஸ்டைன் என்ற பிரபல கலா ரசிகர், "உலகெங்கும் மகிழ்ச்சி ஒளி வீசுவதையும், ஆண் பெண் உருவங்கள் பொலிவுடன் திகழ்வதையும், விலங்குருவங்கள் வலிமையோடும் கம்பீரமாகவும் தோன்றுவதையும், மலர்கள், பறவைகள் இவை மிக வனப்பும் தூய்மையும் கொண்டு விளங்குவதையும் இங்கே காணலாம்" என்று இவைகளைப் பாராட்டியிருக்கிறார். இந்தச் சித்திரங்களைப் பார்க்கப் பார்க்க, எவ்வளவு பொருத்தமாகவும் உணர்ச்சியோடும் அவர் இதைச் சொல்லியிருக்கிறார் என்று தெரியும். சில காட்சிகள் தான் எவ்வளவு பளிச்சென்று உயிர்த் துடிப்போடு விளங்குகின்றன! இத்தனை நூற்றாண்டுகே

ளாகக் கவனிப்பாரற்றுக் கிடந்தும் இவைகளிலிருந்து பல உண்மை களைத் தெளிவாக உணரலாம்.

முதல் விஹாரத்தில் காணும் சித்திரம் கடைசியாக, கி. பி. 7 அல்லது 8 - ஆம் நூற்றூண்டு வாக்கில் தீட்டியது. புத்தருடைய ஒன்று விட்ட சகோதரனுன நந்தனைப்பற்றிய விவரத்தை இதில் காணலாம். இதைப் பொதுவாகப் பௌத்த காவியங் களிலும் சிற்பத்திலும் காணலாம். இங்கே ஓவிய உருவத்தில் இதைத் தீட்டியிருக்கிருர்கள். நந்த னுடைய மனைவி பிரிவாற்ருமையி ஞல் இறந்து போகும் காட்சி மிகவும் உருக்கமானது. டாக்டர் கிரிஃபித் இதைப்பற்றிக் குறிப் பிடும்போது, அந்தக் "காலத்தில் ஐரோப்பாவில் ஃப்ளாரன்ஸ் நகரத்து ஓவியர்கள் இதைவிட் நன்ருகவும், வேனிஸ் நகரத்து ஓவியர்கள் பின்னும் அழகான வர்ணங்களிலும் தீட்டி யிருக்க முடியும்; ஆனுல் இவ்வளவு உணர்ச்சி ததும்ப அவர்கள் தீட்டி யிருக்கவே முடியாது" என்கிருர். மிகவும் உருக்கமாக இந்தக் காட்சியை அவர் விவரிக்கிருர்.

அவள் தலை தொங்கவிட்டுவிட் டது. கைகால்கள் சோர்வுற்றுக் கிடக்கின்றன. கண் மூடிவிட் டது. சற்றுக் குனிந்தபடி அவ ளுடைய சேடி ஒருத்தி அவளைத் தாங்கி நிற்கிருள். இன் னெருத்தி, வெளுத்துக் கிடக்கும் அவள் முகத்தைக் கூர்ந்து நோக் கியபடி ஒரு கையைக் பிடித்துக் கொண்டிருக்கிருள். அவள், 'நம் அருமை இளவரசி இறந்துபோகி ருளே' என்று உள்ளூற வருந்திக் கவலையுற்றிருப்பது அந்த முக பாவத்திலிருந்தே தெரிகிறது. அதே சித்திரத்தில் இரண்டு ஆட வர்கள், முகத்தில் பெருங் கவலை தோன்ற அமர்ந்திருக்கிருர்கள். அவர்களுக்குக் கீழே உறவினர் கள் நம்பிக்கை இழந்து அழுது வருந்தியபடி இருக்கிருர்கள்.

இந்த விஹாரத்திலே உள்ள இன்னெரு சித்திரத்தில் இந்திய மன்னன் ஒருவனுடைய சபையில் பாரசீக தூதன் ஒருவன் வந்து நிற்பதுபோல் வரைந்திருக்கிறது. அந்தக் காலத்தில் இந்த இரண்டு நாடுகளுக்கும் உள்ள அரசியல் உறவுக்கு இது ஒரு சரித்திரச் சான்ருக விளங்குகிறது.

17-ஆம் குகை விஹாரத்திலும் அருமையான பல சித்திரங்களைக் காணலாம். இவை பௌத்த கால ஓவியங்களுக்குள் மிக மிகச் சிறந்தவை. பொதுமக்களின் வாழ்க்கை, வேட்டையாடுவது, ராஜ சபை, யானைகளும் ஊர் ஜனங்களும் ஊர்வலமாகச் செல்லுவது, வாத்தியக்காரர்கள், நடன மாதர் - இப்படிப் பல அற்பு தக் காட்சிகளை மகாயான பௌத் தர்கள் தீட்டி வைத்திருக்கிருர் கள். கலைச்சிறப்புடன் விளங்கும் இந்தச் சித்திரங்களைக் கூர்ந்து ஆராய்ந்தால், "இவைகளைத் தீட் டிய ஓவியர்களில் சிலர் மனித இயல்புகளை உள்ளூற உணர்ந்து அநுபவித்தவர்கள். இவர்களுக்கு ஈடு இணை யாருமே இல்லை" என்ற விஷயம் புலனுகும்.

நாம் எதையுமே முழுவதும் அறிய முடியாது. ஆகவே, எவ்வளவு கல்வி கற்றிருந்தாலும் சரி, பணிவுடனேதான் இருக்க வேண்டும்.

—சாக்ரடீஸ்

# பிராணிகள் சிந்திக்குமா?

★

"ஒரு புழுவுங்கூட அநுபவத்தால் அறிவு பெறுகிறது" என்கிறார் ஆலன் டிவோ என்ற ஆசிரியர். அவர் எழுதியுள்ள 'மனங் கவரும் பிராணி உலகம்' என்ற நூலை ஆதாரமாகக் கொண்டது இந்தக் கட்டுரை. சித்திரங்களும் அதில் உள்ளவையே.

சின்னஞ் சிறு குழந்தைகளாக இருந்தபோது, இயற்கைப் பொருள்களையும் பிராணிகளையும் கண்டு, ஆச்சரியப்படாதவர் எவரும் இருக்க மாட்டார். அவைகளைப்பற்றிப் பல விஷயங்களை அறிந்துகொள்ள அப்போது ஆசை உண்டாவதும் சகஜம். ஆனால், வயசாகிவிட்டால், வாழ்க்கை பற்றிய பற்பல விவகாரங்களில் ஆழ்ந்துவிடுகிறோம். குழந்தைப் பிராயத்தில் தோன்றிய அந்த ஆச்சரியமும், எழுந்த அந்த ஆசையும் அடியோடு மறைந்து போகின்றன. பிராணிகளின் இயல்பிலே தான் எத்தனை நுட்பங்கள் இருக்கின்றன! சிலவற்றை இங்கே பார்ப்போம்.





பொதுவாக, பெரிய பிராணிகள் அதிக காலம் வாழ்கின்றன; சிறிய பிராணிகள் சிறிது காலம் வாழ்கின்றன. குட்டிபோட்டுப் பால் கொடுக்கும் பிராணிகளுக்குள்ளே மாமிசம் உண்பவைகளை விட, தாவர உணவே கொள்பவை அதிக ஆயுள் வாழ்கின்றன. ஆனால், மற்ற எந்தப் பிராணியையும் விட மிக அதிக காலம் வாழ்வது ராட்சச ஆமைதான். அது சுமார் இருநூறு முதல் முந்நூறு வருஷம் வரைக்கும் வாழும். அதன் நிறை சுமார் ஐந்நூறு முதல் அறுநூறு பவுண்டு வரைக்கும் இருக்கிறது.

விலங்குகள் சிந்திப்பதுண்டா? ஒரு விதச் சிந்தனை அவைகளுக்கு உண்டு என்றே சொல்ல வேண்டும். காரண காரியங்களை யெல்லாம் ஆராய்ந்து தர்க்க ரீதியாக அவை



சிந்திப்பதில்லை. இயற்கை உணர்ச்சியால் உந்தப்பட்டு, அவை எண்ணுகின்றன. இதற்காக, உதாரணம், அநுபவம் இவற்றைக் கொண்டு அவை அறிவு பெறமாட்டா என்று நினைக்க வேண்டியதில்லை. பிராணி ஆராய்ச்சிக்காரர்கள் பரீட்சித்ததில், ஒரு புழுவுங்கூட அநுபவத்தின் மூலம் அறிவு பெறுவதாகப் புலனாயிற்று. பெரிய பிராணிகளோ அநுபவத்தின் மூலம், திட்டமாக அறிவு பெறுகின்றன. எனவே, சிந்திக்கும் மனம் பிராணிகளுக்கு உண்டா என்ற கேள்விக்கு, நிச்சயமாக உண்டு என்றே பதிலளிக்க வேண்டியிருக்கிறது.

குருவிகள் கண்டபடி யெல்லாம் கீச்சிட்டுக் கீச்சிட்டுத்தான், கடைசியிலே ஒருவிதமாய்ப் பாடக் கற்கின்றன. பூனையை நாய் துரத்துகிறதே, ஏன்? வேறு நாய்கள் இப்படித் துரத்துவதைப் பார்த்துப் பார்த்துத்தான் இதைக் கற்கிறது. பிறக்கும்போதே எந்த நாயும் பூனைக்கு விரோதமான உணர்ச்சியோடு பிறப்பதாய்த் தோன்றவில்லை.

ஆனால், 'தான்' என்ற பிரக்ஞை, தர்க்க ரீதியாகப் பிராணி எதற்கும் இல்லை. தான் அழிந்து போகக் கூடும் என்ற அறிவே அதற்குக் கிடையாது. ஆகவே, மனிதனை விட மிகவும் சந்தோஷமாகவே பிராணி வாழும். ஏதாவது சத்தமோ வாசனையோ வந்தால், 'ஒளிந்துகொள்ள வேண்டும்', 'ஓடிப்போக வேண்டும்' என்றெல்லாம் பிராணிக்கு உணர்ச்சி உண்டாகலாம். அவ்வளவுதானே யொழிய, 'செத்துப் போவேனே' என்ற பயம் அதற்கு உண்டாவதில்லை. மிகச் சிறு குழந்தையைப் போலவே, பிராணியும் உண்கிறது; தூங்குகிறது; இயற்கை உணர்ச்சி செலுத்தும் திசையில் செல்லுகிறது.

பிராணிகளுக்கு வால் எத்தனையோ விதமாக உபயோகப்படுகிறது. 'பீவர்' என்ற நீர்க்கீரி தன் வாலை உபயோகிக்கும் முறைதான் மிகவும் விநோதம். மரத்தைக் கடித்து அறுக்கும்போது, 'ஜம்' என்று வால்மீதே உட்கார்ந்துகொள்கிறது. அபாய எச்சரிக்கை செய்யவும் வாலையே அது உபயோகிக்கிறது. ஏதோ அபாயம் வந்துவிட்டதாக அதற்குத் தோன்றினால், வாலை ஓங்கி ஓங்கிச் 'சளபள' 'சளபள' என்று தண்ணீர்மீது ஒரு நீர்க்கீரி அடிக்கும். இந்தச் சத்தம் கேட்கக் கூடிய தூரத்தில் உள்ள மற்ற நீர்க்கீரிகள் எல்லாம் உடனே உஷாராகிப் பத்திரமாகத் தண்ணீருக்குள் மூழ்கிவிடும்.



திமிங்கிலம் குட்டி போட்டுப் பால் கொடுக்கும் பிராணி. தன் சுவாசப்பையை நிறைய மூச்சை இழுத்துக்கொண்டு, 3,000 அடி ஆழம் வரையில் இது மூழ்கிவிடும். மேல் மட்டத்துக்குத் திரும்பி வருகிற வரையில் தாங்க வேண்டுமே, அதற்காகவே இப்படி மூச்சிழுத்து வைத்துக்கொள்கிறது. நீருக்கடியில் இருக்கும்போது, அவ்வளவு பிராணவாயுவும் உபயோகமாகி விடாமல் மிஞ்சியிருப்பதுண்டு. இப்படி மிஞ்சிய காற்றை, திமிங்கிலம் மேலே வரும்போது ஒரேயடியாகக் குப்பென்று இரண்டு நாசித் துவாரங்களின் வழியாகவும் வெளியே பீச்சிவிடும். தண்ணீரை நாசித் துவாரங்கள் வழியாகத் திமிங்கிலம் வெளியே பீச்சும் என்று சொல்லுகிறார்களே, அது உண்மை அல்ல.

பட்சிகளிடமும் பல அரிய குணங்களைக் காணலாம். தாய்க் குருவி தன் குஞ்சுகள் அனைத்துக்கும் ஒரே அளவாக உணவூட்டுகிறது. இது எப்படித் தெரியுமா? குஞ்சுகளின் தொண்டையில் ஒரு வித நரம்புகள் இருக்கின்றன. வயிறு நிறைய நிறைய, இந்த நரம்புகள் வேலை செய்யத் தொடங்குகின்றன. உணவு விழுங்கும் வேகம் இதனால் குறைகிறது. குஞ்சுகள், 'ஆ' என்று வாயைத் திறந்துகொண்டிருக்கும். ஒவ்வொன்றின் வாயிலும் உணவைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தாய் திணித்துக் கொண்டே கவனிக்கும். எதன் தொண்டையிலாவது உணவு வேகமாக இறங்காவிட்டால், உடனே அதை வெளியே எடுத்து மற்றொரு குஞ்சின் வாயில் போட்டுவிடும்.

சில சின்னக் குருவிகள் மணிக்கு 170 மைல் வேகம் பறக்கும். ஆனால், ராஜாளிகள்தான் மிகவும் வேகமாகப் பறக்கக்கூடியவை. தங்கள் இரையைத் துரத்திச் செல்லும்போது, மணிக்கு 200 மைல் வேகத்தில் அவை பறக்கும். கொஞ்சங்கூடச் சந்தடி இல்லாமல் பறக்கக் கூடியவை ஆந்தைகள் ஏனென்றால், அவற்றின் சிறகுகள் மிகவும் மிருதுவானவை. அவற்றின் நுனி பஞ்சு மாதிரி இருக்கும்.

கடல் பறவைகள் உப்புத் தண்ணீரைக் குடிக்கின்றன. தரை மீது உள்ள பொருள்களையும் சரி, தண்ணீருக்குள் இருக்கும் பொருள்களையும் சரி, மீன் கொத்திப் பறவைகள் நன்றாகப் பார்க்கும். இப்படி இரண்டையும் பார்க்கக் கூடிய விதமாக அவற்றின் கண் அமைப்பில் வசதி இருக்கிறது.

இந்த விஷயங்களை யெல்லாம் கேட்கும்போது, நமக்கு அதிசயமாக இல்லையா? இதைப் பாருங்கள்: மீன் தண்ணீரில் முழுகிச் சாகுமா, சாகாதா? சாகாது என்றே சொல்லுவீர்கள். ஆனால், உண்மையில் அது முழுகிச் சாகும். எப்போது? தண்ணீரில் மீனுக்கு வேண்டிய பிராண வாயுவின் அளவு குறைந்திருக்குமானால், அப்போது அது முழுகிச் செத்து விடும். ஆமை தன் ஓட்டைக் கழற்றி வைக்க முடியும் என்று சிலர் நம்புகிறார்கள். இது தவறு. அப்படி அதனால் ஓட்டைக் கழற்றி வைக்க முடியாது.

பிராணிகளைப்பற்றித் தப்பான இன்னும் சில நம்பிக்கைகள் வெகு காலமாக ஜனங்களிடம் உலவி வருகின்றன. 'மயிரில் வௌவால்

சிக்கிக் கொள்ளும்; யானைக்கு எலியைக் கண்டால் பெரும் பீதி' என்றெல்லாம் சொல்லுகிறார்களே; இது சுத்த அபத்தம்.

இதற்காகப் பழைய அபிப்பிராயங்கள் அத்தனையும் தவறென்று எண்ணிவிடக் கூடாது; புதிய அபிப்பிராயங்கள் அத்தனையும் அறுதியானவை என்றும் எண்ணக் கூடாது. பழைய அபிப்பிராயம் ஒன்று தவறு என்று நிரூபணமாகாத வரையில், அதை மதிக்கத்தான் வேண்டும். இயற்கை ஒரே நிலையில் இல்லை; மாறிக் கொண்டே இருக்கிறது. ஆகவே, புதிய அபிப்பிராயம் எதுவும் இறுதியானதல்ல. ஹென்ரி ஃபாப்ரே என்பவர் சொல்லியுள்ள இந்த வாசகத்தை ஒவ்வொருவரும் மனத்தில் பதித்துக்கொள்ள வேண்டும்:

"ஒரே ஒரு கொசுவைப் பற்றிக்கூட மனிதன் இறுதியாகச் சகல விஷயங்களையும் அறிந்துகொள்ள முடியாது. அப்படி அறிந்துகொள்ளுவானானால், மனிதனின் அறிவே உலகினின்று அழிந்து போகும்."

## இன்பம்

இன்பமாய் இருக்க மட்டும் விரும்பினால் அது எளிதில் முடியக் கூடிய காரியம். ஆனால் நாம் பிறரைவிட அதிக இன்பம் பெறவே விரும்புகிறோம். அது எப்பொழுதும் கடினம். ஏனென்றால், அவர்கள் உண்மையிலேயே அநுபவிக்கும் இன்பத்தைவிட அதிகமாய் அநுபவிப்பதாக நாம் நினைத்துக்கொண்டு விடுகிறோம்.

—மாண்டெஸ்க்யூ

## 'உள்ளே அழைத்து வராதே!'

ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த கனெக்டிகட் மாகாண ஓட்டல் ஒன்றின் விளம்பரப் பலகையில் மரியாதையான ஓர் அறிக்கையை எழுதியிருக்கிறார்கள்: 'எங்கள் பூனைகளுக்கு என்னவோ இந்த நாய்களைக் கண்டால் கட்டோடு பிடிப்பதில்லை.'

—பெர்ரி கிதென்ஸ்

## எத்தனை நாள் யோசித்தாய்?

ஸ்காட்லாந்துக்காரரான கிழத் தச்சர் ஒருவரிடம் ஒரு சமயம் நான் இப்படிப் பெருமை அடித்துக்கொண்டேன்: "என் உடம்பில் ஓடும் ஒவ்வொரு துளியும் அமெரிக்க ரத்தம். இரண்டு நூற்றாண்டுகளாக அமெரிக்க மண்ணிலேயே வாழ்ந்து வந்திருப்பவர் என் முன்னோர்கள்."

தச்சர் சொன்னார்: "அப்படியா? இதை மாத்திரம் எனக்குச் சொல்: ஒரு சீனாக்காரனாகப் பிறக்கக் கூடாதென்று எத்தனை நாள் கவலையோடு யோசித்து முடிவு செய்தாய்?"

—'ரீடர்ஸ் டைஜெஸ்ட்'




மயிலை சீனி -
வேங்கடசாமி

**பழைய வைத்திய சாஸ்திரங்களும் நவீன அலோபதி வைத்திய சாஸ்திரமும் பாராட்டும் அரிய உணவும் மருந்துமாகும் நெல்லி.**

"அதென்ன; அவ்வளவு சிறப்புள்ளதா நெல்லிக்காய்!'' என்று கேட்கிறீர்கள்?

ஆமாம்; உடல் நலத்துக்கு மிக உதவியாக உள்ள பொருள் நெல்லிக்காய்.

இதன் குணங்களைக் கூறுவதற்கு முன்பு நெல்லிக்காயின் வேறு இனத்தைப்பற்றியும் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். அரிநெல்லிக்காய் என்னும் ஒரு வகை உண்டு. இது சாதாரணமாய்த் தோட்டங்களில் கிடைக்கும். இது முக்கியமானதல்ல. கரு நெல்லிக் கனி என்று இன்னொரு வகை உண்டு. ஆனால், இது கிடைப்பது மிக அருமை. இதைத் தின்போர் நெடுங்காலம் பல தலைமுறை வரையில் உயிர் வாழ்ந்திருப்பார்களாம். தமிழ் இலக்கிய நூல்களிலே இதைப் பற்றிய விவரங்களைக் காணலாம். 'ஔவை உண்ட நெல்லிக் கனி' என்று படிக்கிறோமே; அது கரு நெல்லிக் கனி. அதியமான் நெடுமான் அஞ்சி என்னும் சிற்றரசனுக்கு ஒரு கரு நெல்லிக் கனி கிடைத்ததாம். அதை அவன் ஔவையாருக்குக் கொடுத்தானாம். கரு நெல்லிக் கனியை அருந்திய ஔவையார் நெடுங் காலம் உயிர் வாழ்ந்திருந்தாராம். புறநானூறு என்னும் நூலில் இதைக் காணலாம்.

விருச்சிகர் என்னும் பெயருள்ள முனிவர் பொதிகை மலையில் தவம் செய்துகொண்டிருந்தார். அவர் பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறைதான் உணவு உட்கொள்ளுவார். அந்த உணவு என்ன தெரியுமா? கரு நெல்லிக் கனி தான். பொதிகை மலையில் ஒரு கரு நெல்லி மரம் இருந்ததாம். அது பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறைதான் காய்க்கும். அதை ஒரு தரம் உண்டால் மறுபடியும் பன்னிரண்டு ஆண்டுகள் வேறெதையும் தொடவே மாட்டாராம். பன்னிரண்டு ஆண்டுக்கு வேண்டிய உணவுச் சத்து அந்தப் பழத்தில் இருக்கிறது என்பதுதானே இதன் பொருள்? இந்தச் செய்தியை மணிமேகலை என்னும் காவியத்தில் காணலாம். ஆனால், இந்தக் கரு நெல்லி நமக்கு இப்போது கிடைக்கவில்லை.

பழைய காலத்துத் தமிழ் மருத்துவ நூல்களிலும், வடமொழி ஆயுர்

மூலம்: சௌபாக்கியம் (தமிழ்), சென்னை-8.

வேத நூல்களிலும், இஸ்லாமிய யூனனி வைத்திய நூலிலும் சாதாரண நெல்லிக் கனிபற்றிய விவரங்களைக் காணலாம். தற்கால விஞ்ஞான முறைப்படி ஆராய்ந்த வைத்தியர்களும் நெல்லிக் கனியில் ரத்தத்துக்கு உரம் அளிக்கிற 'சி' வைட்டமின் சத்து அதிகமாக இருக்கிறது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.

ரத்தந்தான் உடல் நலத்துக்கு மூலாதாரம். ரத்தம் சுத்தமாக இராதுபோனால், பலவித நோய்கள் ஏற்படும். ரத்தத்துக்கு உரம் அளித்து, அதைச் சுத்தமாக வைக்கும் பழ வகைகள் சில உண்டு. அவை எலுமிச்சம் பழம், ஆரஞ்சுப் பழம், சாத்துக்குடிப் பழம், அனசிப் பழம், நெல்லிக் கனி முதலியவை. எலுமிச்சம் பழத்தைவிட ஆரஞ்சுப் பழத்திலும் சாத்துக்குடிப் பழத்திலும் அதிகமான 'சி' வைட்டமின் சத்து உண்டு. ஆனால் நெல்லிக் கனியிலோ ஆரஞ்சு, சாத்துக்குடிப் பழங்களைவிட மூன்று பங்கு அதிகமாக இந்தச் சத்து அடங்கியிருக்கிறது.

நம் நாட்டு ஏழை எளியவர்கள் நெல்லிக்காயை ஊறுகாய் போட்டுச் சாப்பாட்டுடன் உண்பது வழக்கம். முன்பு செல்வர்கள் இந்தக் காயைக் கண்ணாலும் பார்க்க மாட்டார்கள். ஆனால் இப்போது இது மிக உயர்ந்த பொருள் என்பதை, எல்லோரும் உணர்ந்துகொள்கிறார்கள்.

மூளை, இருதயம், ஈரல், இரைப் பை இவை முக்கியமான உறுப்புக்கள். இவை நல்ல நிலையில் இருந்தால் உடலும் நன்றாக இருக்கும். இவைகளுக்கு நெல்லிக் கனி உரம் அளிக்கிறது என்று யூனனி மருத்துவ நூல்கள் கூறுகின்றன.

'நெல்லிக் காயைப் பகல் காலத்தில் உண்ண வேண்டும்; இரவில் உண்ணக்கூடாது. நெல்லிக் காய் பித்தத்தை நீக்கும்; நெல்லிப் பழத்தின் புளிப்பு வாதத்தை நீக்கும்; அதன் துவர்ப்பு, கபத்தை அகற்றும்; மேக நோயை நீக்கும்' என்று தமிழ் வைத்திய நூல் கூறுகிறது.

நெல்லிக்காய்க் குப்பித்தம்
  நீங்கும்;அதன் புளிப்பால்
செல்லுமே வாதம்;அதிற்
  சேர்துவரால்-சொல்லும் ஐயம்
ஓடும்இதைச் சித்திரத்தில்
  உன்ன அனலுடனே
கூடுபிர மேகமும்போங்
  கூறு.

நெல்லிக்காய் வற்றலுக்கு நெல்லி முள்ளி என்றும் பெயர். இதுவும் மருந்துக்கு உபயோகப்படுகிறது.

நல்லநெல்லி முள்ளியது
  நாக்குக்கு ருசிதரும்;
அல்லல்விரி பித்தம்
  அகற்றும்அதை-மெல்லத்
தலைமுழுகக் கண்குளிரும்
  தாவுபித்த வாந்தி
இலையிழிமே கங்களும்போம்
  எண்.

நெல்லி வற்றலுடன் வேறு பல மருந்துச் சரக்குகளையும் சேர்த்துத் தைலம் காய்ச்சித் தேய்த்துத் தலை முழுகினால், கண் சம்பந்தமான நோய்களும் பித்த வெட்டை, பித்த வாயு, உடம் பெரிச்சல், பித்த மயக்கம் இவையும் தீரும். அதுபோலவே, நெல்லி முள்ளி லேகியத்தினால் வாத பித்த தோஷங்கள், காமாலை, பித்த பாண்டு, திமிர்

வாயு, சோகை, பித்த குன்மம் முதலிய நோய்கள் தீரும்.

சியவனப் பிராச ரசாயனம், ஆமலக லேகியம், ஆமலக கற்பம், ஆமலக கிருதம் முதலிய பல மருந்துகள் நெல்லிக்காயிலிருந்து செய்கிறார்கள். இவைகளில் சியவனப் பிராச லேகியம் பெயர் போனது. இது நரையிரலுக்கு பலங் கொடுக்கிற நல்ல மருந்து. நுரையீரல் சம்பந்தமான க்ஷயம் முதலிய நோய்களுக்குச் சியவனப் பிராச லேகியம் கொடுப்பது நம் நாட்டு வழக்கம். இந்த லேகியத்தைத் தொடர்ந்து பல காலம் சாப்பிட்டு வந்தால் ஆயுள் வளரும் என்பார்கள்.

நெல்லிக்காயைப் பழப்பாகு (jam) செய்து சாப்பிடலாம். இதை நெல்லிக்காய் முரப்பா என்பார்கள். நன்றாய் முற்றினாலும் பழுக்காத நெல்லிக் காய்களை எடுத்துக்கொள்ள வேண்டும். நார் அற்ற சதைப் பற்றுள்ள காயாக இருப்பது நல்லது. இந்தக் காய்கள் ஒவ்வொன்றையும் முள்ளால் குத்த வேண்டும். ஊசியினாலும் ஆணியினாலும் குத்துவது கூடாது. ஈச்சம் முட்களைச் சிறு கத்தையாகக் கட்டி அதனால் குத்தலாம்; அல்லது பலமுள்ள வேறு முள்ளினால் குத்தலாம். குத்தின காய்களைச் சுண்ணாம்பு நீரில் ஒரு நாள் ஊற வைத்துப் பிறகு கழுவி எடுத்துக்கொள்ள வேண்டும். பிறகு காயை மண் பாத்திரத்தில் போட்டு நீர் வற்றும்படி சிறு தீயிட்டு வேக வைக்க வேண்டும். நீர் சுண்டின பிறகு காயை நெய்யில் வறுத்து எடுத்துக்கொள்ள வேண்டும். காயின் எடைக்கு இரண்டு பங்கு சர்க்கரையைப் பாகு காய்ச்சி அதில் காயைப் போட்டு வேக வைத்து நல்ல பாகுபதத்தில் இறக்கி வைத்துக் கொள்ள வேண்டும். சில நாட்களுக்குப் பிறகு இந்தச் சர்க்கரைப் பாகு நீர்த்துக் காணும்போது காய்களை எடுத்துக்கொண்டு, பாகை மட்டும் அடுப்பில் வைத்து அதனுடன் சிறிது சர்க்கரை சேர்த்துக் காய்ச்சி அதில் காயைப் போட்டுப் பத்திரப்படுத்த வேண்டும். இதுதான் நெல்லிப் பழப் பாகு. இதை யூனானி மருந்துக் கடைகளில் விற்கிறார்கள். இந்தப் பழத்தில் 3, 4 பழம் சாப்பிட்டு வந்தால், இரைப் பை, இருதயம், மூளை இவ்வுறுப்புக்களைப் பலப்படுத்தும். ஜீரண சக்தியுண்டாகும்.

நெல்லிக்காய் ஆண்டுதோறும் சில மாதங்களில் மட்டுமே கிடைக்கும். ஆகவே, இதை ஊறுகாய் செய்து வைத்துக்கொள்வது நல்லது. காயை உரலில் இட்டு இடித்துக் கொட்டை நீக்கி அதனுடன் இஞ்சி, பச்சை மிளகாய், உப்புச் சேர்த்து, எண்ணெயில் இட்டும் உப்பு மட்டுமே இட்டும் ஊறுகாய் செய்வது உண்டு. ஆனால் காய்ந்த நெல்லிக் காயைவிட, உலராத பழுத்த நெல்லிக் காயில்தான் ரத்தத்துக்கு உரம் அளிக்கும் சத்தி அதிகம் உண்டு.

கர்ப்ப ஸ்திரீகளும் காய்ச்சல் உள்ளவர்களும் நெல்லிக் காயை அருந்தக் கூடாது என்பார்கள்.

நம் தோட்டங்களிலும் நெல்லி மரங்களை நட்டு வளர்க்கலாம். நம் அரசாங்கத்தார் ஆண்டுதோறும் வனமகோற்சவம் நடத்தி மரங்களை நட்டு வளர்க்கிறார்களே அப்படி நடுகிற மரங்களில் பெரும் பகுதி நெல்லியாக இருந்தால் மக்களுக்குப் பெரும் பயன் உண்டாகும்.

குழந்தைகளைச் சந்தோஷமாய் வளர்ப்பது
ஒரு கலை; அதற்கு உரிய—

# ஐந்து உபாயங்கள்

ஹில்டிகார்டு ஹேர்ஸ்

சென்ற நான்கு வருஷத்தில் எங்களுக்கு மூன்று குழந்தைகள் பிறந்துவிட்டன. எல்லாத் தாய்மார்களையும் போல நானும், 'என் குழந்தைகள் சந்தோஷமாயும் உற்சாகமாயும் வளர வேண்டும்; நேர்வழியில் அடக்கமாய் வளரவேண்டும்' என்று ஆசைப்பட்டேன். கல்யாணமாவதற்கு முன்பு ஒரு பள்ளிக்கூட உபாத்தியாயினியாக இருந்ததால், குழந்தைகளின் இயல்பைப்பற்றி எனக்கு ஓரளவு தெரிந்திருந்தது. குழந்தைகள் பிறந்த பிறகு என் சொந்த அநுபவத்திலிருந்தும் புத்தகங்களிலிருந்துந்தான் வேறு அநேக விஷயங்களை அறிந்து கொண்டேன். குழந்தைகளை வளர்க்கும் விஷயத்தில் இதோ இந்த ஐந்து உபாயங்கள் மிகவும் முக்கியமானவை என்று எனக்குப் படுகின்றன:

'செய்யாதே' என்ற தடைவேண்டும்: பெரியவர்களான பிறகு அவசியமாயிருக்கும் கண்டிப்பு, தாட்சிண்ணியம், அடக்கம் போன்ற குணங்களைச் சிறு வயதிலேயே குழந்தைகள் கற்றுணர வேண்டும். அவர்கள் இஷ்டம்போல ஓடியாடி விளையாடுவதற்கு நாம் எவ்வித இடையூறும் உண்டாக்கக் கூடாது. ஆனால் ஏதாவது சாமானுக்கோ அல்லது எவரேனும் மனிதர்களுக்கோ தீங்கு ஏற்படுவதாயிருந்தால், அப்பொழுது, இன்னது செய்யக் கூடாது என்பதை அவர்களுக்கு உடனே தெரிவித்துவிட வேண்டும். குழந்தைகள் விஷயத்தில் கண்டிப்பு அவசியம் என்பதற்கு வேறொரு முக்கியமான காரணமும் உண்டு. ஆட்ட விதிகளை அறிந்திருந்தால் அல்லவா அவர்கள் தைரியமாய் விளையாட முடியும்? கண்டிப்பில்லாத குழந்தை ரோட்டில் எப்படிச் செல்ல வேண்டும் என்ற விதிகளை அறியாத மோட்டார் ஓட்டியைப்போல் தான் இருக்கும். நம் வீட்டில் எவ்வளவோ மின்சார வசதிகள் இருக்கின்றன. அவைகள் குழந்தைகளுக்குப் பெரிய மர்மமாயிருப்பதுடன் பெரும் ஆபத்து விளைவிக்கக்கூடியவையும் ஆகும் அல்லவா? கொதிக்கும் ரேடியேட்டரைத் தொட்டுவிட்டு, 'ஓ' என்று சூசி அலறியது எனக்கு என்றாவது மறக்குமா? அதைத் தொடக்கூடாது என்பது இப்பொழுது அவளுக்கு நன்றாய்த் தெரியும். 'தான் செய்தது தவறு; அதன் பலன் உடனே விளைந்தது. பெற்றோர் சொற்படி கேட்டு நடந்தால், இந்த மாதிரி அநுபவம் நேராது' என்ற விஷயத்தை அவள் இப்பொழுது அறிந்துகொண்டிருக்கிறாள்.

சாத்தியமானதை மறுக்கக் கூடாது: "எங்களுக்கு இன்ன

காப்பிரைட்: பேரெண்ட்ஸ் மகஸீன் (ஆங்கிலம்: ஏப்ரல் '54),
சிக்காகோ, ஐக்கிய அமெரிக்கா.

பட்சணம் வேண்டும்'' என்று குழந்தைகள் கேட்டால், ''அதற்கென்ன? சாப்பிட்ட பிறகு, எடுத்துக்கொள்ளுங்களேன்'' என்பேன். இல்லாவிட்டால், ''நாளைக்குப் பண்ணித் தருகிறேன். மறந்து போனால் எனக்கு நினைவு மூட்ட வேண்டும்; தெரியுமா?'' என்று கூறுவேன். 'பிக்னிக்' போக வேண்டும் என்று குழந்தைகள் சொன்னால், ''ஓ! ஞாயிற்றுக்கிழமை அப்பாவுக்கு வேலை இருக்காது. அன்று எல்லாரும் போய் வரலாம். உங்கள் விளையாட்டுப் பொம்மைகளை எல்லாம் இப்பொழுதே எடுத்து வைத்துக்கொள்ளுங்கள்'' என்று உற்சாகத்தோடு கூறுவேன். ''எனக்கு இப்பொழுது தூங்கப் பிடிக்கவில்லை'' என்று குழந்தை கூறினால், ''தூக்கம் வராவிட்டால் தூங்க வேண்டாம். படுக்கையில் பேசாமல் படுத்துக்கொண்டிரு. இல்லையென்றால் பொம்மைக்கு ஏதாவது கதை சொல்லு; பொம்மையும் தூங்கட்டும்'' என்பேன். சில சமயம் பொம்மைக்கும் தூக்கம் வராமல் இருக்கும். அப்பொழுது, ''நீ நல்ல தூக்கம் தூங்கிவிட்டு எழுந்திருந்தால் உனக்குப் பிடித்த விளையாட்டு ஒன்றை ஆடலாம். நானும் அதில் சேர்ந்து விளையாடுவேன்'' என்று ஆசை காட்டுவேன்.

ஒத்துழைக்கச் செய்ய வேண்டும்: சில சமயம் குழந்தைகள் நம் சொற்படி கேட்டு ஒன்றைச் செய்வது கஷ்டமாகிவிடும். அப்பொழுது நாமே அதைச் செய்து காட்டுவது நல்லது! ''மாடியில் துண்டு வைத்துவிட்டேன். அதைக் கொஞ்சம் எடுத்து வருகிறாயா?'' என்று கேட்கும்பொழுது, 'நீ எடுத்து வராவிட்டால், நான் போய் எடுத்துக்கொள்ளுகிறேன்' என்று தொனிக்கும் தோரணையில் பேசக் கூடாது. 'இரண்டு பேரும் போய் எடுத்துவரலாம்' என்று தொனிக்கும் ரீதியிலேயே பேச வேண்டும். இதன் பலனாக எனக்கு உதவியாய்க் காரியங்கள் செய்வதே என் பெண்ணுக்கு மிகவும் பிரியமாயிருக்கிறது. அவளை எடுத்துக் கொண்டு வரச் சொல்லி அவள் 'மாட்டேன்' என்று சொல்லிவிடுவாள் போல் தோன்றும் சமயங்களில், ''குழந்தைக்குத் துணி வேண்டுமே; அதை நான் மாடியிலிருந்து எடுத்துக்கொண்டு வந்திருக்க வேண்டும்'' என்று எனக்கு நானே முணுமுணுத்துக்கொள்ளுவேன். உடனே அவள் ரொம்பக் கரிசனையுடன், ''அம்மா, நான் போய்க் கொண்டு வரட்டுமா?'' என்று கேட்பாள். அதற்காக என் சந்தோஷத்தைத் தெரிவிப்பதை விட வேறொரு ஒரு பரிசும் நான் அளிப்பதில்லை. இந்தமாதிரி காரியங்களைக் குழந்தைகள் உற்சாகத்தோடு தாமாகவே செய்வதுதானே நல்லது?

முன்னதாகத் தயார் செய்து வைக்க வேண்டும்: வருவது இன்னதென்று தெரியாமலே குழந்தைகள் பயம் கொள்ளுவதால், அந்த மாதிரி சந்தர்ப்பம் நேர்வதற்கு முன்கூட்டியே நான் குழந்தைகளைத் தயார் செய்து வைப்பது வழக்கம். அப்பாவாவது அம்மாவாவது இல்லாமல் குழந்தைகள் தனியே இருக்க மாட்டார்கள். ஆனால் அந்த மாதிரி சந்தர்ப்பம் நேர்வதற்குச் சில மணி நேரத்துக்கு முன்பே நாம் ஒருவாறு தயார் செய்து வைத்துவிட்டால், நிலைமை சரியாகிவிடும். ''நாம் பெட்டி வீட்டுக்குப் போய் அவளிடம், 'பெட்டி, சூசி

# இந்தியத் தீக்குச்சி

சி. கே. நாராயணசாமி

பெரிய தொழிலாகவும் கிராமக் கைத்தொழிலாகவும் இந்தியாவில் தீக்குச்சி செய்யும் தொழில் வளர, இந்திய சர்க்கார் முயன்று வருகிறார்கள். இந்திய சர்க்கார் நியமித்துள்ள கிராமக் கைத்தொழில் போர்டின் விளம்பர இலாகா டைரெக்டர், அதை இங்கே விளக்குகிறார்.

கல் சகாப்தத்தில் வாழ்ந்த மனிதர் இன்றைய யந்திர சகாப்தத்துக்கு வர எத்தனையோ ஆயிரம் வருஷங்கள் ஆகியிருக்கின்றன. அந்தக் காலத்திலிருந்து இன்று வரை மனிதரின் வாழ்க்கையில் எத்தனை எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன.

அந்தக் காலத்தில் மனிதர் சக்கிமுக்கிக் கல்லிலிருந்து மிகவும் கஷ்டப்பட்டு நெருப்பை உண்டாக்க வேண்டியிருந்தது. அவ்விதம் உண்டாக்கிய நெருப்பை அவர்கள் சிரமப்பட்டுப் பாதுகாக்கவும் வேண்டியிருந்தது. ஆனால் இன்றோ, ஒரு சிறிய தீக்குச்சி எள்ளளவும் கஷ்டமின்றித் தீயை உண்டாக்கிவிடுகிறது. அதன் உதவியால் இஷ்டப்படி எந்த இடத்திலும் இமை கொட்டும் நேரத்தில் தீயை மூட்டிவிடலாம்.

இந்த நாட்டில் தீக்குச்சி உற்பத்தியாகத் தொடங்கி ஐம்பது ஆண்டுகள் ஆகின்றன. முதலில் அது அங்கங்கே சில தனி நபர்களின் முயற்சியாக இருந்து வந்தது. தீக்குச்சி உற்பத்தி குறைவாக இருந்ததால், இந்த நாட்டு மக்களின் தேவைக்கு அது போதுமானதாக இல்லை. சர்க்காரின் ஆதரவும் உதவியும் இல்லாததால், அது பெரிய தொழிலாக அபிவிருத்தி அடைவதற்கு வழி இல்லாமல் இருந்தது. மக்களின் தேவைக்குப் போதுமான தீக்குச்சிகள் இங்கே உற்பத்தியாகாததால், வெளி நாடுகளிலிருந்து தீக்குச்சிகளை இந்தியா இறக்குமதி செய்வது அவசியமாக இருந்து வந்தது.

முதலாவது மகா யுத்தத்தின் போதுகூட இந்த நாட்டில் தீக்குச்சி உற்பத்தி அபிவிருத்தி அடைவதற்கான முயற்சியை, அப்போது இந்தியாவை ஆண்டு வந்த பிரிட்டிஷ் சர்க்கார் கைக்கொள்ளவில்லை. அந்த யுத்தத்துக்குப் பிறகு இந்திய சர்க்காருக்கு மிகுந்த பணக் கஷ்டம் ஏற்பட்டது. அதைச் சமாளிப்பதற்காக அதிக வருமானத்துக்கு அவர்கள் வழி

மூலம்: கல்கி (தமிழ்: 25-7-'54), சென்னை.

தேட வேண்டியிருந்தது. அதற்காக அவர்கள் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி யாகிவந்த தீக்குச்சிகளுக்கு அதிக வரி விதிக்கலாயினர். அதன் விளைவாக, தீக்குச்சி இறக்குமதி பாதிக்குமேல் குறைந்துவிட்டது. அதிக வருமானம் ஒன்றையே முக்கியமாகக் கருதிய இந்திய சர்க்காரின் செய்கை, மறைமுகமாக உள்நாட்டுத் தீக்குச்சித் தொழிலுக்கு ஓரளவு ஊக்கம் அளிப்பதாயிற்று.

அப்போது தீக்குச்சி செய்வதற்கான வெறுங் குச்சிகள், தீப்பெட்டிகளின் பாகங்கள் முதலியவற்றுக்கு இறக்குமதி வரி இல்லை. எனவே, தீக்குச்சித் தொழிலில் ஈடுபட்டிருந்த நண்பர்களில் பலர் ஜப்பானிலிருந்து மேற்படி சாதனங்களைத் தருவித்து இங்கே தீக்குச்சிகளைத் தயாரித்தார்கள். அதாவது, வெளி நாடுகளிலிருந்து தருவித்த வெறும் குச்சிகளை மருந்தில் தோய்ப்பது, பெட்டிகளை ஒட்டுவது, பெட்டிகளுக்கு மருந்து பூசுவது, மருந்தில் தோய்த்த குச்சிகளைப் பெட்டிகளில் போடுவது முதலிய காரியங்களை இந்த நாட்டில் பூர்த்தி செய்து, முழுத் தீப்பெட்டிகளாக விநியோகிக்கலானார்கள்.

ஒரு சில தொழிற்சாலைகளைத் தவிர மற்றப்படி அந்த வேலைகள் எல்லாவற்றையும் ஜனங்கள் கையினாலேயே செய்தார்கள்.

பிறகுதான், சிறிது சிறிதாக ஜப்பானிலிருந்து தீப்பெட்டிகள் செய்யும் யந்திரங்களும், பெட்டிகளில் தீக்குச்சிகளை நிரப்பும் யந்திரங்களும் நம் நாட்டுக்கு வரத் தொடங்கின. என்றாலும் தீப்பெட்டி சம்பந்தமான மற்றப் பெரும்பாலான அலுவல்களையும் கையினாலேயே செய்து வந்தார்கள்.

சில வருஷங்களுக்கு முன்னால் ஸ்வீடன் தேசத்து எஞ்சினீர்கள் தீக்குச்சிகளை மருந்தில் தோய்க்கும் யந்திர வகைகளைக் கண்டுபிடித்தார்கள். அந்த முறையை முதல் முதலாக இந்தியாவில் அமலுக்குக் கொண்டு வந்தவர்கள் ஸ்வீடிஷ் மாட்ச் கம்பெனியார் தான். இந்தியாவில் மாத்திரமல்ல, உலகத்திலேயே பரந்த அளவில் தீக்குச்சி விநியோகம் அந்தக் கம்பெனியாரின் ஏகபோக பாத்தியமாக இருந்து வந்தது.

1924-ஆம் வருஷம் இந்திய சர்க்கார் மருந்து தோய்க்காத குச்சிகளுக்கும் பெட்டியின் பாகங்களுக்குங்கூடத் தீர்வை விதித்தார்கள். அதனால், தீக்குச்சி உற்பத்தி செய்வோர் மேற்படி சாதனங்களையும் இங்கேயே உற்பத்தி செய்துகொள்ளும்படியான அவசியம் ஏற்பட்டது. பிறகு தீக்குச்சி உற்பத்தி சம்பந்தமாக மேற்கொண்டு சில யந்திர வகைகளும் வெளி நாடுகளிலிருந்து வந்தன. தீக்குச்சி செய்வதற்குப் பிரத்தியேக ரகமான மரம் ஒன்று ஜப்பான், ஸ்காண்டிநேவியா, பால்டிக் நாடுகள் முதலியவற்றிலிருந்து ஏராளமாக இறக்குமதி யாகிவந்தது.

இந்திய சர்க்கார் தீக்குச்சிகளுக்கும், தீக்குச்சி உற்பத்தி செய்யும் சாதனங்களுக்கும் அதிக இறக்குமதி வரி விதித்ததால், ஸ்வீடிஷ் மாட்ச் கம்பெனியார் இந்தியாவிலேயே தொழிற்சாலைகளை அமைக்கத் தொடங்கினார்கள். 1924-இல் பம்பாய், கல்கத்தா, அஸ்ஸாம், பர்மா முதலிய இடங்களில் தங்களுடைய தொழிற்சாலைகளை அமைத்தார்கள். அதன் பலனாக

1928-ஆம் வருஷத்துக்குள் மேற்படி கம்பெனியாருக்கு இந்த நாட்டுக்குத் தேவையான தீக்குச்சிகளில் ஐம்பது சத விகிதம் உற்பத்தி செய்வது சாத்தியமாயிற்று.

அப்போது இந்தியாவில் இருபத்தேழு தீக்குச்சித் தொழிற்சாலைகள் இருந்தன. அவை வருஷத்துக்கு மொத்தம் 180 லட்சம் குரோஸ் தீப்பெட்டிகள் உற்பத்தி செய்தன.

உள்நாட்டுத் தீக்குச்சி உற்பத்தித் தொழிலை நசுக்குவதற்கு ஸ்வீடிஷ் கம்பெனியார் கையாண்ட ஆட்சேபகரமான முறைகள் தீர்வை போர்டார் விசாரணையின்போது அம்பலமாயின. இதன் பேரில், இந்தியாவுக்குத் தேவையான தீக்குச்சிகளில் ஐம்பது சதவிகிதத்துக்கு மேல் உற்பத்தி செய்வதில்லை என்று ஸ்வீடிஷ் மாட்ச் கம்பெனியார் உறுதி கூறினர்கள். என்றாலும், அவர்கள் தங்கள் வாக்குறுதியைக் காப்பாற்றவில்லை. 1953-ஆம் ஆண்டில் அந்தக் கம்பெனியார் அறுபத்தொன்பது சதவிகிதம் உற்பத்தி செய்திருக்கிறார்கள். 'அதாவது உள்நாட்டுத் தீக்குச்சித் தொழிலின் அபிவிருத்திக்கு அவர்கள் தடையாக இருந்து வருகிறார்கள்' என்று சொல்ல வேண்டும். எனவே, உள்நாட்டுத் தீக்குச்சித் தொழிலின் நிலைமையை மீண்டும் பரிசீலனை செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அப்படிப் பரிசீலனை செய்து உள்நாட்டுத் தீக்குச்சித் தொழிலைப் பாதுகாப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

இது சம்பந்தமாக அகில இந்தியக் கதர்-கிராமக் கைத்தொழில் போர்டார் கவனம் செலுத்தி வருகிறார்கள்.

அந்நியக் கம்பெனியின் போட்டியை ஒழிப்பதுடன், உள்நாட்டிலும் தீக்குச்சித் தொழிற்சாலைகள், பெரிய முதலாளிகள் நடத்தும் தொழிலாகிவிடாமல் கவனமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

கிராமங்களில் அவரவர்களுடைய வீடுகளில் சிறிய அளவில் நடக்கும் தொழிலாகவே தீக்குச்சித் தொழில் நடந்து வரும்படி செய்ய வேண்டும்.

இதற்கு வேண்டிய பிரயத்தனங்களை அகில இந்தியக் கதர்-கிராமக் கைத்தொழில் போர்டார் எடுத்து வருகிறார்கள்.

இந்தியாவில் உள்ள முப்பத்தாறு கோடி ஜனங்களுக்கு மூன்று கோடியே இருபது லட்சம் குரோஸ் தீப்பெட்டிகள் செலவாகின்றன. அதாவது, ஒருவருக்கு மாதம் ஒரு தீப்பெட்டி வீதம் செலவாகிறது.

தேசியப் பொருளாதார அபிவிருத்தித் திட்டத்தில் தீக்குச்சி உற்பத்தி செய்யும் சிறு தொழிலுக்கு முக்கிய ஸ்தானம் அளிக்க வேண்டும் என்று திட்டக் கமிஷன் தெளிவாகக் கூறுகிறது.

இந்தக் கிராமக் கைத்தொழில் வளர்ச்சியை அகில இந்தியக் கதர்-கிராமக் கைத்தொழில் போர்டாரின் மேற்பார்வையில் விட வேண்டும் என்று திட்டக் கமிஷன் தீர்மானித்திருக்கிறது.

இப்போது கிராமக் கைத்தொழில்களின் மூலம் 6 லட்சம் குரோஸ் தீப்பெட்டிகள் உற்பத்தியாகி வருகின்றன. நாலு வருஷங்களுக்குள் இந்த உற்பத்தியைப் பதினெட்டு லட்சம் ஆக்கிவிட

வேண்டும் என்று திட்டக் கமிஷன் கூறுகிறது.

தீக்குச்சி உற்பத்தித் தொழிற் சாலைகளை ஏ. பி. ஸி., என்று மூன்று தரமாகப் பிரித்திருக்கிறார்கள்.

'ஏ' வகுப்புத் தொழிற்சாலை களில், ஐந்து லட்சம் குரோஸுக்கு மேல் உற்பத்தியாகும்; மொத்த உற்பத்தி அளவுக்கு வரம்பு கிடையாது.

'பி' வகுப்புத் தொழிற்சாலை களில் வருஷத்துக்கு ஐந்து லட்சம் குரோஸ் தீப் பெட்டிகளுக்குமேல் உற்பத்தியாகாது.

'ஸி' வகுப்புத் தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் தினம் நூறு குரோஸ் உற்பத்தியாகும்.

இந்த மூன்று தரமான தொழிற் சாலைகளில் 'பி', 'ஸி' வகுப்புக் களைச் சேர்ந்த சிறிய கைத்தொழிற் சாலைகளுக்குச் சர்க்கார் வரி தள் ளிக் கொடுத்து உதவுகிறார்கள்.

தீக்குச்சித் தொழில் இன்ன மும் சிறிய அளவில் அங்கங்கே பரவலாக ஏற்படுவதற்குப் பிரயத் தனம் செய்ய வேண்டும்.

தீக்குச்சிகளுக்கு மூங்கிலை உப யோகிக்க முடியும் என்பதை, சமீ பத்தில் புது டில்லியில் நடந்த அகில இந்தியக் கதர்-கிராமக் கைத்தொழில் காட்சியில் நிரூபித் துக் காட்டினார்கள். மூங்கிலை உப யோகிப்பதன் மூலம் தீக்குச்சி உற் பத்திச் செலவில் சிக்கனம் செய் வது சாத்தியமாகும். மரத்தி லிருந்து தீக்குச்சி செய்வதற்கு யந் திரங்கள் தேவையாயிருக்கின்றன. ஆனால் மூங்கிலிலிருந்து தீக்குச்சி கள் செய்ய யந்திரங்கள் தேவை யில்லை. இந்தியக் கிராமப் பிர தேசங்களில் ஏராளமாக மூங்கில் கள் கிடைக்கின்றன. ஒரு தண்டு மூங்கிலிலிருந்து 180 டஜன் தீக் குச்சிகள் கிடைக்கும் என்று கணக்கு எடுத்திருக்கிறார்கள்.

தினசரி இருபத்தைந்து குரோஸ் தீப்பெட்டிகளை உற்பத்தி செய்யக்கூடிய இரண்டு சிறிய தொழிற்சாலைகளை ஏற்படுத்தி, அந்தத் தொழில் சம்பந்தமான நுணுக்கங்களை ஜனங்களுக்கு நேரில் காட்ட அகில இந்தியக் கதர் - கைத்தொழில் போர்டார் உத்தேசித்திருக்கிறார்கள். இந்தத் தொழிற்சாலை ஒவ்வொன்றுக்கும் ரூ. 7,000 மான்யம் அளிப்பார்கள்.

தீக்குச்சி தயாரிப்பதற்கான மூங்கில் குச்சிகள், தீக்குச்சிகளைப் பற்ற வைப்பதற்காகப் பெட்டிகள் மீது பூசும் மருந்து முதலிய தீக் குச்சி உற்பத்தி சம்பந்தமான பல அலுவல்களையும் ஜனங்களுக்குச் செய்து காட்டுவதற்காகக் கல்கத் தாவுக்கு அருகில் மற்றொரு தொழிற்சாலையை ஆரம்பிக்கப் போகிறார்கள். மற்றும் 'ஸி' வகுப் பைச் சேர்ந்த சிறிய தீக்குச்சித் தொழிற்சாலைகளுக்கு இந்த வரு ஷத்தில் எண்பதாயிரம் ரூபாய் உதவி அளிக்கத் தீர்மானித்திருக் கிறார்கள். தற்போது மூடிக் கிடக்கும் பல சிறிய தீக்குச்சித் தொழிற்சாலைகளை மீண்டும் திறப் பதற்குப் பண உதவி செய்யவும் அகில இந்தியக் கதர் - கைத் தொழில் போர்டார் உத்தேசித் திருக்கிறார்கள். 25 குரோஸ் மட்டும் உற்பத்தி செய்யும் தொழிற் சாலைகளுக்கு விசேஷ மான்யம் கொடுக்க எண்ணியிருக்கிறார்கள். இந்த முறைகளால் நம் நாட்டில் தீக்குச்சி உற்பத்தித் தொழில் பரவலாகவும் உண்மையான வீட் டுத் தொழிலாகவும் அபிவிருத்தி அடைந்து பெருகும் என்று எதிர் பார்க்கலாம்.

# கொரியாக்காரன் தொப்பி

★

**வெள்ளைக்காரன் தொப்பி போடு முன்பே, கொரி யாக்காரன் தொப்பி போட்டுவிட்டான். அது பற்றிய இந்த விசித்திரக் கதை பழமையானது.**

சீனாவில் மகான் கன்ஃப்பூஷஸ் பிறப்பதற்கு ஆயிரத்து நூறு வருஷங்களுக்கு முன்பு, கிஜா என்ற ஞானி ஒருவர் வாழ்ந்தார். ராஜ சபையில் அவரே முதல் மந்திரியாக இருந்தார். அவருடைய நீதி, நற்குணம், அன்பு இவைகளை எல்லாரும் பாராட்டிப் போற்றினார்கள்.

ஆனால், பெரிய யுத்தம் ஒன்று வந்தது. புதிய வம்சம் ஒன்றின் அரசர் ஆட்சி செய்யத் தொடங்கினார். அவரிடம் வேலை செய்ய, கிஜா மறுத்துவிட்டார். கிழக்கே வெகு தூரத்திலுள்ள பிரதேசத்துக்குப் போய் வசிக்கத் தீர்மானித்தார். அங்கேயுள்ள மக்களுக்கு நாகரிகத்தையும் மரியாதை முறைகளையும் போதிக்க எண்ணினார்.

கிஜா நாட்டைவிட்டுப் போவதில் புதிய அரசருக்கு வருத்தந்தான். கிஜாவின் நற்குணத்தையும் ஞானத்தையும் அவர் பாராட்டினார். ஆகவே, மிகச் சிறந்த ஆயிரம் மக்களைக் கிஜாவுடன் செல்ல அரசர் அநுமதித்தார். அவர்களில் பெரும்பாலோர் கிஜாவின் சிஷ்யர்களே. கிழக்கத்தி அநாகரிக மக்களிடம் போய், தங்கள் குருவுடன் வசிக்க அந்தச் சிஷ்யர்களுக்கு அரசர் அநுமதி கொடுத்தார்.

மஞ்சூரியாவின் பெரிய சமவெளியில் கிஜாவும் அவருடைய பட்டாளமான மக்களும் நடந்தார்கள். சூரியன் உதிக்கும் கீழ்த் திசையை நோக்கியபடி மேலும் மேலும் சென்றார்கள். யாலு என்ற பச்சை வாத்து நதியைக் கடந்தார்கள். சில நாளைக்கெல்லாம் கீழ்த்திசையின் 'டாடாங்' என்ற மகாநதிக் கரையை அடைந்தார்கள். அங்கே பூமி மிக்க அழகாயிருந்தது. அதிலே குடியேறி, அழகிய நகரம் ஒன்றை அமைக்க, கிஜா தீர்மானித்தார். சூரியோதய காலத்தில் வானத்திலே ரோஜாவும் சொர்ணமும் பலவிதச் சிவப்புடன் கூடி அழகு ததும்பும் மேகங்கள் சஞ்சரிக்கும் அந்த நாட்டுக்கு, உதய சூரிய ஜோதி என்று கிஜா பெயர் வைத்தார்.

தம் ராஜ்யத்தின் தலைநகராகக் கொள்வதற்கு ஓர் இடத்தைக் கிஜா எல்லை கட்டி வைத்தார். அந்த எல்லையில் ஒரு சுவர் எழுப்ப ஆரம்பித்தார். அந்தத் தலைநகருக்குப் பிங்யாங் என்று பெயர் வைத்தார். பிங்யாங் என்றால், வடக்கு அரண்மனை என்று பொருள்.

இலக்கியம், கவிதை, இசை, வைத்தியம், தத்துவ தர்சனம் இவைகளிலெல்லாம் சிறந்த

நிபுணர்கள், கிஜாவுக்கு ராஜ்ய நிர்வாகத்தில் துணை புரிந்தார்கள். இதோ இந்த எட்டு விஷயங்கள் பற்றிய பெருஞ் சட்டங்களை ராஜ்யத்தில் அவர்கள் பிரகடனம் செய்தார்கள்:

1. ஆண்கள் விவசாயம் செய்ய வேண்டும்.

2. பெண்கள் நெசவு நெய்ய வேண்டும்.

3. திருடர்களைத் தண்டிக்க வேண்டும்.

4. கொலையாளிகளைச் சிரச்சேதம் செய்ய வேண்டும்.

5. நிலம் முழுவதையும் ஒன்பது சதுரங்களாகப் பிரித்து, நடுச் சதுரத்தை ராஜாங்க வரும்படிக்காக எல்லாருமே சமுதாயமாகப் பயிரிட வேண்டும்.

6. சகலரும் எளிய வாழ்வு வாழ வேண்டும்.

7. சட்டப்படியே மணம் புரிய வேண்டும்.

8. கெட்ட மனிதர்களை அடிமைகளாக்கிவிட வேண்டும்.

கிஜா ரஸ்தாக்கள் போட்டார்; அளவுகளையும் தூரங்களையும் நிர்ணயம் செய்தார்; மரியாதை முறைகளை விதித்தார். கூரை வீடு அல்லது ஓட்டு வீடு கட்டுவது எப்படி, தரைக்குக் கீழே புகைக் கூண்டுக் குழாயைச் செலுத்தி அறைக்கு உஷ்ண மூட்டும் 'காங்' என்பதைக் கட்டுவது எப்படி என்றெல்லாம் காட்டுமிராண்டி ஜனங்களுக்குக் கிஜா சொல்லிக் கொடுத்தார்.

இந்த ஆரம்ப காலத்தில் ஜனங்கள் மிக்க முரடர்களும் மூர்க்கர்களுமாக இருந்தார்கள். எப்போது பார்த்தாலும் குரூரமாகச் சண்டை போடுவார்கள். கொலை நடப்பது சர்வ சாதாரணமாயிருந்தது. இவர்களை அமைதியுள்ளவர்களாக்குவதற்குச் சில வழிகளை வகுத்தாக வேண்டும் என்று கிஜா கருதினர். முதலில் சாந்தமான முறைகளை அவர் அநுஷ்டித்தார்.

முரடர்கள் தங்கள் தங்கள் தலை மயிரை வாரிக் கட்டாமல் நீளமாகத் தங்கள் முதுகில் அருவி போல் தொங்கவிட்டுக்கொண்டிருப்பதைக் கிஜா கண்டார். அவர் ஒரு புதிய சட்டம் பிறப்பித்தார். கலியாணமான ஒவ்வொரு மனிதனும் உச்சந் தலையில் மயிரைச் சுருட்டிக் கொண்டை போட்டுக்கொள்ள வேண்டும் என்று அதில் விதித்தார். கொரியாக்காரர்களின் உச்சிக் கொண்டை இப்படித்தான் சட்டபூர்வமாக ஸ்தாபிதமாயிற்று. வாலிபர்களோ தங்கள் தலை மயிரை வாரிப் பின்னி முதுகுப்புறத்தில் தொங்கவிட்டுக்கொள்ள வேண்டும். மணம் ஆகாத வரைக்கும் எவனும் சின்னப் பையனே யாவான்; பெரியவர்கள் முன்னிலையில் அவன் வாய் திறக்கக் கூடாது. மணம் ஆகாதவன் உச்சிக் கொண்டை போட்டிருப்பதாகக் கண்டு பிடித்தால், அவனுக்குக் கடுமையான தண்டனை கொடுக்க வேண்டும் என்று கிஜா விதித்தார்.

ஆனல், கிஜாவின் நல்ல நோக்கத்தை அந்த ஜனங்கள் புரிந்து கொள்ளவில்லை. ஒருவரோடு ஒருவர் சண்டையிடும்போது, பிடித்துக்கொள்ள நல்ல வசதியாக உச்சிக் கொண்டை உபயோகப்படத் தொடங்கியது.

முரட்டுத் தடியர்கள், சின்னப் பயல்களின் கொண்டையைப் பிடித்துக்கொண்டு குரூரமாய்த்

தாக்கினார்கள். தவிர, தடியால் ஒருவர் மண்டையை ஒருவர் உடைத்துக்கொண்டார்கள். பல கொலைகள் நடந்தன. இந்தக் கோரேங்களைத் தடுப்பதற்காக, கிஜா ஒருவித மண் பானைத் தொப்பியைத் தயார் செய்தார். இந்தத் தொப்பியை அணிந்து கொண்டால், ஒருவருக்கொருவர் உயர்ந்தபட்சம் ஒரு கஜ தூரம் வரையில்தான் நெருங்க முடியும்.

"இந்தப் பயல்களுடைய சண்டை சச்சரவுகளை அடியோடு தடுத்துவிடுகிறேன். இவர்களுக்குச் சண்டைபோடுவதுஎன்னவோ ஒரு வேடிக்கையாயிருக்கிறது. இந்தத் தமாஷாவால் நல்ல பண நஷ்டம் உண்டாகும்படி செய்கிறேன். இரண்டு முரடர்கள் சண்டையிடும் ஒவ்வொரு தடவையும் பல பானைகள் உடைந்தால், அந்த நஷ்டம் அவர்கள் தலையில் தானே சுமரும்" என்று சொல்லிக் கொண்டார் கிஜா.

கனமான களிமண்ணால் தொப்பிகள் வனையச் செய்தார். இந்தத் தொப்பிகளின் அகலம் நாலடி; உயரம் இரண்டடி; நிறை பல ராத்தல். கல் மாதிரி உறுதியாகும்படி நன்றாக இவற்றைச் சுடச் செய்தார். பெரிய கூழ்ச் சட்டி மாதிரி இவை தோற்றம் அளித்தன.

துஷ்டர்களும் சண்டைக்காரர்களும் இந்தக் கனமான மண் தொப்பிகளை அணியும்படி கிஜா கட்டாயப்படுத்தினார். பல ஆண் பிள்ளைகள் ஓரிடத்தில் கூடினால், அங்கே ஏராளமான காளான் குடைகளே இயங்குவது போல் காட்சியளிப்பார்கள். அவர்கள் சண்டையிடும்போது இப்போதெல்லாம் மண்டைகள் உடைவதில்லை; தொப்பிப் பானைகள்தான் உடைந்தன. சண்டையில் தாக்கிச் சட்டத்தை மீறியவர்கள் யார் என்பதை இதன்மூலம் சுலபமாய்க் கண்டு பிடித்து, அவர்களைக் கிஜா தண்டித்தார். இதோடு போகாமல், சண்டையிட்டவர்கள் பானைக்காரனிடம் போய்ப் புதிய தொப்பிகளை வேறு வாங்கிக்கொள்ள வேண்டும். ஆகவே, சண்டை என்பது பெரும் பணச் செலவுக்கு இடமான வியாபாரமாய் முடிந்தது. ஒரு தொப்பியை வாங்கிக் கொள்ள, அரை வருஷச் சம்பளத்தைக் கொடுக்க வேண்டியதாயிருந்தது.

கிஜாவின் யுக்தி பலித்தது. உச்சிக் கொண்டைக்குத் தொப்பிப் பானைகள் நல்ல பாதுகாப்பாயின. ஜனங்களுக்கும் அவை பிடித்துப் போயின. முரடர்கள் மற்றவருடைய குடுமியைப் பிடிப்பதையும் மண்டையை உடைப்பதையும் நிறுத்திவிட்டார்கள். கோபம் வந்தால், திட்டுவார்கள்; உறுத்து விழிப்பார்கள் - இதோடு நிறுத்திக்கொண்டார்கள். இது ஒன்றும் அப்படி ரத்தம் சிந்தும் அபாயம் போல் மோசமில்லை. எவன் மற்றவனைவிடப் பயங்கரமாய் விழித்துப் பல்லை நறநறவென்று கடித்தானோ அவனே பெரிய வீரனாக இப்போது விளங்கத் தொடங்கினான்.

பானைத் தொப்பிகள் பெரிய 'பாஷ'னாகிவிட்டன. ஜனங்கள் அவைகளை விரும்பி அணிந்தார்கள். பெண்கள்கூட அவைகளை அணிய ஆசைப்பட்டார்கள். ஏனென்றால், அவைகள் பல காரியத்துக்கு உபயோகப்பட்டன.

அவைகளை நிமிர்த்தி வைத்தால், துணி துவைக்கும் தொட்டியாய் உதவின. தங்கள் கணவரின் பழைய பானைத் தொப்பிகளை இந்தக் காரியத்துக்காக அநேகம் பெண்கள் உண்மையிலேயே சற்று நேரத்துக்கு இரவல் வாங்கிக் கொண்டார்கள். குதிரை, ஆடு மாடு, கழுதை இவைகளுக்குத் தண்ணீர் காட்டவும் தீனி போடவும் தொட்டிகளாகக்கூட அந்தத் தொப்பிகள் பயன்பட்டன.

பானைத் தொப்பியை அணியப் பெண்களுக்கு அநுமதியில்லை. என்ருலும், அந்தத் தொப்பிகளை அமலுக்குக் கொண்டு வந்ததற்காகக் கிஜாவிடம் பெண்களுக்கு மிகுந்த நன்றி. முரடர்களின் தடிக் கம்புகளைக் கிஜா பயன்படாதபடி செய்துவிட்டார். அந்தத் தடிக் கம்புகளை அவர்கள் தங்கள் மனைவிகளிடமும் பெண்களிடமும் கொடுத்துவிட்டார்கள். அவைகளை அவர்கள் துணி வெளுக்கவும் இஸ்திரி போடவும் உபயோகித்தார்கள். இந்த விதமாக ஆண்களின் துணிகளை - முக்கியமாக வீட்டுத் தலைவனின் வெண்மையான மேல்சட்டையை - வெளுத்துக் கஞ்சி போட்டு நேர்த்தியாகப் பளபளக்கச் செய்யும் கலையில் கொரியாவின் பெண்கள் தேர்ச்சி பெற்ருர்கள். மண்டை பிளக்கும் தடிக் கம்புகள் இந்த விதமாகச் சலவைக் கருவிகளாக மாறிவிட்டன; இதே சமயத்தில் முரட்டுத் துஷ்டர்களும் நாகரிக கனவான்களாகிவிட்டார்கள். இதுமுதல் கொரியாக்காரர்கள் மரியாதைக்குப் பெயர் பெற்றவர்களாகி விட்டார்கள்.

தவிர, ஆண்கள் மிக்க அழகாக நடந்துகொள்ளத் தொடங்கினர்கள். தங்கள் மனைவியரிடமும் பெண்களிடமும் அன்பு சொரிந்தார்கள். ஏனென்ருல், அவர்கள் தானே இவர்களுக்குப் பளபளப்பான உடை தயாரித்துத் தருகிருர்கள்? கோடைக் காலம் வந்தால், 'உஷ்ணம் தாங்கவில்லையே! வேர்வையால் அரிய உடை நாசமாகுமே!' என்று கனவான்கள் முணுமுணுத்தார்கள். இதற்காக, நூலிழை போன்ற மூங்கில் சிம்புகளால் உட்சட்டை தயாரித்துக் கொள்ளலாம் என்று கிஜா அதுமதித்தார். இதனுல் கொரியாக்காரர்கள் கூடு போன்ற உட்சட்டைகளின்மீது மேல்சட்டைகளை மாட்டியிருப்பார்கள். மேல் சட்டைகளை அவர்கள் கழற்றும் போது, ஏதோ எலும்புக் கூட்டைப் போர்த்திருந்த தோலையே உரித்து எடுப்பதுபோல் தோன்றும்.

காலம் செல்லச் செல்லப் பழக்க வழக்கங்கள் அபிவிருத்தியடைந்தன. பிரம்பு இழைகளைக் கொண்டு தயாரித்த உடைகள் சுகமாயிருக்கவே, கனமான பானைத் தொப்பிகளைக் கொரியாக்காரர்கள் கை விட்டு விட்டார்கள். குதிரை வால் மயிரிலே பின்னிய 'குருவிக் கூடு'களைத் தங்கள் கொண்டைக்கு மேலே அணிந்துகொண்டார்கள். வீட்டுக்கு வெளியே வரும்போது, அந்தக் குருவிக் கூட்டுக்கு மேலே, வைக்கோல், நாணல் தட்டை, பிரம்பு இழை, அரக்குப் பூசிய பளபளப்பான கறுப்புக் காகிதம் இவைகளுள் ஒன்ருல் செய்த 'கூரை'யைக் கவிழ்த்துக்கொள்வார்கள். சமூகத்தில் அவரவருக்குள்ள அந்தஸ்துப்படி அது அமைந்திருக்கும். கொரியா இப்படியாக, தொப்பிகள் நிறைந்த ஒரு நாடாகி விட்டது.

# களவு போன கடிதம்

அசல்: **எட்கர் அல்லன் போ**
தமிழ்: **பெ. நா. அப்புஸ்வாமி**

**பிற்காலத்துத் துப்பறியும் கதைகளுக்கெல்லாம் வழி காட்டிய ஒருவர் போ என்று சொல்லலாம். அமெரிக்காவில் 1809-இல் பிறந்து 1849 வரை இவர் வாழ்ந்தார். சிறந்த கவிஞர். அதிசயங்களும் மர்மங்களும் நிறைந்த ருசிகரமான கதைகளும் எழுதினார். இங்கே தந்திருப்பது அவர் எழுதியிருக்கும் பிரபல துப்பறியும் கதை ஒன்றின் சுருக்கம்.**

பாரிஸ் நகரத்தில், 18—ஆம் வருஷத்து இலையுதிர் காலம். ஒரு நாள் மாலையில் புத்தகம் நிறைந்த எங்களுடைய சிறு படிப்பறையில் என் நண்பன் சி. ஒகஸ்தே துபனும் நானுமாகச் சாய்வு நாற்காலிகளில் அமர்ந்திருந்தோம். சுங்கானை வாயில் வைத்துப் புகை குடித்தும், மனக் கோட்டைகளைக் கட்டிக்கொண்டும், உல்லாசமாகப் பொழுது போக்கினோம். நாங்கள் இருவரும் வாய் திறந்து ஒரு பேச்சுக்கூடப் பேசாமல், ஒரு மணி நேரத்துக்கு மேல் மௌனத்தில் இருந்தோம். ஆனால், அன்று மாலை மோர்க்யூ வீதியில் நடந்த கோர நிகழ்ச்சியையும், மாரி ரோஷேயின் கொலையின் மர்மத்தையும்பற்றிச் சற்று முன்புதான் பேசிக்கொண்டிருந்தோம். அதன் பின்பு, என் மனமெல்லாம் அவற்றிலேயே சென்றுகொண்டிருந்தது. நான் யோசனையில் இவ்வாறு ஆழ்ந்து கிடந்தபொழுது, அறைக் கதவு திடீரென்று திறந்தது. ஜி- உள்ளே வந்தான். அவனை எங்களுக்கு முன்னமேயே நன்றாகத் தெரியும். அவன் பாரிஸ் நகரத்தின் போலீஸ் தலைவன்.

அவனை நாங்கள் மனமார வரவேற்றோம். அப்போது நாட்டில் பெருங் குழப்பத்தை உண்டாக்கக் காரணமாக இருந்த ஓர் அரசாங்க நிகழ்ச்சியைப்பற்றி எங்களோடு கலந்து ஆலோசிப்பதற்காகவே, (அதாவது, என் நண்பனுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்வதற்காகவே) தான் வந்ததாக ஜி-தெரிவித்தான். துபன் அவனுக்கும் ஒரு சுங்கானைக் கொடுத்தான். சௌகரியமான நாற்காலி ஒன்றை அவன் பக்கமாக இழுத்துப் போட்டான்.

“இப்பொழுது என்ன புதிய ஆபத்து வந்துவிட்டது? இன்று படுகொலை ஏதாவது நடந்துவிட்டதா?” என்றேன் நான்.

“இல்லை. அதொன்றும் இல்லை. உண்மையில், நான் வந்த காரியம் மிகவும் சாமானியக் காரியந்தான். நாங்களே அதைத் தக்கபடி பார்த்துக்கொள்ளவும் முடியும்; சந்தேகம் இல்லை. இருந்தாலும்

துபனுக்கு அதன் விவரங்களைக் கேட்க ஆசையாயிருக்கும் என்று நினைத்தேன். அது அவ்வளவு விசித்திரமானது."

"சாமானியம்; ஆனால், விசித்திரம்!" என்றான் துபன்.

"ஏன்? அது அப்படித்தான் இருக்கிறது. ஊன்றிப் பார்த்தால் அது அப்படியும் இல்லை. உண்மையாக, விஷயம் மிகவும் சாமானியமானதுதான். அப்படியிருந்தும், எங்கள் எல்லோருக்கும் இன்னது செய்வது என்று தெரியவில்லை. ஓர் அற்பக் காரியம் எங்கள் எல்லோரையும் ஒரேயடியாய் மடக்கி விட்டது."

"ஒருவேளை, அது அவ்வளவு சாமானியமாய் இருப்பதால்தான் நீங்கள் ஏமாந்துபோனீர்களோ என்னவோ?" என்றான் என் நண்பன்.

"என்ன வெட்டி வம்பு பேசுகிறாய்?" என்று சிரித்தான் போலீஸ் தலைவன்.

"மர்மம் அளவுக்கு மிஞ்சிப் போய்ச் சாமானியத்திலும் சாமானியமாய் இருந்தாலும் இருக்கலாம்" என்றான் துபன் மீண்டும்.

"அட, தெய்வமே! இப்படி ஒன்றை இதுவரை யாராவது கேட்டதுண்டா?"

"கண்ணுக்குத் தெரியாதபடி அவ்வளவு பகிரங்கமாய் இருக்கலாம்" என்றான் துபன் தொடர்ந்து.

"ஹா! ஹா! ஹா!—ஹா! ஹா! ஹா!—ஹோ! ஹோ!" என்று உருண்டு உருண்டு சிரித்தான் எங்கள் விருந்தாளி. துபன் பேசியது அவனுக்கு வெறும் வேடிக்கைப் பேச்சாகத் தோன்றிற்று. "துபன், ஒரு நாளில்லாவிட்டால் ஒரு நாள், நீ என்னைச் சிரித்து வயிறு வெடிக்கச் செய்துவிடப் போகிறாய்" என்றான்.

"அது கிடக்கட்டும். இப்பொழுதாவது நீ வந்த சங்கதி என்ன என்று சொல்லமாட்டாயா?" என்றேன் நான்.

"ஏன்? சொல்லாமல் என்ன? சொல்லுகிறேன். கேளுங்கள்" என்று சொல்லி ஆலோசனையில் ஆழ்ந்தான். விருந்தாளி நாற்காலியில் சௌகரியமாய் அமர்ந்தான். பிறகு, "நான் எச்சரிக்கை செய்ய வேண்டும். இது மிகவும் ரகசியமான விஷயம், இதைப்பற்றி நான் வேறு ஒருவரிடம் பேசினேன் என்பது வெளியில் தெரிந்தால், என் வேலை போய்விடும்" என்றான்.

"சொல்" என்றேன் நான்.

"இல்லாவிட்டால் வேண்டாம்" என்றான் துபன்.

"சரி. கேளுங்கள்....மிகப் பெரிய இடத்திலிருந்து எனக்கு நேரே ஒரு செய்தி கிடைத்தது. அரண்மனையில் மிக முக்கியமான பத்திரம் ஒன்று போய்விட்டது. அதைத் திருடியவன் எவன் என்பது தெரியும்; சந்தேகம் இல்லை. அதை எடுக்கும்போது அவனைக் கண்கூடாகப் பார்த்தவர் உண்டு. இன்னும் அது அவன் வசமே இருக்கிறது என்பதும் நிச்சயமாய்த் தெரியும்."

"அது எப்படித் தெரியும்?" என்றான் துபன்.

"பத்திரத்தின் தன்மையைத் தெரிந்ததால் தெரியும். திருடியவன் வசமிருந்து அந்தப் பத்திரம் வெளியே போனால், அதாவது, அவன் அதை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்று எண்ணியிருப்பானோ அப்படி அதை அவன் உபயோகப்படுத்தியிருந்தால், இதற்குள் சில விபரீத விளைவுகள்

தோன்றியிருக்கும். அப்படி ஒன்றும் நிகழாததால், அந்தப் பத்திரம் இன்னும் அவன் வசமிருந்து வெளியேறவில்லை என்று சந்தேகமின்றிக் கூறலாம்.''

''நீ சொல்வது மற்றவருக்கு விளங்கும்படி தெளிவாய்ச் சொல்லக்கூடாதா?'' என்றேன் நான்.

''இது மட்டும் வெளிப்படைகச் சொல்லலாம் என்று எண்ணுகிறேன். இந்தக் காகிதம் யார் வசம் இருக்கிறதோ, அவருக்கு இதனுல் ஓர் இடத்தின்மீது ஒரு விதமான சக்தி - அதிகாரம் - ஏற்பட்டிருக்கிறது. அந்த இடத்தின்மீது யாருக்கு அதிகாரம் இருந்தாலும், அந்த அதிகாரம் மிக மிக உயர்ந்திருக்கும்'' என்ருன் போலீஸ் தலைவன். அரசியல் பேச்சில் பொருள் விளங்காதபடி பேசுவதில் அவனுக்குப் பிரியம் அதிகம்.

''இன்னும் எனக்கு ஒன்றும் விளங்கவில்லை'' என்ருன் துபன்.

''விளங்கவில்லையா? சரி, கேள்: இன்னர் என்று இங்கே நான் குறிப்பிட விரும்பாத ஒருவரிடம் இந்தப் பத்திரத்தைக் காட்டிவிட்டால், மிக மிக உயர்ந்த பதவியிலுள்ள மற்ருெருவருடைய மானத்துக்குப் பெருங்கேடு வந்துவிடும். இந்தக் காரணத்தால், அது யார்வசம் இருக்கிறதோ அவருக்கு, யாருடைய மானமும் மன அமைதியும் ஆபத்துக்கு இடமாகிவிட்டனவோ அந்த-மிக மிக உயர்ந்த பதவியிலுள்ள-நபரின் மீது ஓர் அதிகாரம், ஒரு சக்தி, ஏற்பட்டுவிட்டது.''

நான் சொன்னேன்: ''ஆனல் திருடியவன் யார் என்று பத்திரத்தைப் பறிகொடுத்தவருக்குத் தெரியும் என்று திருடனுக்கே தெரிந்திருந்தால்...அப்போது அவனுக்கு இந்தச் சக்தி இருக்குமோ? இராதே! யார்தான் துணிந்து...''

ஜி - குறுக்கிட்டு, ''திருடன் யார் தெரியுமா? டி - தான் அந்தத் திருடன். அவனுடைய துணிவுக்கு அளவே கிடையாது. அவன் திருடிய மாதிரியும் மிகத் துணிகரமானது; மிகவும் சாமர்த்தியமானது. நாம் குறிப்பிடும் பத்திரம் - உங்களிடம் இனி இதை ஒளிப்பானேன்? - அது ஒரு கடிதம். உயர் பதவியிலுள்ள ஒருவர் அரண்மனையில் தம்முடைய அந்தரங்க அறையில் தனியாய் இருக்கும்போது, அந்தக் கடிதம் ரகசியமாய் வந்து சேர்ந்தது. அவர் அதைப் படித்துக்கொண்டிருந்தார். அப்போது எந்தப் பெரியவரிடமிருந்து அந்தக் கடிதத்தை மறைப்பது முக்கியமோ அந்தப் பெரியவரே எதிர்பாராமல் திடீரென்று அங்கே வந்துவிட்டார். அதனுல், அந்தக் கடிதத்தைப் படித்து முடிப்பதற்குத் தடை ஏற்பட்டுவிட்டது. மேஜை அறை ஏதாவதொன்றில் அதைத் திணித்து மறைத்துவிடலாம் என்று அதிகாரி அவசரமாய் முயலுவதற்குள் பெரியவர் அருகில் வந்துவிடவே, அந்த முயற்சி கைகூடவில்லை. ஆகவே, அதிகாரி அந்தக் கடிதத்தைப் பிரித்தபடியே ஒரு நாற்காலியில் வைக்கும்படி நேர்ந்துவிட்டது. நல்ல வேளையாக, மேல் விலாசம் எழுதிய பக்கம் மேல்புறமாகவும், செய்தி எழுதிய பக்கம் அடிப்புறமாகவும் இருந்தன. ஆதலால், அங்கே வந்த பெரியவர் அந்தக் கடிதத்தைக் கவனிக்கவில்லை. அந்த நெருக்கடியான சமயத்தில்

மந்திரி டி - உள்ளே வந்தான். அவனுடைய கழுகுக் கண்ணில் அந்தக் கடிதம் பட்டுவிட்டது. அதன் மேல் விலாசம் யாருடைய கையெழுத்து என்று அதைப் பார்த்தவுடனேயே அவனுக்குத் தெரிந்துவிட்டது. அந்தக் கடிதம் யாருக்கு எழுதியிருந்ததோ, அந்தப் பெரியவர் மனம் குழம்பித் தடுமாறுவதையும் கவனித்தான். ஆகையால், அது ஒரு ரகசியக் கடிதம் என்று அவன் எளிதில் ஊகித்துக்கொண்டான். தான் எண்ணி வந்த காரியங்களை வழக்கம்போல் சுறுசுறுப்பாயும் ஊக்கத்துடனும் செய்து முடித்தான். மேஜைமேல் கிடந்த கடிதத்தைப்போல் இருந்த வேறு ஏதோ ஒரு கடிதத்தைத் தன் சொக்காய் ஜேபியிலிருந்து எடுத்தான். அதைப் பிரித்துப் படிப்பதுபோல் பாவனை செய்தான். மேஜையின் மீது இருந்த கடிதத்தின் பக்கத்தில் அதை வைத்துவிட்டு, பத்துப் பதினைந்து நிமிஷம் வரை அரசியல் விஷயமாகப் பேசிக்கொண்டிருந்தான். கடைசியாக, விடை பெற்றுக்கொண்டு போகும்போது, மேஜையின்மேல் இருந்த தன் கடிதத்தை எடுத்துக்கொள்ளாமல், தனக்குப் பாத்தியமில்லாத மற்றக் கடிதத்தை எடுத்துக் கொண்டு புறப்பட்டான். அந்தக் கடிதத்துக்கு உரியவர், அவன் செய்த துணிகரச் செயலைக் கண் கூடாகக் கண்டார். ஆனால், மற்றொரு பெரியவர் தம் பக்கத்தில் இருந்தபடியால், அந்தத் திருட்டுச் செயலைத் தடை செய்யவாவது, கண்டிக்கவாவது அவருக்கு முடியாமல் போயிற்று'' என்றான்.

துபன் என்னைப் பார்த்துச் சொன்னான்:

''சரி; சரி. பிடி சரியான பிடியாயிருக்க வேண்டுமானால், ஒன்று முக்கியம் என்று அப்பொழுதே சொன்னாயே - அதாவது, பறிகொடுத்தவருக்குத் திருடன் யார் என்று தெரியும் என்பது திருடனுக்குத் தெரிந்திருக்கவேண்டும் என்று - அந்த அம்சம் இதில் முற்றும் பொருந்தியிருக்கிறது.''

''ஆம்; உண்மை. இப்படித் தனக்குக் கிடைத்த சக்தியைச் சில மாத காலமாக, அரசாங்க விஷயங்களில் - மிகவும் அபாயகரமான அளவில் - அவன் உபயோகித்து வருகிறான். கடிதத்தைப் பறிகொடுத்தவர் அதை எப்படியாவது திரும்பப் பெறுவது அவசியம். ஆனால், இது வெளிப்படையாகச் செய்யக்கூடிய காரியம் அல்ல; ரகசியமானது. என்னிடம் இந்த விஷயத்தை ஒப்புவித்து விட்டார்கள்'' என்று கூறி முடித்தான் போலீஸ் தலைவன்.

''நீ சொல்லியபடி, அந்தக் கடிதம் இன்னும் அந்த மந்திரியின் வசமே இருக்கிறது என்பது உறுதி. ஏனென்றால், அது அவன் வசம் இருப்பதால்தான் - அவன் அதை வேறு வகையாகப் பயன்படுத்தியதால் அல்ல - அவனுக்கு இத்தகைய சக்தி இன்னும் இருந்துகொண்டிருக்கிறது. அவன் அந்தக் கடிதத்தை வேறு வகையாகப் பயன்படுத்தியிருந்தால், இந்தச் சக்தி அவனுக்குத் தொடர்ந்து இருந்து கொண்டிராது'' என்றேன்.

''நானும் அப்படியே தான் முடிவு செய்தேன். அந்த மந்திரியின் வீட்டை நன்றாய்ச் சோதிப்பதை என்னுடைய முதல் காரியமாகக் கொண்டேன். அதில் எனக்கு இருந்த சிரமம் வேறொன்

றும் இல்லை. அந்த மந்திரிக்குச் சிறிதும் தெரியாதபடி சோதனையை நடத்த வேண்டியிருந்தது தான்" என்றான் ஜி-.

"நீதான் இந்தமாதிரி சோதனைகளில் கைதேர்ந்த புலி ஆயிற்றே! பாரிஸ் நகரப் போலீஸ் படையும் இந்தமாதிரியான காரியங்களை எத்தனையோ தரம் செய்திருக்கிறதே" என்றேன்.

"ஆம்; ஆம். அதனால்தான் நான் கவலைப்படவில்லை. மந்திரியின் நடவடிக்கைகளும் எனக்கு மிகவும் சௌகரியமாகவே இருந்தன. அவன் எத்தனையோ நாள் இரவில் வீடு திரும்புவதே இல்லை. சென்ற மூன்று மாதங்களாக டி-யின் வீட்டை நான் நேரில் சோதனை போடாத இரவே கிடையாது என்று சொல்லலாம். ஆனால், எனக்கு இதுவரையில் இருந்த நல்ல பெயர் இப்பொழுது அந்தரத்தில் தொங்குகிறது. இன்னும் ஒரு ரகசியம். அவர்கள் தருவதாக வாக்களித்திருக்கும் பரிசும் மிக மிகப் பெரியது" என்றான் ஜி-.

"கடிதம் மந்திரி வசம் இருப்பது உறுதி என்கிறாய். ஆனால், அதை அவன் தன் வீட்டில் ஒளித்து வைக்காமல், வேறெங்கேயாவது ஒளித்து வைத்திருக்கலாம் அல்லவா?" என்றேன்.

அதற்குத் துபன், "அது சாத்தியம் என்று தோன்றவில்லை. ஏனென்றால், இப்பொழுதுள்ள அரசாங்க நிலைமைகளையும் டி- சம்பந்தப்பட்டுள்ள சூழ்ச்சிகளையும் கவனித்தால், அவன் அந்தக் கடிதத்தை ஏதாவது ஓர் இடத்தில் பத்திரமாக ஒளித்து வைத்திருந்தால் மட்டும் போதாது; எந்தக் கணத்தில் வேண்டுமானாலும், அதை உடனே கையாளும் படி அது அவ்வளவு அருகில் இருக்க வேண்டும்" என்றான்.

துபன் யோசனையில் ஆழ்ந்தான்.

"நீ எங்கெல்லாம் தேடினாய் என்று சற்று விவரமாய்ச் சொல்லேன்" என்றேன் நான்.

"அதற்கென்ன? சொல்கிறேன்: எங்கும் தேடினோம். ஓர் இடம் பாக்கியில்லை. இந்தமாதிரி விஷயங்களில் எனக்கு நீண்டகால அநுபவம் உண்டு. அவன் வீட்டில் ஒவ்வோர் அறையிலும், மேஜை, நாற்காலிகள் முதலிய மரச் சாமான்களைச் சோதித்தோம்; ஒவ்வொரு டிராயரையும் திறந்து பார்த்தோம். பெட்டிகளைச் சோதித்தான பிறகு, நாற்காலிகளை எடுத்துக்கொண்டோம். அவைகளின் மேலுள்ள மெத்தைகளை நீளமான மெல்லிய ஊசிகளால் குத்திப் பார்த்தோம். அந்த ஊசிகளை உங்களுக்கு முன்னமே காட்டியிருக்கிறேன் அல்லவா? பிறகு, அந்த வீட்டிலே உள்ள இடம் முழுவதையும்- ஒரு சதுர அங்குலம் பரப்புள்ள இடங்கூடப் பாக்கிவிடாமல், பூதக்கண்ணாடியால் கவனித்தோம்."

"சுவரில் ஒட்டியிருக்கிற வர்ணக் காகிதங்களை?"

"சோதித்தோம்."

"நிலவறைகளுக்குள் பார்த்தீர்களா?"

"பார்த்தோம்."

"அப்படியானால், நீங்கள் எண்ணியதுதான் தவறாயிருக்க வேண்டும். நீங்கள் நினைக்கிறபடி, அந்த வீட்டில் கடிதம் இல்லவே இல்லை" என்றேன் நான்.

"நீ சொல்லுகிறபடிதான் இப்போது நானும் சந்தேகப்படுகிறேன்" என்று என்னைப் பார்த்துச்

சொல்லிவிட்டு, பிறகு என் நண்பனைப் பார்த்து, "உனக்கு என்ன தோன்றுகிறது? இனி என்னை என்ன செய்யச் சொல்லுகிறுய்?" என்ருன் போலீஸ் தலைவன்.

"அந்த வீட்டை, இன்னும் ஒரு முறை, முழுவதும் சோதிக்க வேண்டும் என்றுதான் சொல்வேன்."

"அந்த வேலை சிறிதுகூட அவசியம் இல்லை. நான் மூச்சுவிடுகிறேனு இல்லையா என்பதைப் பற்றி எனக்குச் சந்தேகம் வந்தாலும் வரலாமே தவிர, அந்தக் கடிதம் அந்த வீட்டில் இல்லை என்பதைப்பற்றி எனக்குக் கொஞ்சங்கூடச் சந்தேகமே கிடையாது" என்ருன் ஜி-.

"என்னைக் கேட்டால், நான் இப்போது சொல்வதையேதான் மீண்டும் சொல்வேன். அந்தக் கடிதம் பார்ப்பதற்கு எப்படியிருக்கும் என்று நுட்பமாய்க் குறித்து வைத்திருக்கிருய், அல்லவா?" என்று கேட்டான் துபன்.

"ஆகா, அந்தக் குறிப்பு இதோ இருக்கிறது" என்று சொல்லிக்கொண்டே, ஒரு குறிப்புப் புத்தகத்தை எடுத்தான். அந்தக் கடிதத்தில் கண்ட விஷயங்கள் இன்னவை என்பதையும், கடிதத்தின் தோற்றம் எப்படி இருக்கும் என்பதையும், அந்தக் குறிப்பிலிருந்து படித்துக் காட்டினுன். பின்பு, கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அவன் புறப்பட்டுப் போனுன். அவனுடைய முகம் அன்று இருந்ததுபோல் வேறு என்றும் வாடியிருந்ததை நான் கண்டதில்லை.

அதற்குப் பிறகு, ஒரு மாதம் கழித்து, ஒரு நாள் சாயங்காலம் அவன் மறுபடியும் எங்களிடம் வந்தான். முன்தடவை அவன் வந்தபோது நாங்கள் என்ன காரியம் செய்துகொண் டிருந்தோமோ அதே காரியத்தைத்தான் அப்போதும் செய்துகொண் டிருந்தோம். அவனும் ஒரு சுங்கானைக் கையில் எடுத்துக்கொண்டு, ஒரு நாற்காலியில் அமர்ந்தான். எல்லோருமாகச் சிறிதுநேரம் பொதுப்படப் பேசிக்கொண் டிருந்தோம். அப்போது நான், "என்ன ஜி-, கெட்டுப்போன கடிதம் என்ன ஆயிற்று? அந்த மந்திரிக் கள்ளனை உன்னுல் குள்ளன் பாய முடியாது என்று தெரிந்துகொண்டாயா?" என்றேன்.

"நாசமாய்ப் போக என்றுதான் அவனை நான் வாழ்த்துவேன். அவனை ஒருவராலும் ஏமாற்ற முடியாது. துபன் சொன்னபடி, மறுபடியும் அந்த வீட்டை நன்ருக முழுமையும் சோதித்தேன். நான் எடுத்துக்கொண்ட சிரமம் முற்றும் வீண். அது எனக்கு முந்தியே தெரிந்தது தான்."

"அவர்கள் கொடுப்பதாக வாக்களித்திருக்கும் வெகுமதி எவ்வளவு என்று சொன்னுய்?" என்று கேட்டான் துபன்.

"ஏன்? அது மிகப் பெரிய தொகை; மிகவும் உதாரமான வெகுமதி. அது எவ்வளவு என்று குறிப்பிட்டுச் சொல்ல எனக்கு இஷ்டமில்லை. ஆனுல், இதுமட்டும் நான் உறுதியாகச் சொல்வேன். அந்தக் கடிதத்தை யாராவது என்னிடம் கொண்டுவந்து கொடுத்தால் சிறிதும் தயக்கமில்லாமல், அவர்களுக்கு ஐம்பதினுயிரம் பிராங்குக்கு என் சொந்தக் கணக்கில் செக் எழுதிக் கொடுப்பேன்."

துபன், "ஆம். நீ சொல்வது உண்மையாக இருக்கலாம். ஆனாலும் ஜி - நீ, நன்றாக முயல வில்லை என்றே நான் நினைக்கி றேன். இந்த விஷயத்தில் இன்னும் கொஞ்சம் நீ முயன்று பார்க்கலாம் என்று எனக்குத் தோன்றுகிறது. என்ன?" என்று இழுத்து இழுத் துக்கொண்டு சொன்னான்.

"எப்படி? எந்த வழியில் இன் னும் நான் முயற்சி செய்வது பாக்கி யிருக்கிறது?"

"ஏன், நீ மற்றவர்களோடு ஆலோசனை செய்யலாமே!"

போலீஸ் தலைவனுக்குச் சற்று அசடு தட்டிவிட்டது. "நான் மனப்பூர்வமாக மற்றவர்க ளுடைய ஆலோசனையைக் கேட் கத் தயாராயிருக்கிறேன். அதற் குப் பணம் கொடுக்கவும் தயாரா யிருக்கிறேன். இந்த விஷயத்தில் யார் எனக்கு ஒத்தாசை செய்வ தானாலும், அவர்களுக்கு உண்மை யாகவே ஐம்பதினாயிரம் பிராங்கு கொடுக்கத் தயாராயிருக்கிறேன்" என்றான்.

"அப்படியானால், நீ சொன்ன தொகைக்கு ஒரு செக் எழுது. நீ செக் எழுதிக் கையெழுத்துப் போட்டவுடன், அந்தக் கடி தத்தை உன்னிடம் கொடுத்து விடுகிறேன்" என்றான்.

நான் பிரமித்துப் போய் விட்டேன். போலீஸ் தலைவன் சற்று நேரம் பேச்சு மூச்சு இல்லா மல், சிலைபோல் ஆகிவிட்டான். பிறகு வரவரச் சற்று அமைதி அடைந்தான். ஒரு பேனாவைச் சட்டென்று எடுத்தான். மறுபடி யும் தயங்கினான். மிரள மிரளப் பல முறை விழித்தான். கடைசியாக ஐம்பதினாயிரம் பிராங்குக்கு ஒரு செக் எழுதி முடித்து, அதில் கையொப்பம் இட்டான். மேஜைக்கு அப்பால் உட்கார்ந் திருந்த என் நண்பனிடம் அதை நீட்டினான்.

அவன் அதை வாங்கி, வெகு ஜாக்கிரதையாக மடித்துவைத்துக் கொண்டான். பிறகு, பூட்டியி ருந்த ஒரு டிராயரைத் திறந்து அதிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து, போலீஸ் தலைவனிடம் கொடுத்தான். அவன் அதை மிக வும் ஆவலோடு வாங்கினான். அப் போது அவன் அடைந்த மகிழ்ச்சி அளவு கடந்தது. அது வரம்பை மீறியதால், அவனை வருத்தியது என்றே சொல்லலாம். அவ னுடைய கைகள் நடுங்கின. ஆடும் கைகளில் அந்தக் கடிதத்தை வாங்கிப் பிரித்தான். அவசர அவசரமாகப் படித்துப் பார்த் தான். உடனே மிகவும் பரபரப் பாக எழுந்து, தட்டித் தடுமாறிக் கொண்டு கதவண்டை சென்றான். கதவைத் திறந்துகொண்டு, எங் களிடம் விடைகூடப் பெற்றுக் கொள்ளாமல் வெளியே ஓடினான். துபன் 'செக்கை எழுதிக் கொடு' என்று சொன்னதுமுதல் அவன் வெளியே போகும்வரை அவன் வாய்திறந்து ஒரு சொல்கூடப் பேசவில்லை.

அவன் போன பிறகு, என் நண் பன் சில விஷயங்களை எனக்கு விளக்கிச் சொன்னான்:

"பாரிஸ் போலீஸ் படை வீரர் கள் ஓரளவுவரையில் மிகவும் திறமையுள்ளவர்கள்; சந்தேக மில்லை. அவர்கள் விடாமுயற்சி உள்ளவர்கள்; சாமர்த்தியமுள்ள வர்கள். ஆதலால் அவர்கள் தேடிய இடத்தில் அந்தக் கடிதம் இருந்திருந்தால், அவர்கள் சந்

தேகமில்லாமல், அதைக் கண்டு பிடித்திருப்பார்கள்.''

அவன் சொல்லியதைக் கேட்டதும் முதலில் எனக்குச் சிரிப்பு வந்தது. நான் சிரித்தேன். ஆனால் அவன் பேச்சு வேடிக்கைப் பேச்சாகத் தோன்றவில்லை. உண்மையாகவும் ஆழ்ந்த கருத்தோடும் பேசிய பேச்சுப் போலவே என் புத்தியில் பட்டது.

அவன் மேற்கொண்டு சொன்னான்: ''அவர்கள் பின்பற்றிய முறைகளும் நல்ல முறைகள் தான். ஆனால், இந்த மாதிரியான சந்தர்ப்பத்துக்கு அவை பொருத்தம் இல்லை என்பதுதான் அவற்றிலுள்ள குறை. இப்பேர்ப்பட்ட சாமர்த்தியசாலிக்கு ஏற்ற முறைகள் அல்லவே அல்ல. அதனால் தான் போலீஸ் தலைவன் செய்த முயற்சி பயனற்றதாக முடிந்தது. போலீஸ் தலைவனும் அவனுடைய ஆட்களும் அடிக்கடி தவறுவதற்குக் காரணம் தங்கள் எதிரியின் திறமையைச் சரிவர அளந்துகொள்ள முயலாததே. தங்களுடைய சொந்த புத்திக்கு எது சாமர்த்தியமான வழி என்று தோன்றுகிறதோ அந்த வழியிலேயே அவர்கள் செல்கிறார்கள். ஏதாவது ஒரு சாமானை எவனாவது ஒருவன் ஒளித்து வைக்க விரும்பினால் அந்தப் பொருளை ஒதுக்குப்புறமாய்க் கண்ணுக்குத் தென்படாது ஏதாவது ஓர் இடத்தில் தான் ஒளித்துவைக்க அவன் முயலுவது வழக்கம். அப்படித் தான் அவன் செய்வான் என்று நினைப்பது இயல்பு. ஒளித்து வைத்த கடிதம் போலீஸ் தலைவன் தேடிய பிரதேசத்தில் இருந்திருந்தால் திட்டமாக அவன் அதைக் கண்டு பிடித்திருப்பான் என்பது நிச்சயம். துளிக்கூடச் சந்தேகமில்லை.

''ஆனால் இந்தத் திருடன் அரசசபையிலுள்ள அந்தரங்க அமைச்சர்களில் ஒருவன்; மிகவும் துணிகரமான - அஞ்சா நெஞ்சு படைத்த - விஷமக்காரன்; ஆகையால் போலீஸ்காரர்கள் சாதாரணமாய் என்ன செய்வது வழக்கம் என்பதை இவன் நன்றாக அறிந்திருப்பான் என்று நான் தீர்மானித்தேன். நடந்த காரியங்களின் முடிவைப் பார்த்தால், இவன் மிகவும் முன் எச்சரிக்கையாக இருந்திருக்கிறான் என்பது தெளிவு. தன் வீட்டை ரகசியமாகச் சோதனை போடுவார்கள் என்பதும் இவனுக்குத் தெரியும். இவன் அடிக்கடி வீட்டை விட்டு வெளியே போய்க்கொண்டிருந்தான் என்று போலீஸ் தலைவன் சொன்னான் அல்லவா? 'இது எனக்கு மிகவும் ஒத்தாசையாக இருக்கிறது. நான் திருட்டுச் சாமானைச் சீக்கிரம் கண்டுபிடித்துவிடுவேன்' என்று போலீஸ் தலைவன் ஜம்பமாய்ப் பேசியது நினைவிருக்கிறதா? அப்படித் திருடன் வெளியே போனதெல்லாம் வஞ்சகமான எண்ணத்தோடுதான். அது எதற்கு என்றால், போலீஸ்காரர்கள் சௌகரியமாக வீடு முழுவதையும் ஒருமுறை நன்றாகத் தேடிவிட்டார்களானால், அந்தக் கடிதம் அங்கே இல்லை என்ற முடிவுக்கு வந்துவிடுவார்கள் என்பது இவனுக்குத் தெரியும். ஜி - யும் அப்படித் தேடியபிறகு, அந்த முடிவுக்கே வந்துவிட்டான். எனக்கு மற்றொன்றும் தோன்றிற்று. அதாவது, இப்பொழுது உனக்கு விவரமாய்ச் சொன்னேனே, போலீஸ்காரர்கள் திருட்டுச்

சாமான்களைத் தேடும்போது இன்ன இன்ன கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு இன்ன இன்ன வகையாய்த் தேடுகிறார்கள் என்று. அப்படி எனக்குத் தோன்றியது போலவே ஜி-க்கும் கட்டாயம் தோன்றியிருக்கும். ஆதலால் சாதாரணமாய் மற்றவர்கள் ஒளித்து வைக்கும் மூலைகளில் அதை ஒளித்து வைக்கக் கூடாது என்று திருடன் உணர்ந்திருப்பான். தான் ஒளித்து வைத்திருக்கும் இடம் எவ்வளவு மறைவிடமானாலும் போலீஸ்காரர்களுடைய கண்ணுக்கும், குத்தூசிக்கும், பூதக்கண்ணாடிக்கும், துரப்பணங்களுக்கும் தட்டுப்படாமல் இருக்கமுடியாது என்பதை அறிய இயலாத மூடன் அல்லவே, இவன். அதனால், சாமானியமான வழியையே கையாள வேண்டும் என்பதை இவன் உணர்ந்திருப்பான். இவனைப்பற்றி நான் கொண்ட முடிவு இதுதான்: 'அவ்வளவு சாமானியமாய்க் கண்ணுக்கு எதிரே இருப்பதால்தான் அது உங்களுக்கு இவ்வளவு தொந்தரவு கொடுக்கிறது' என்று முதல்தரம் சந்தித்தபோது போலீஸ் தலைவனிடம் நான் சொன்னேனே, உனக்கு நினைவிருக்கிறதா? அப்போது மூச்சே போய்விடுமோ என்று நாம் பயப்படும்படி அவன் சிரித்தானே, ஞாபகம் இருக்கிறதா?'' என்றான் துபன்.

"ஆம், அவன் அப்படிச் சிரித்தது எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. எங்கே அவனுக்கு வலிப்பு வந்துவிடுமோ என்றுகூட நான் பயந்தேன்'' என்றேன்.

"பூகோளப் படத்தை வைத்து விளையாடும் புதிர் விளையாட்டு ஒன்று விளையாடியிருக்கிறாயா? விளையாடும் ஒருவன் மற்றொருவனைப் பார்த்து, 'நான் ஒரு பெயரைச் சொல்லப்போகிறேன். அதைப் படத்தில் காட்டு' என்று ஒரு பெயரைச் சொல்லுவான். அந்தப் பெயர் கசாமொசா என்று சிக்கலாயும் கோணல்மாணலாயும் படத்தில் எழுதியிருக்கும் பெயராயிருக்கும். அது ஒரு நகரத்தின் பெயராயிருக்கலாம்; ஒரு நதியின் பெயராயிருக்கலாம்; அல்லது ஒரு ராஜ்யத்தின் பெயராயிருக்கலாம். அந்த விளையாட்டைப் புதிதாக விளையாடுபவன் என்ன செய்வானென்றால், எறும்புபோல் பொடிப் பொடியாய் எழுதியிருக்கும் பெயர்களைச் சொல்லுவான். அதை எதிரி கண்டுபிடிக்க முடியாமல் விழிப்பான் என்று எண்ணுவான். எதிரி ஏமாறமாட்டான். ஆனால், அந்த விளையாட்டில் தேர்ந்த கை என்ன செய்வான் தெரியுமா? கொட்டை கொட்டையான எழுத்தில், படத்தின் ஒரு கோடியிலிருந்து மறுகோடி வரை, எழுதியிருக்கும் பெயரைக் கூறுவான். தெருவீதிகளில் அளவுக்கு மிஞ்சிப் பெரிதாக எழுதியுள்ள விலாசங்களைப் போல, இவைகளும் மிதமிஞ்சிய அளவில் புலனாவதால், இவற்றை ஒருவரும் நேரே கவனிக்க மாட்டார்கள். இதனால் ஏற்படும் கண்ணின் பார்வைக் குறைவும், நமக்கு நேர் எதிரே நமக்கு மிகத் தெளிவாய்த் தோன்றும் விஷயங்களை நம் மூளை ஏற்றுக் கொள்ளாமல் போகும் புத்திக் குறைவும் ஒரேவிதமானவைதான். இந்த உண்மைதான் நம் போலீஸ் தலைவரின் அறிவுக்கு எட்டவில்லை. உலகத்தாருடைய கண்ணுக்கு ஒரு விஷயம் தட்டுப்படாமல் இருக்க வேண்டுமானால் அதை அவர்க

ளின் கண்ணுக்கு நேராக, வைத்து விடவேண்டும். உலகம் ஒன்றைக் கவனிக்க வொட்டாமல் தடுப்ப தற்குச் சரியான உபாயம் இதுவே என்று அறிந்த அந்த மந்திரி இப் படித்தான் செய்திருப்பான் என்று போலீஸ் தலைவன் கனவிலும் நினைக்கவில்லை.

"ஆனால், துணிவுள்ளவனும், ஒன்றுக்கும் அஞ்சாதவனும், தராதரம் அறிந்து செய்யவல்ல வனுமான டி-யினுடைய சாமர்த் தியத்தை எண்ண எண்ண, அவன் அந்தப் பத்திரத்தைச் சரியானபடி பயன்படுத்த விரும்பி எப்பொழு தும் தன் கைக்கெட்டும் இடத்திலேயே அதை வைத் திருப்பான் என்னும் விஷயத்தை நினைக்க நினைக்க, போலீஸ் தலை வன் போலீஸ் முறைப்படி தேடிய இடம் ஒன்றிலும் அது அகப்பட வில்லை என்பதை உணர உணர, உலக நடவடிக்கையை அறிந்த வனும் புத்திசாலியாயும் உள்ள அந்த மந்திரி அந்தக் கடிதத்தை ஒளித்து வைப்பதற்குச் செய்யக் கூடிய அரிய தந்திரம் அதை ஒளிக்க முயலாதிருப்பதே என்பது எனக்குத் தெளிவாயிற்று.

"இப்படிப்பட்ட எண்ணங்களே என் மனத்தில் மேலும் மேலும் தோன்றின. ஆகவே, நான் என் பச்சை மூக்குக் கண்ணாடியை அணிந்துகொண்டு புறப்பட்டேன். நன்றாய் வெயில் காய்ந்துகொண் டிருந்த ஒரு நாள் காலையில், தற் செயலாய்ப் போனவன் போல், மந் திரியின் மாளிகைக்குப் போனேன். டி-வீட்டில் இருந்தான். கொட் டாவி விட்டுக்கொண்டும், சாய்வு நாற்காலியில் சோம்பேறிபோல் சாய்ந்துகொண்டும், வீண் பொழுது போக்கிக்கொண்டும், 'இவ்வுலகத் தில் உள்ளதெல்லாம் சாரம் இல்லா தது' என்று எண்ணுபவன்போல் நடித்துக்கொண்டும், வழக்கம் போல் பாசாங்கு செய்துகொண் டிருந்தான். அவனைப்போல் சுறு சுறுப்பு உள்ளவர்கள் ஒருவரும் கிடையாது என்று நான் உறுதி யாகச் சொல்லுவேன்.

"அவனுக்குச் சரியாய் நாமும் நடந்துகொள்ள வேண்டும் என்று எண்ணி, 'என் கண்கள் மிகவும் பலவீனமாகிவிட்டன; எப்பொழு தும் கண்ணாடி போட்டுக்கொள்ளும் படி ஆகிவிட்டது' என்று சொல்லி வருந்தினேன். என் கவனம் முழுவ தும் அவனோடு பேசுவதில் ஈடுபட் டிருப்பதுபோல் பாவனை செய் தேன். ஆயினும், என் மூக்குக்கண் ணாடியின் மறைவில் வெகு ஜாக்கிர தையாய், அவனுக்குத் தெரியாமல், அவன் அறையை நன்றாகத் துரு வித் தேடிக் கவனித்து வந்தேன்.

"ஒரு பெரிய மேஜையின் பக்கத் தில் அவன் உட்கார்ந்துகொண் டிருந்தான். சிற்சில கடிதங்களும், இரண்டொரு சங்கீதக் கருவி களும், நாலைந்து புத்தகங்களும் அதன்மேல் தாறுமாறாய் இறைந்து கிடந்தன. அவற்றையெல்லாம் வெகு நேரம் ஜாக்கிரதையாய்க் கூர்ந்து பார்த்தேன். பிறகு, சந் தேகத்துக்கு இடமானது ஒன்றும் அங்கே இல்லை என்று தெரிந்து கொண்டேன்.

"அந்த அறை முழுவதையும் பகுதி பகுதியாக நான் இப்படிச் சோதித்துக்கொண்டு வரும் பொழுது, கார்டு வைப்பதற்காக அட்டையால் செய்து வேலைப்பாடு செய்திருந்த பெட்டி ஒன்று கடைசியாக என் கண்ணில் பட்டது கணப்புப் போடும் அடுப் புப் புகைப் போக்கி அண்டையில்,

ஒரு பித்தளை ஆணியில் அழுக்கடைந்த நீல நாடா ஒன்றிலிருந்து அது தொங்கிக்கொண்டிருந்தது. அந்தப் பெட்டியில் மூன்று நான்கு அறைகள் இருந்தன. அவற்றுள் ஐந்தாறு கார்டுகளும் ஒரே ஒரு கடிதமும் இருந்தன. அந்தக் கடிதம் அழுக்கடைந்து கசங்கியிருந்தது. கிட்டத்தட்ட இரண்டாக நடுமத்தியில் கிழிந்து போயும் இருந்தது. அதைப் பார்த்தால், 'இது ஒன்றுக்கும் உதவாதது' என்று அதைக் கிழித்து எறிய எண்ணியது போலும், பிறகு 'இப்பொழுது கிழித்தெறியவேண்டாம்; பிறகு பார்த்துக்கொள்வோம்' என்ற எண்ணத்தை மாற்றியது போலும் தோன்றிற்று. அதில் ஒரு பெரிய கறுப்பு மூத்திரை இருந்தது. அதில் டி - யின் அடையாளம் பளிச்சென்று தெரிந்தது. சிறிய எழுத்தில் அவனுடைய மேல் விலாசம் அதில் எழுதியிருந்தது. அந்த எழுத்தும் ஒரு பெண்ணின் எழுத்தைப் போல் இருந்தது. அதைப் பார்த்தால், மிகவும் அஜாக்கிரதையாகச் சிறிதும் மதிப்பில்லாமல் பெட்டியின் மேலறையில் கிடக்கட்டும் என்று எறிந்திருப்பது போலவே தோன்றிற்று. அவ்வளவு பகிரங்கமாக எல்லாருடைய கண்ணிலும் படும்படி கிடந்தது, அந்தக் கடிதம்.

"அதைப் பார்த்தவுடனே, 'நாம் தேடிவந்த கடிதம் இதுதான்' என்று தீர்மானித்துவிட்டேன். ஆனால், போலீஸ் தலைவன் விவரமாய் வர்ணித்த கடிதத்துக்கும் இதற்கும் யானைக்கும் பானைக்கும் போல் வித்தியாசம் இருப்பது நன்ருகத் தெரிந்தது. இதிலோ முத்திரை பெரிது; கறுப்பு; மேலும் இது டி - யின் குடும்ப முத்திரை. அதிலோ முத்திரை சிறியது; சிவப்பு; எஸ். வமிசப் பிரபுக்களின் முத்திரை. இதன் மேல் விலாசமோ பொடி எழுத்தில் ஒரு பெண், மந்திரிக்கு எழுதியது. அதன் மேல் விலாசமோ பெரிய எழுத்தில் ஒரு ராஜவமிசப் பெரியோருக்கு ஒருவர் அழுத்தந் திருத்தமாக எழுதியது. அளவு ஒன்றில் மட்டுமே இரண்டும் ஒத்திருந்தன. ஆனால் வித்தியாசங்களும் மிதமிஞ்சியவையாயும் முற்றும் எதிரிடையாயும் இருந்தன. இதிலுள்ள அழுக்கும் இது கசங்கிக் கிழிந்து கிடந்த நிலையும், டி - யினுடைய ஒழுங்கான வழக்கங்களுக்குப் பொருத்தமில்லாதவை. ஆதலால், ஒன்றுக்கும் உதவாத கடிதம் என்று அனைவரும் நினைப்பதற்காகவே எடுத்துக்கொண்ட முயற்சியின் அடையாளங்கள்தான் இவை என்று எனக்குத் தோன்றிற்று.

"இவையும், யார் வந்தாலும் அவர் கண்ணில் படும்படி இது கிடந்த மிக மிகத் தெளிவான இடமும் நான் முன் கொண்டிருந்த அபிப்பிராயங்களோடு ஒத்து வந்தன. நான் ஏற்கனவே கொண்டிருந்த சந்தேகத்தை இவை யாவும் சேர்ந்து உறுதிப்படுத்தின.

"அங்கே எவ்வளவு நேரம் இருக்கலாமோ அவ்வளவு நேரமும் நான் இருந்தேன். அந்த மந்திரிக்கு ஒரு விஷயத்தில் மிகுந்த பற்று உண்டு என்பது எனக்கு முன்பே தெரியும். அவனிடம் அந்த விஷயத்தைப்பற்றி மிகவும் உற்சாகமாகப் பேசிக்கொண்டிருந்தேன். ஆனால், உண்மையில் என் கவனமெல்லாம் அந்தக் கடிதத்தின் மீது சென்றது; அதிலேயே ஆழ்ந்து கிடந்தது. அப்

படி அதைக் கவனித்து வந்த போது, அதன் வெளித்தோற்றம் எப்படியிருக்கிறது, அது பெட்டியில் எந்த நிலையில் கிடக்கிறது என்ற விவரங்களை மிக மிக ஜாக்கிரதையாய் நினைவில் பதிவு செய்துகொண்டேன். கடைசியாக, தற்செயலாக என் கண்ணில் ஒரு சிறு விஷயம் தட்டுப்பட்டது. எனக்கு அற்ப சொற்பம் இருந்த சந்தேகமும் இதனால் நீங்கிவிட்டது. அந்தக் காகிதத்தின் மடிப்போரங்கள் அளவுக்கு மிஞ்சிச் சுரசுரப்பாகவும் வெடித்தும் இருந்தன. கனத்த காகிதத்தை ஒரு முறை மடக்கி, நன்ருக அழுத்தி மடித்த பின்பு, மறுமுறை அதற்கு எதிர்ப்புறமாக மீண்டும் அதே மடிப்பில் மடித்தால் எப்படிச் சுரசுரப்புண்டாகுமோ அப்படியுள்ள சுரசுரப்பாக அது தோன்றிற்று. அது ஒன்றே எனக்குப் போதிய சான்ருயிற்று. அந்தக் கடித உறையைத் திருப்பி, அதன் உட்புறத்தை வெளிப்புறமாக்கி, அதில் வேருெரு விலாசத்தை எழுதி, வேறு முத்திரையும் இட்டிருந்தது என்பது எனக்குத் தெளிவாகிவிட்டது. அந்த மந்திரியின் மேஜைமேல் என்னுடைய தங்கப் பொடிடப்பியை வைத்தேன். பேச்சு மறதியில் அதை அங்கேயே விட்டதுபோல் விட்டுவிட்டு, அவனிடம் விடைபெற்றுக்கொண்டு வெளியேறினேன்.

"மறுநாள் காலையில் என் பொடிடப்பியை எடுத்துப் போக வந்தேன் என்ற சாக்குச் சொல்லிக்கொண்டு, மீண்டும் அங்கே போனேன். முந்திய நாள் பேசிய விஷயங்களைப்பற்றி அன்றும் இருவரும் சிறிது நேரம் பேசினேம். அப்போது அந்த மாளிகையின் ஜன்னல் புறத்துக்கு வெளியில், அதற்கு நேர் கீழாக, ஏதோ துப்பாக்கி சுட்ட ஓசை ஒன்று 'டபார்' என்று உரக்கக் கேட்டது. உடனே யாரோ ஒருவர் பயங்கரமாய் அலறி அழும் குரலும், பயந்த ஜனக் கூட்டத்தின் அரவமும் காதில் பட்டன. டி - ஜன்னல் புறமாக ஓடினன். ஜன்னல் கதவைத் திறந்து, வெளியே எட்டிப் பார்த்தான். அதே சமயத்தில் நான் அந்த அட்டைப் பெட்டிக்கு அருகில் சென்றேன். அந்தக் கடிதத்தை எடுத்தேன். என் சட்டைப்பையில் போட்டுக்கொண்டேன். நான் வெகு ஜாக்கிரதையாக வீட்டில் தயார் செய்திருந்த ஒரு கடிதத்தை அதற்குப் பதிலாக அங்கே வைத்தேன். வெளித் தோற்றத்தில் அதுவும், மந்திரியிடமிருந்த கடிதமும் முற்றும் ஒத்திருந்தன. அதில் டி - யின் முத்திரைகூட இருந்தது. ரொட்டித்துண்டு ஒன்றைக் கொண்டு, அந்த முத்திரையை நானே தயார் செய்தேன். தெருவில் ஏற்பட்ட குழப்பத்துக்குக் காரணம் துப்பாக்கி ஏந்திய ஒருவனின் பைத்தியக்காரச் செயல். பெண்களும் குழந்தைகளும் கூடியிருந்த ஒரு கூட்டத்தைப் பார்த்து அவன் துப்பாக்கியைச் சுட்டுவிட்டான். ஆனல் நல்லவேளையாக அதில் ரவை ஒன்றும் இல்லை என்பது தெரியவந்தது. அதனல், அவன் பைத்தியக்காரனே அல்லது குடிகாரனே என்று அவனை விட்டுவிட்டார்கள். அவன் போனதும், டி-யும் நானும் ஜன்னல் புறமிருந்து திரும்பி உள்ளே வந்தோம். இதற்கு முன்பு, என் காரியம் முடிந்தவுடன் நானும் ஜன்னலண்டை போய் நின்று எட்

டிப் பார்த்தேன் என்று சொல்ல வேண்டியதில்லை. பின்பு, நான் மந்திரியிடம் விரைவில் விடை பெற்றுக்கொண்டு திரும்பினேன். பைத்தியக்காரனைப்போல் பாசாங்கு செய்தவன், நான் கூலிக்கு அமர்த்திய ஒருவன்'' என்றான் துபன்.

''அந்தக் கடிதத்தை எடுத்துக் கொண்ட பிறகு, அதற்குப் பதிலாக, அதைப் போன்ற மற்றொரு கடிதத்தை வைக்க வேண்டிய காரணம் என்ன? நீ ஏன் அப்படிச் செய்தாய்? நீ முதல் தடவை அங்கே போனபோதே, அதைப் பகிரங்கமாய் எடுத்துக் கொண்டு புறப்பட்டிருக்கலாமே?'' என்று கேள்விமேல் கேள்வியாக நான் கேட்டேன்.

அதற்குத் துபன் சொன்னான்: ''டி - மிகவும் துணிவுள்ளவன். சற்றும் அச்சம் இல்லாத வீரன். மேலும், இவனுடைய மாளிகையில் இவனிடம் விசுவாசமுள்ள வேலையாட்கள் பலர் இருக்கிறார்கள். நீ சொல்லியபடி ஓர் அடாத செயலை நான் செய்யத் துணிந்திருந்தால், நான் உயிரோடு தப்பி வந்திருப்பேன் என்று சொல்வதற்கில்லை. பாரிஸ் நகரத்து மகா ஜனங்கள் அதன் பின்பு என் பெயரையே கேட்க முடியாமல் போயிருக்கும். மேலும், எனக்கு மற்றோர் எண்ணமும் உண்டு. அரசாங்க விஷயங்களில் என் கொள்கைகள் என்ன என்பது உனக்குத் தெரியும். இந்த விஷயத்தில், இதில் சம்பந்தப்பட்ட சீமாட்டியின் கட்சியைச் சேர்ந்த ஓர் ஆளாகவே நான் நடந்துகொண்டேன். பதினெட்டு மாத காலமாக அவள் இந்த மந்திரியின் கையில் அகப்பட்டுக் கொண்டிருந்தாள். இப்பொழுது இவன் அவள் கையில் அகப்பட்டுக் கொண்டான். அந்தக் கடிதம் தன்னிடம் இல்லை என்பது இன்னும் இவனுக்குத் தெரியாது. ஆகையால், இவன் முன்னே அது தன் கையிலிருந்தகாலத்தில் எப்படி நடந்து வந்தானோ, அப்படியே தன் இஷ்டம் போலெல்லாம், 'அதைச் செய்', 'இதைக் கொடு' என்று அவளைத் துன்புறுத்திக்கொண்டிருப்பான். அப்படி இவன் செய்துவந்தால், இவனுடைய அரசாங்கப் பதவி அழிந்து போவது திண்ணம். இவன் அந்தப் பதவியை விட்டு நீங்கும்போது, நீங்கும் வேகம் அதிகமா, அல்லது அதனால் உண்டாகும் அவமானம் அதிகமா என்று சொல்ல முடியாமல் இருக்கும். இவன்மேல் எனக்குச் சிறிதுகூட இரக்கம் இல்லை. இவன் ஒரு மானுஷ-ராட்சசன்; அறிவிற் சிறந்த கொடியோன்.

''ஆனால் இத்தனைக்குப் பிறகு, எனக்கு ஒன்றே ஒன்று தெரிந்து கொள்ள ஆசை. அது என்ன தெரியுமா? போலீஸ் தலைவன் 'ஒரு பெரியவர்' என்று குறிப்பிட்டானே; அந்தச் சமாட்டி, டி - கேட்பதற்கு இணங்காமல் அவனை எதிர்க்கும் காலத்தில், அவன் அந்த அட்டைப் பெட்டியருகே போய் நான் தயார் செய்த கடிதத்தைப் பிரித்துப் பார்க்கும்போது, அவன் மனத்தில் என்ன எண்ணம் உண்டாகும் என்பதுதான்.''

''ஏன்? நீ அதில் ஏதாவது எழுதி வைத்திருக்கிறாயா?''

''வைக்காமல் விடுவேனா? கடிதத்தின் உட்புறத்தில் ஒன்றும் எழுதாமல், அதைக் காலியாக விட எனக்கு மனம் வரவில்லை. அப்படி விட்டால், அது

அவனை அவமரியாதை செய்வதாகும். வியன்னு நகரத்தில் ஒரு முறை டி - எனக்கு ஒரு கெடுதி செய்தான். அப்பொழுது நான் சிரித்துக்கொண்டே, 'இந்த நன்றியை நான் ஒரு நாளும் மறக்க மாட்டேன்' என்று சொல்லியிருந்தேன். தன்னை ஏமாற்றியவன் யார் என்று தெரிந்துகொள்ள அவனுக்கும் சிறிது ஆவல் இருக்கும் அல்லவா? ஆதலால், அவனுக்கு ஏதாவதோர் அடையாளம் வைக்காவிட்டால், அது நன்ருயிராது என்று எண்ணினேன். என் கையெழுத்து அவனுக்கு நன்ருய்த் தெரியும். அந்தக் காலிப் பக்கத்தில் நட்ட நடுவில், க்ரேபியோன் இயற்றிய அத்ரே என்னும் நூலிலிருந்து பொருத்தமான இந்த வாக்கியங்களை எழுதிவைத்தேன்: 'ஆபத்தைப் பொருட்படுத்தாமல் இவ்வளவு துணிகரமான தீரச் செயலைச் செய்தவன் யாராயிருக்கலாம்? அத்ரே செய்திருக்கலாம். அவன் செய்யாவிட்டால், இதைச் செய்யக்கூடியவன் தியெஸ்தெயைத் தவிர வேறு எவன் இருக்கிருன்?' "

## யார் இடையூறு?

தானே தனக்கு இடையூருக நிற்கும் மனிதனுக்குப் பிறரெல்லாம் தனக்கு இடையூருக நிற்பதாகத் தோன்றும்.

—ஹென்ரி தோரோ

## குஸ்திக் காட்சி

அமெரிக்காவில் டெலிவிஷன் மிகப் பரவிவிட்டது. ஆனல், அதில் மட்டமான குஸ்திக் காட்சி பார்ப்பதுதான் அநேகருக்குப் பிரியம். இது சம்பந்தமாக 'ஜோயீ ஆடம்ஸ் ஜோக் புக்' என்பதில் இந்தத் துணுக்கு இருக்கிறது: "என் மாமாவிடம் டெலிவிஷன் ஸெட் இல்லை. அதனல் வீட்டுச் சுவரில் ஒரு தொளை போட்டார். அதன் மூலம் இரவு தோறும் அடுத்த வீட்டுக் கூடத்தில் குஸ்திக் காட்சி பார்த்து வந்தார். கடைசியில் ஒரு நாள் அடுத்த வீட்டாரிடமும் டெலிவிஷன் ஸெட் இல்லை என்று தெரிந்த பிறகுதான் இந்த வேலையை நிறுத்தினர்" என்று ஜாக் கார்ட்டர் சொல்கிருர்.

## செயல் நயம்

மெல்ல மெல்ல நடப்பவன் முள்மேலே காலை வைத்தாலும், அதிகமாய் வலிக்காது.

—ஃபிலிப்பைன் பழமொழி

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS-4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

# ஆட்சியும் மொழியும்

"ஒரு நாட்டை நீங்கள் அரசாளவேண்டி வந்தால், முதல் காரியமாக என்ன செய்வீர்கள்?" என்று, கன்ஃப்யூஷியஸ் என்ற சீன ஞானியை ஒரு சமயம் யாரோ கேட்டார்.

"முதல் முதலாக, நிச்சயமாகப் பாஷையைத்தான் சீர்திருத்துவேன்" என்று பதிலளித்தார் ஞானி.

இந்தப் பதிலைக் கேட்டவர்கள் ஆச்சரியம் அடைந்தார்கள். "இதற்கும் ராஜ்யம் ஆளுவதற்கும் என்ன சம்பந்தம்? ஒரு சம்பந்தமும் இல்லையே. ராஜ்யம் ஆளப் பாஷையை எதற்காகச் சீர்திருத்த வேண்டும்?" என்று அவர்கள் கேட்டார்கள்.

ஞானி சொன்ன பதில் இதுதான்: "பாஷை சரியானபடி இல்லாவிட்டால், நினைத்ததைச் சொல்ல முடியாது; நினைத்ததைச் சொல்லாவிட்டால், செய்ய வேண்டியதைச் செய்யமாட்டார்கள்; செய்யவேண்டியதைச் செய்யாவிட்டால், ஒழுக்கமும் கலைகளும் சீர் குலையும்; ஒழுக்கமும் கலைகளும் நலிந்தால், நீதி வழுவிப் போய்விடும்; நீதி வழுவினால், ஜனங்கள் திக்கற்றவர்களாய்க் குழம்பித் தவிப்பார்கள். ஆகவே, பாஷையை அவரவருக்குத் தோன்றியபடி ஆள விடக்கூடாது. மற்ற எதையும்விட, பாஷையைச் சீர்திருத்துவதுதான் மிகவும் முக்கியமாகும்."

—'டைம்ஸ் லிட்டரரி ஸப்ளிமெண்ட்'

August '54 Regd. No. M. 4975

# மஞ்சரி

ஜய - ஆவணி


ஊரும் உலகமும் .. .. .. .. .. .. .. .. .. 1
'பிஹு' பண்டிகை .. .. .. .. இந்தியன் ரெவ்யூ 3
ஆசியாவின் மதம் .. .. .. .. .. .. ஜஞ 7
என்னைக் கேளுங்கள் .. காப்டன் என். சேஷாத்திரிநாதன் 11
பாம்பை வளர்த்தவள் .. .. .. .. .. .. .. .. 14
பூருவின் தியாகம் .. .. .. .. .. .. .. .. 20
குடை எப்படிச் செய்கிறார்கள்? .. .. .. .. உதயம் 23
ஜயதீர்த்தர் .. .. .. .. தேவஸ்தானப் பத்திரிகை 27
தீவிலே திருக்கோவில் .. .. .. .. சுதேசமித்திரன் 30
எல்லாரும் வைத்தியரே .. .. .. .. தினமணி கதிர் 33
வீடே தொழிற்சாலை .. .. .. .. காமன்வெல்த் டுடே 34
ஓநாய்ப் பையன் .. .. .. .. .. ஃப்ரீ இந்தியா 37
அஜந்தா .. .. .. ஸெண்ட்ரல் ரெயில்வே மகஸீன் 44
பிராணிகள் சிந்திக்குமா? .. .. .. .. .. .. .. .. 50
நெல்லிக் கனி .. .. .. .. .. .. சௌபாக்கியம் 54
ஐந்து உபாயங்கள் .. .. .. போண்ட்ஸ் மகஸீன் 57
விக்கிரக வார்ப்பு .. .. .. .. .. .. ஸ்ரீலங்கா 60
பிரேக் (படம்) .. .. .. .. .. .. சங்கர்ஸ் வீக்லி 66
இந்தியத் தீக்குச்சி .. .. .. .. .. .. கல்கி 67
கொரியாக்காரன் தொப்பி .. .. .. .. .. டைம் 71
களவு போன கடிதம் (கதை) .. .. எட்கர் அல்லன் போ 75
ஆட்சியும் மொழியும் .. .. .. .. .. (3-ஆம் அட்டை)